# மெய்யொளி

யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்
இளவாலை




வெளியீடு : 22.11.2018

# மெய்யொளி
# 2018

வெளியீடு:

**யா / இளவாலை மெய்கண்டான்**
**மகாவித்தியாலயம்**

# நூல் விபரம்

நூலின் பெயர்: மெய்யொளி

இதழாசிரியர்: திரு.க.சிவராசா

முகவரி: யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
இளவாலை வடக்கு, இளவாலை.

பக்கங்கள்: 121

தாள் அளவு: B5, 70g

பிரதிகள்: 150

அச்சுப்பதிப்பு: ஜே. எஸ். பிறிண்டேர்ஸ்
பண்டத்தரிப்பு. 021 205 2000

# படையல்



**ஊருணியாக இளவாலையில் ஓர் கல்விச்சாலை என்னும் கருமத்தை வாழ்வுரச் செய்த**

**வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களுக்கும்,**

**அப்பணிக்காக மாங்கல்ய தானம் வழங்கிய அவர் தம் பாரியார் அவர்களுக்கும்,**
**இவர்களது கனவை நனவாக்க உழைத்த அதிபர்கள்,ஆசிரியர்கள், பழைய மாணவர்களின் பாதார விந்தங்களுக்கு இந்நூலைப்**

## படையலாக்கின்றோம்

**- மலர்க்குழு**

# வித்தியாலய கீதம்

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

**வாழிய மெய்கண்டான் மகா வித்தியாலயம்**
**நீடிசை யோடு பல்லூழி**

**ஏழூர் இராசரத்தினமா மகிபன்**
**இளவா லைக்கருள் நிதியம்**
**வாழக் கல்மின் எனும்பேர் இலட்சிய**
**வாசக மாண்பொருள் தந்தே**

**தாமரை ஏடு தீபம் நல் இடபம்**
**தாங்கிய இலச்சினை யாலே**
**தண்ணளி ஞானம் ஒளியொடு தருமம்**
**தரணியில் நாம் பெற நின்றே**

**கல்வியும் கலையும் ஒழுக்கமும் பெருக**
**காண்பெரும் புகழெமக் காக்கி**
**வாழ்க... வாழ்க... வாழ்க...**
**மாநிலம் போற்றிட வாழ்க**

பாடல் ஆக்கம்:
**கலாபூசணம் சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை**

## மெய்யொளிக் கீற்றுக்கள்...


| | |
|---|---|
| 1. படையல் | 03 |
| 2. வித்தியாலகீதம் | 04 |
| 3. மகுடவாசகம் | 07 |
| 4. மலர்க்குழு | 08 |
| 5. மலராசிரியரின் உள்ளத்திலிருந்து | 09 |
| 6. பாடசாலை தொடர்பான.... | 10 |
| 7. ஆசிச்செய்திகளும் வாழ்த்துச்செய்திகளும் | 11-16 |
| 8. அதிபர் அறிக்கை | 17 |
| 9. தொற்றா நோய்த் தன்மைகளைத் தவிர்ப்போம் | 34 |
| 10. அன்பு | 37 |
| 11. யாரோடு நோகேன் | 38 |
| 12. அம்மா | 39 |
| 13. நீர் வெறுப்பு நோய் | 40 |
| 14. ஆசானே போற்றி போற்றி | 41 |
| 15. பூவே | 42 |
| 16. அன்னை | 43 |
| 17. கால மாற்றம் | 44 |
| 18. முதியோர் | 45 |
| 19. திசைகாட்டிகள் | 46 |
| 20. முதியோரைக் கனம் பண்ணுதல் | 47 |
| 21. இலங்கையின் முருகைக்கற்பாறை | 49 |
| 22. உடற்கல்வி | 50 |
| 23. பறக்கும் மீன்கள் | 51 |
| 24. தொற்றாத்தன்மை நோய்களைத் தடுப்பதில்... | 52 |
| 25. விடுகதைகள் | 54 |
| 26. குருவி கொடுத்த விதை | 55 |
| 27. கிளி | 56 |
| 28. பழைய கலையம்சங்களும் மன்னர்களும் | 56 |
| 29. நினைவில் வைத்திருக்க வேண்டியவை | 57 |
| 30. அகரவரிசையில் பழமொழிகள் | 58 |
| 31. எனது அப்பா | 58 |
| 32. என் அம்மா | 59 |

| | |
|---|---|
| 33. சிரிக்க வைக்கும் சிரிப்பொலிகள் | 59 |
| 34. பிரதான வீதிகளின் பெயர்கள் | 60 |
| 35. வினோத உயிரினங்கள் | 61 |
| 36. சர்வதேசக் குறியீடுகள் | 61 |
| 37. தமிழிலும் சிங்களத்திலும் ஒத்து உச்சரிக்கும் சொற்கள் | 62 |
| 38. எருதும் கழுதையும் | 62 |
| 39. எனது பாடசாலை | 63 |
| 40. உலகியல் விடயங்கள் | 63 |
| 41. சூழல் மாசடைதல் | 64 |
| 42. A story The elephant and friends | 64 |
| 43. Mother Theresa | 65 |
| 44. மெய்கண்டான் நங்கையே நீ... | 66 |
| 45. பாடசாலையின் வினைத்திறனான செயற்பாட்டிற்கும்... | 68 |
| 46. கட்டிளமைப்பருவ மாணவர்களும் கற்றலும் | 74 |
| 47. வாழ்வியலில் இந்து சமயத்தின் வகிபாகம் | 76 |
| 48. அன்பு | 79 |
| 49. நிலை பேண் அபிவிருத்தி எண்ணக்கருவும் அதன்... | 80 |
| 50. வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் மாணவரின்... | 86 |
| 51. படித்ததில் பிடித்த வாழ்வைப் பொன்னாக்கும் வைரவரிகள் | 89 |
| 52. ஆசிரியை மாணவனுக்கு எழுதிய கடிதம் | 91 |
| 53. மன்னர் நெஞ்சில் பாயாதோ | 94 |
| 54. ஆரம்பக்கல்வி கற்றல் கற்பித்தலில் கணித முன்... | 96 |
| 55. மாணக்கரின் வகைகள் | 97 |
| 56. Microwave சமையல் | 99 |
| 57. மீண்டெழுவோம் | 100 |
| 58. டெங்குக்காய்ச்சல் | 102 |
| 59. மின்சாரத்தில் சிக்கனம் பேணுவோம் | 105 |
| 60. ஓ! அன்பான மாணவர்களே பெற்றோர்களே... | 107 |
| 61. ஆசிரியர் விபரம் | 114 |
| 62. பரிசுப்பட்டியல் | 115 |
| 63. ஞாபகார்த்தப் பரிசில்கள் -2018 | 121 |
| 64. பரிசளிப்பு விழா நிதி அன்பளிப்பு | 122 |

# மகுட வாக்கியம்

**வாழக்கல்மின்**

(Learn to Live)

# தூர நோக்கு

(Vision)

**சமநிலை ஆளுமையுள்ள நிறைவான பிரஜைகளை உருவாக்கல்.**

# பணிக்கூற்று

(Mission Statement)

**வளரும் உலகின் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய சமநிலை ஆளுமையுள்ள கல்வி, கலை, பண்பாடு, ஒழுக்கம், நிறைந்த நற்பிரஜைகளை உருவாக்கல்.**

**-2018-**

# மலர்க்குழு

**தலைவர்:** **திரு.இ.கணேசானந்தன்** S.L.P.S II
**(அதிபர்)**

**செயலாளர்:** **திரு. செ.அகிலன்**
**(பிரதிஅதிபர்)**

**இதழாசிரியர்:** **திரு. க.சிவராசா**

**இணையாசிரியர்:** **திரு. இரா.இதயராஸ்**

**செயற்குழு உறுப்பினர்கள் :-**

**திரு. ஜே. லூ. மரியதாசர்**
**திரு. பா. எ. சுஜீவன்**
**திருமதி க. பத்மராஜா**
**செல்வி கௌ. சிவகுரு**
**திரு. இ. ரவீஸ்வரன்**

# எங்கள் அதிபர்




திரு. இ. கணேசானந்தன் (SLPS-II)

## நிர்வாகத் தூண்கள்



**திரு. செ. அகிலன் (பிரதி அதிபர்)**



**திரு. ம. சிவமோகன்**
**(பகுதித்தலைவர், இடைநிலை)**



**திரு. இ. இதயராஸ்**
**(பகுதித்தலைவர், ஆரம்பம்)**



**திரு. வி. நற்குணசிங்கம்**
**(பகுதித்தலைவர், உயர்தரம்)**

## விளைதிறன் ஊட்டும் விழுதுகள்



கல்விசாரா ஊழியர்களுடன்...



அபிவிருத்திச்சங்கத்தினருடன்...



பழைய மாணவர் சங்கத்தினருடன்...

# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து...

வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் உயர் கொடையாக மிளிரும் மெய்கண்டான் அன்னையின் வரலாற்று வளர்ச்சிப்போக்குகளின் குறிகாட்டியாக வருடாந்தம் ஒளி பரப்பிய மெய்யொளி சஞ்சிகையானது எமது பாடசாலை நிர்வாகக் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக ஈராண்டுச் சஞ்சிகையாக மலர்ந்துள்ளது.

கிராமிய பண்பாட்டுச் சூழமைவில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கிட்டாதிருந்த இலக்கிய ஆதரவும் அங்கீகாரமும் மெய்யொளியின் மூலம் கிட்டியுள்ளது. அவர்களது படைப்பாக்கச் சிந்தனைகளையும் ஆளுமைகளையும் இச்சஞ்சிகை வெளிக்கொணர்கின்றது. அத்துடன் ஏனையவர்களிடம் இத்தகைய எழுத்து முயற்சிகள் தொடர்பான ஆர்வத்தைத் தூண்டுகிறது. அதேவேளை எமது மாணவர்களின் சாதனைகளைக் கௌரவித்து ஆவணப்படுத்தும் காப்பேடாகவும் கனம் கொள்கின்றது.

மெய்யொளியின் உதயத்திற்காய் ஊக்கமும் ஆக்கமும் தந்து வழிநடத்தும் அதிபருக்கு நன்றிகள். வழமைபோலவே இவ்வாண்டிலும் மெய்யொளியில் எம் மாணவர் உரம் பெற்றுயர பலம் சேர்த்துக் கொண்டிருக்கும் திரு.சி.கௌரிபாலன் அவர்கள் என்றென்றும் நன்றிக்குரியவர்.

ஆசிச்செய்திகளையும் வாழ்த்துக்களையும் வழங்கிய ஆன்றோருக்கும் நன்றிகள். நன்மலராக இம்மலர் மலர்ந்து ஒளிபரப்ப அல்லும் பகலும் அயராதுழைத்த மலர்க்குழுவினருக்கும் ஆசிரியப்பெருந்தகைகட்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் நன்றிகள். ஆக்கங்களை வழங்கி மலரின் உள்ளீட்டை உயர்த்திய படைப்பாளிகளுக்கும் உளமார்ந்த நன்றிகள். குறுகியகாலத்தில் உயரிய தரத்துடன் சஞ்சிகை உருப்பெற உயிரூட்டிய பண்டத்தரிப்பு ஜே.எஸ் அச்சகத்தாருக்கும் நன்றிகள்.

மெய்கண்டானின் கனவாய் மலர்ந்து ஒளிபரப்பும் இம்மெய்யொளியை உவந்தேற்று பயன்கொள்ள வேண்டி நடராஜ பெருமானின் மலர்ப்பாதம் பணிகின்றோம்.

**'தூயவை துணிந்த போது பழி வந்து தொடர்வதில்லை'**

**திரு. க. சிவராசா**

# பாடசாலை தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

| | |
|---|---|
| 01. பாடசாலையின் பெயர்: | யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் |
| 02. ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு: | 1922 |
| 03. பாடசாலை நிறுவியவர் : | வள்ளல் ஏழுர் இராசரத்தினம் |
| 04 பாடசாலைத் தரம்: | 1C |
| 05. கல்வி மாவட்டம்: | யாழ்ப்பாணம் |
| 06. கல்வி வலயம்: | வலிகாமம் |
| 07. கோட்டம்: | தெல்லிப்பழை |
| 08. பாடசாலையின் நிறம்: | கருஞ்சிவப்பு |
| 09 மகுட வாசகம்: | வாழக்கல்மின் |
| 10. இல்லங்கள்: | கலைமகள் (பச்சை)<br>மலைமகள் (இளஞ்சிவப்பு)<br>அலைமகள் (நீலம்) |
| 11. உயர்தர வகுப்பு ஆரம்பம்: | 1980 |
| 12. மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது: | 1980. 02. 01 |
| 13. இடப்பெயர்வின் பின் புனரமைப்பு தொடங்கிய ஆண்டு: | 1997 |
| 14. தொகை மதிப்பு இலக்கம்: | 09123 |
| 15. பாடசாலை இலக்கம்: | 1013006 |
| 16. பரீட்சை இலக்கம்: | 11096 |

# ஆசிச் செய்தி



எமது இளவாலைக் கிராமத்தில் சிறந்து விளங்கும் கல்விக்கூடமாகத் திகழ்கின்ற யா/இளவாலை மெய் கண்டான் மகா வித்தியால "மெய்யொளி" சஞ்சிகை வெளியீட்டிற்கு ஆசிச்செய்தி கூறுவதில் நான் பெரிதும் உவகை அடைகின்றேன்.

இப்பாடசாலையானது வருடா வருடம் நிறுவுநர் வள்ளல் ஏழுர் இராசரத்தினம் அவர்களை நினைவு கூரும் வகையில் பரிசளிப்பு விழாவினையும் இந்நூல் வெளியீட்டினையும் மிகவும் சிறப்பாக செய்து வருகின்றது. இந்சஞ்சிகை வெளியீடானது மாணவர்களின் கல்வி, கலை, விளையாட்டு திறமைகளிற்கு களம் அமைத்துக் கொடுக்கிறது என்றால் மிகையாகாது.

இவ் "மெய்யொளி" சஞ்சிகை வெளியீடு சிறப்புற அமைய எல்லாம் வல்ல இளவாலை ஆனைவிழுந்தான் விக்ன விநாயகப் பெருமானின் அருளாசி வேண்டிப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

இங்ஙனம்
"சமஸ்ரீ தேமான்ய"
"சிவாகமகிரியா தத்துவநிதி"
**சிவஸ்ரீ இராம. பாலச்சந்திரகுருக்கள்**
(இளவாலை அருள்மிகு விக்ன விநாயகர் தேவஸ்தான ஆதீனகுரு)

# ஆசிச்செய்தி



வலிகாம கல்வி வலயத்தில் பல ஆண்டுகளாக கல்விப் பணிபுரிந்து வரும் கல்விக் கூடங்களில் ஒன்றாக இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் திகழ்ந்து வருவது அனைவரும் அறிந்ததே. இப்பாடசாலை சமூகத்தினரால் வெளியிடப்படும் "மெய்யொளி" எனும் சஞ்சிகைக்கு எனது ஆசிச்செய்தியினை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

இளவாலைக் கிராமத்தில் அமைந்துள்ள இப்பாடசாலை யில் நான் எனது ஆரம்பக்கல்வியை கற்றுக்கொண்டது எனக்கு கிடைத்த பெரும் பாக்கியமாக நான் எண்ணுகிறேன். இப்பாடசாலை கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் ஊடாக பல வழிகளில் வளர்ந்து, எதிர்கால சமூகத்திற்கு தேவையான நல்லவர்களை உருவாக்கி வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஏட்டுக் கல்வியை விட செயன்முறைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள இன்றைய கல்வி முறையிலே, மாணவர்களிடத்தே மறைந்து காணப்படுகின்ற திறன்களை வெளிக்கொணரும் நோக்கோடு மாணவர்களின் அறிவுப் பசிக்கு விருந்தளிக்கும் அமுதமாக 'மெய்யொளி' சஞ்சிகை வெளிவருவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இம் மெய்யொளி சஞ்சிகை வெளிவருவதற்கு பல வழிகளில் உழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வாழ்த்தி, இச் சஞ்சிகையானது இன்று போல் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து வெளிவந்து மணம்பரப்ப இறையாசீர்வேண்டி நிற்கின்றேன்.

**அருட்தந்தை எ. எட்விநாதன்**
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# வாழ்த்துச் செய்தி



வலிகாமம் கல்வி வலயத்தின் தெல்லிப்பழைக் கோட்டத்தில் அமைந்துள்ள 1C பாடசாலையான யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் பரிசளிப்புவிழா நடத்துவதனையிட்டும், அதனை முன்னிட்டு வெளியிடப்படும் மெய்யொளி வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டும் மகிழ்வடைகின்றேன்.

இப்பாடசாலையின் கடந்த ஆண்டுகளின் முக்கியமான விடயங்களையும் தன்னகத்தேகொண்டு அமையும் இந்நூல் எதிர்காலத்தில் வரலாற்று ஆவணமாகவும் அமையவேண்டும். வளர்ந்துவரும் 1C பாடசாலைகளில் ஒன்றாகிய இப்பாடசாலையைத் தொடர்ந்துவரும் காலங்களில் கல்வித் தரத்திலும், ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தன்னை மெருகேற்றவேண்டிய பொறுப்பு பாடசாலை அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் சமூகத்துக்கும் உள்ளது.

பாடசாலைச் சமூகம் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் விசேடமான அக்கறை செலுத்துவதோடு, பாடசாலையின் வளர்ச்சியில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களை உள்வாங்கி அவர்களை எதிர்காலத்தின் சிற்பிகளாக ஆக்கவேண்டியது அனைவரதும் பொறுப்பாகும். தற்போது பாடசாலை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாணவர்களின் ஆளுமைத்திறன் விருத்திக்கு வழிகாட்டியாக பாடசாலையின் செயற்பாடுகள் அமையவேண்டும்.

பாடசாலையின் ஆண்டு விழாவுக்கான வழிகாட்டியாக அமைந்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, விழாவின் பொருட்டும், மலர் வெளியீட்டின் பொருட்டும் முன்னின்றுழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆண்டுவிழாவும் மலர் வெளியீடும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**செல்வரட்ணம் சந்திரராஜா**
கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்.

# வாழ்த்துச் செய்தி



யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இன்று மலரும் "மெய்யொளி" சஞ்சிகைக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அர்ப்பணிப்பு மிக்க சேவை காரணமாகப் பல அதிபர்களும், ஆசிரியர்களும் இக்கல்விச்சாலையை அலங்கரித்து அதனை வளர்த்தெடுத்துள்ளார்கள். இப்பாடசாலை இடம்பெயர்வின் பின்னர் எதிர்கொண்ட பல சவால்கள் மிகவும் மெச்சத்தக்க முறையில் வெற்றி கொண்டு வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்வதைக் கண்டு பூரிப்படைகின்றேன். அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிபரின் வழிநடத்தலின் கீழ் வருங்கால சந்ததியினருக்கு ஒரு கலங்கரை விளக்காகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இம்மலர் வெளிவருவதற்கு அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இம் மலர் ஒவ்வொரு ஆண்டும் மலர்ந்து மணம்வீசிச் சமூகத்திற்கு மிகுந்த பயனுள்ளதாக அமைய வாழ்த்துகின்றேன்.

**மா. ஆனந்தகுமார்**
கோட்டக்கல்வி அலுவலர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
தெல்லிப்பளை.

# வாழ்த்துச் செய்தி



யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மெய்யொளி மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் அகமகிழ்வடைகின்றேன்.

இந்துமத பாரம்பரியங்களைக் கட்டிக்காக்கும் நோக்குடன் தமிழ் பண்பாட்டுடன் வாழ்க்கைக்கு தேவையான விழுமியம்சார் கல்வியைப் பெறத் தக்க வகையில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு காரணமாய் அமைந்த நிறுவுனர் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களும் அதனோடு உழைத்தவர்களும் போற்றப்பட வேண்டியவர்கள்.

இப்பாடசாலையில் கல்விகற்ற மாணவர்கள் பலர் உயர் பதவி வகிப்பவர்களாக வும், சமூகத்தில் உயர் அந்தஸ்து மிக்கவர்களாகவும் இலங்கையிலும் பிறதேசங் களிலும் வாழ்ந்து வருகின்றனர். இப்பாடசாலை மலரை வெளியிடுவதிலும் பாடசாலை அபிவிருத்தியை சுட்டிக்காட்டுவதிலும் பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப் படுத்துவதிலும் எடுத்த முயற்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், மலர்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

மேலும் இப்பாடசாலை இந்துமதப் பாரம்பரியத்துடன் கலை, கலாச்சார விழுமியங்களைப் பேணி தொடர்ந்து வரும் காலங்களில் தன் பணியில் பார் புகழ உயர்ந்து மிளிர இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**ப. சுரேஸ்குமார்**
அதிபர்
யா/காங்கேசந்துறை றோ.க.த.க.பாடசாலை

# வாழ்த்துச் செய்தி



அன்புடையீர்,

எமது சமுதாயம் சிறப்பாக வளர வேண்டுமாயின் எமது சிறார்கள் நல்ல கல்வி பெறுதல் முக்கியமானது என்பதை நடுவூர்ப் பழுத்த நன்மரம் ஏழூர் இராசரத்தினம் அவர்கள் உணர்ந்தார்கள். அதற்கமைய மேன்மை நிலை கொண்ட மெய்கண்டான் என்ற பெயர் தாங்கிய கல்விக்கூடத்தை ஆரம்பித்தார்கள்.

அது முளைவிட்டு வளர்ந்து பெரும் மரமாக பத்து தசாப்தங்களை அண்மிக்கும் நிலையில் காட்சி அளிக்கிறது. இது ஒரு பெருந்தகையின் கனவின் பிரதிபலிப்பு. இக்கல்விக்கூடம் பல சிறந்த மாணவர்களை சமுதாயத்துக்கு அளித்து பெருமை கொண்டு மகிழ்ந்துள்ளது

இக்கல்விக்கூடம் ஆண்டு தோறும் கல்வியில் கவின்கலைகளில் விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் மாணவ மணிகளுக்கு விருதுகளும் பத்திரங்களும் பரிசுகளும் அளித்து ஊக்குவித்துள்ளது. இது அனைத்து மாணவர்களையும் ஊக்குவிக்கும் தன்மை கொண்டதாகும்.

இன்று இவ்வாண்டில் சிறப்பு பெறும் மாணவ செல்வங்களுக்கு பரிசு அளித்து சிறப்பிக்கும் விழாவினை கொண்டாடி மகிழ்வதை அறியும் போது பூமி பந்தில் பரந்து வாழும் எமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இன்றைய விழா சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்

**வாழிய மெய்கண்டான் வாழிய வாழியவே!**

**சிவ. கௌரிபாலன்**




ஆசிரியர் குழாம் - 2018

# அதிபர் அறிக்கை

இனிமையான இக் காலை வேளையிலே எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் பாதம் பணிந்து வள்ளல் ஏழூர் இராஜரத்தினம் ஐயா அவர்களை மனதில் நிறுத்தி எமது பாடசாலையின் 2018ம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவினையும், நிறுவுநர் நினைவு நாளையும், மெய்யொழி வெளியீட்டினையும் ஒருங்கே சிறப்பாக நடத்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நிகழ்விற்கு ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் பிரம்மஸ்ரீ இராம பாலச்சந்திர குருக்கள் ஐயா அவர்களே! பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மாவை சோமசுந்தரம் சேனாதிராஜா ஐயா அவர்களே, சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு.செ.சந்திரராஜா அவர்களே, மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை தவிசாளர் கௌரவ சோமசுந்தரம் சுகிர்தன் அவர்களே, கௌரவ விருத்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மெய்கண்டான் பழைய மாணவர் தமிழ்மணி திரு.கே.கே.அருந்தவராசா அவர்களே, நினைவுப்பேருரை ஆற்ற வந்திருக்கும் மெய்கண்டான் பழைய மாணவனும் ஆசிரியருமான திரு.க.சுபாஸ்கரன் அவர்களே, மெய்யொளி நூலினை ஆய்வுரை செய்ய வந்திருக்கும் மெய்கண்டான் பழைய மாணவியும் ஆசிரியை திருமதி சத்தியமாலினி ஜெகதீஸ்வரன் அவர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, எமது பாடசாலை ஆசிரியர்களே, மாணவர்களே, பழைய மாணவர்களே, பெற்றோர்களே, நலன் விரும்பிகளே அனைவருக்கும் இனிய காலை வணக்கங்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்து இவ்வாண்டிற்கான அதிபர் அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**ஆசிரிய ஆளணி**

பாடசாலையில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு முன்னின்று உழைப்பவர்கள் எமது ஆசிரியர்களே. அந்த வகையில் எமது பாடசாலையில்

| | |
|---|---|
| இலங்கை அதிபர் சேவை SLPS II | - 01 |
| பட்டதாரிகள் | - 12 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | - 13 |

காணப்படுகின்றனர். எமக்கு ஆரம்பக்கல்வி 01, நூலகர் 01, தகவல் தொழிநுட்பம் 01, ஆங்கிலம் 01, அரசியல் விஞ்ஞானம் 01 ஆகிய ஆசிரியர்கள் அவசியம் தேவையாக உள்ளனர். எமது பாடசாலையில் தி.சோ.அனுசாந்தன், திரு.வா.சிவகுமாரன் ஆகியோர் பாடசாலைப் பணியாளர்களாக அலுவலகச் செயற்பாடுகளை திறம்பட ஆற்றிவருகின்றனர்.

## புதிதாக எம்முடன் இணைந்த ஆசிரியர்கள்

1. திருமதி ய.ஜெயபாலன் (இணைப்பு - ஆரம்பக்கல்வி) 05.03.2018
2. திருமதி.ம.அ.தர்சன் (இணைப்பு - மனைப்பொருளியல்) 12.03.2018
3. திரு.இ.ரவீஸ்வரன் (சித்திரம்) 06.04.2018
4. திருமதி.சி.மாசிலாமணி (ஆரம்பக்கல்வி) 06.04.2018
5. திருமதி.சி.கஜேந்திரன் (நடனம்) 03.05.2018

## இணைக்கப்பட்ட அதிபர்

திரு. பரநிருபசிங்கம் சுரேஸ்குமார் (20.02.2017)

காங்கேசந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையானது எமது பாடசாலையில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. அதன் அதிபர் அலுவலகம் இக்கட்டடத்தொகுதியில் இயங்கி வருகின்றது. அதிபர் திரு.பா.சுரேஸ்குமார் அவர்கள் எமது பாடசாலையுடன் இணைந்து நிர்வாகச் செயற்பாடுகளில் பங்கெடுத்து உதவி புரிந்து வருகின்றார்.

## ஓய்வு பெற்றுச் சென்றோர் (1989.12.13 - 2018.02.20)

பயிற்றப்பட்ட மனைப்பொருளியல் ஆசானாக எமது மாணவச்செல்வங்களிற்கு பல வருடங்களாக இடையறாத சேவையை வழங்கி எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த திருமதி ச.இலட்சியன் ஆசிரியை அவர்கள் இவ்வாண்டு ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இவரது இடம் இட்டு நிரப்ப முடியாத இடைவெளியே.

## மாணவர் எண்ணிக்கை

வள்ளல் ஏழூர் காட்டிய வழியில் தனது இலட்சியக் கனவை நனவாக்கும் நோக்கில் மெய்கண்டான் அன்னையை நாடி வரும் மாணவர்கள் தொகை வருமாறு

✻ ஆரம்ப பிரிவு 1-5 ⇨ 49
✻ கனிஸ்ட பிரிவு 6-11 ⇨ 133
✻ சிரேஸ்ட பிரிவு 12- 13 ⇨ 27

## தர்ம சக்தி நிதியம்

நிறுவுநரின் மகளான திருமதி கிருபாசக்தி தர்மதாசன் அவர்களால் 2010ம் ஆண்டு இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. 2015.07.21ம் திகதி அன்னாரின் மரணத்தின் பின் அவரது பெறாமகன் திரு.சிவகுமாரன் செந்தூரன் நிதியத்தின் உரித்தாளராக இருந்து வருகின்றார். இந் நிதியத்தின் மூலம் பெறப்படும் வருடாந்த வட்டிப்பணம் அவ்வவ் வருட பரிசளிப்பு விழாவின் போது பின்வரும் துறைகளுக்காக வழங்கப்பட்டு வருகின்றது.

அமரர் வள்ளல் சரவணமுத்து ஏழூர் இராசரத்தினம் நினைவாக - தமிழ்மொழிதுறை
அமரர் சின்னப்பிள்ளை ஏழூர் இராசரத்தினம் நினைவாக - சமயம்
அமரர் ஸ்தாபகரின் மருமகன் தர்மதாசன் நினைவாக - ஆங்கிலம்
ஸ்தாபகரின் மகள் திருமதி கிருபாசக்தி தர்மதாசன் நினைவாக - சமூக விஞ்ஞானம்

திரு.சி.செந்தூரன் அவர்கள் நிதியத்தின் ஸ்தாபகரின் நினைவாக பாடசாலையில் அவரது திருவுருவச்சிலையை ஸ்தாபிக்குமாறும், அவரின் பிறந்த தினத்தை நினைவு கூரும் வகையில் ஆடி மாதத்தில் தமிழ்மொழி தின விழாவை நடத்துமாறும் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**மன்றச் செயற்பாடுகள்**

ஒரு மாணவன் சமநிலை ஆளுமையுடைய மாணவனாக திகழ வேண்டுமானால் கல்வியில் மட்டுமல்லாது ஏனைய திறன்களையும் வளர்க்க வேண்டிய தேவை அவனுக்கு உள்ளது. அத்திறன்களை வளர்க்கும் களமாக மன்றச் செயற்பாடுகள் அமைகின்றன. அந்தவகையில் எமது பாடசாலையில் இந்துமாமன்றம், ஆரம்பக்கல்வி மன்றம், முத்தமிழ் மன்றம், சமூகவிஞ்ஞான மன்றம், கணித விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம், தொழிநுட்ப மன்றம், கிறிஸ்தவ மன்றம், உளநலமன்றம், உயர் தர மாணவர் மன்றம், சுகாதாரக்கழகம் என்பன செயற்பட்டு வருகின்றன.

## இந்து மன்றம்

இம் மன்றத்தின் பொறுப்பாசிரியராக திரு.வி.நற்குணசிங்கம் இருந்து வருகின்றார். அவரோடு இணைந்து திரு.இ.இதயராஸ், திருமதி க.பத்மராஜா, திருமதி சி.வரதராஜன் என்போர் செயற்பட்டு வருகின்றனர். இம் மன்றமானது நால்வர் குருபூசை, வெள்ளிக்கிழமை பூசை, நடேசர் அபிஷேகம் என்பவற்றோடு நவராத்திரிப் பூசையையும் சிறப்பாக நடாத்தி வருகின்றது. இவ் வருடம் பிரம்ம ஸ்ரீ பாலச்சந்திரகுருக்கள் தலைமையில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று விஜயதசமி அன்று வாழைவெட்டும் இடம் பெற்றது. மாணவர்களுக்கு ஏடு தொடக்கல் நிகழ்வும் இடம்பெற்றது. நவராத்திரி தினத்தை ஒட்டி மாலை கட்டல், கோலம் போடுதல், பேச்சுப்போட்டிகள் என்பனவும் இடம் பெற்றன. இறுதி நாளன்று பரிசளிப்பும், கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. சைவபரிபாலன சபையால் நடாத்தப்படும் பரீட்சைகளையும், சாந்தையார் மடத்தினால் நடாத்தப்படும் போட்டிகளையும் இம் மன்றமே பொறுப்பேற்று சிறப்பாக நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சமூக விஞ்ஞான மன்றம்

இம் மன்றத்தின் பொறுப்பாசிரியராக திரு.ச.கௌதமன் அவர்களும் அவரோடு இணைந்து திருமதி.க.பத்மராஜா, செல்வி.ந.யாழினி, திருமதி.அ.பொ.ஸ்ரீஹரிகரன்,

திருமதி ம.கி.சற்குணராஜா ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். சமூகவிஞ்ஞான போட்டியில் மாணவர்கள் வலயமடத்தில் பங்கு பற்றி வெற்றி பெற்றுள்ளனர்.

தரம் 6 - ச.சங்கவி 2ம் இடம்

தரம் 8 - இ.நிஜாந் 1ம் இடம், - ரா.நிந்துசன் 2ம் இடம்

தரம் 10 - ரா.நிஷாந்தினி 3ம் இடம்

மாகாண மட்டப்போட்டியில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## உளநல மன்றம்

எமது பாடசாலையில் வழி காட்டலும் ஆலோசனைக்கும் பொறுப்பான ஆசிரியராக திருமதி யோ.ஸ்ராலின் அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இங்கு மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் உள்ளார்ந்த உணர்வுகளை வெளிக்கொணர்ந்து மன அமைதி ஏற்படும் வகையிலும் அமையும் இம்மன்றச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கன. வெள்ளிக்கிழமை தோறும் பூஜை வழிபாட்டினைத் தொடர்ந்து மாணவர்கள் மனஅமைதிப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார்கள். மாணவர்களின் பிரச்சினைகள் இனம் காணப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்தவ மன்றம்

எமது பாடசாலையில் கிறிஸ்தவ மன்றம் கிறிஸ்தவ விழுமியங்களை வெளிக்கொணரும் வகையில் பல்வேறு நிகழ்வுகளிலே மாணவர்கள் பங்கு பற்றி சிறப்பாக துலங்கி வருகிறார்கள். ஆண்டுதோறும் இடம் பெறும் யாழ்மறைமாவட்ட கத்தோலிக்க திருமறைத்தேர்வில் தரம்3 - தரம்11 வரையான மாணவர்கள் பங்கு பற்றி சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். சிறப்பாக 2016ம் ஆண்டு நடை பெற்ற தேர்வில் யாழ் மறைமாவட்ட ரீதியில் தரம் 10ஐ சேர்ந்த மாணவி சி.வின்சிகா 94 புள்ளிகளைப் பெற்று 3ம் இடத்தை பெற்றுக் கொண்டமை பாராட்டுக்குரியதும் குறிப்பிடத்தக்க விடயமுமாகக் காணப்படுகிறது. மேலும் இம்மன்றத்தின் செயற்பாடுகளாக பாடசாலையிலிருந்து மாணவர்கள் தவக்காலத் தியானங்களில் பங்கு கொள்ளுதல். வெள்ளிக் கிழமைகளில் வழிபாடுகள் சிறப்பாக இடம் பெறுதல் என்பவை குறிப்பிடத்தக்கவை. ஆண்டுதோறும் பாடசாலைச் சமூகமாக இணைந்து ஒளி விழா கொண்டாடப்படுகிறது. ஒளிவிழாவுக்காக மாணவர்களிடையே போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி அ.பொ.ஸ்ரீஹரிகரன் செயற்படுகின்றார். இவருடன் இணைந்து திருமதி ம.கி. சற்குணராஜா, திருமதி ம.தர்சன், திரு.யே.எல்.மரியதாஸ், திரு.பா.சுஜீவன், திருமதி யூ.பீற்றர் ஜஸ்ரின், திருமதி ஜ.ஜெயபாலன் ஆகியோர் செயற்படுகின்றனர்.

## ஆரம்பக்கல்வி மன்றம்

எமது பாடசாலையில் ஆரம்பகல்வி மன்றமானது மாதத்தில் இரண்டு தடவைகள் தரம் மூன்று வகுப்பறையில் வியாழக்கிழமைகளில் மு.ப 11.00 மணிக்கு நிகழ்த்தப்படுகிறது. இம் மன்றச்செயற்பாடுகளினூடாக ஆரம்பக்கல்வி மாணவர்களுடைய உடல், உள, சமூக விருத்திக்கான செயற்பாடுகள் ஆற்றுகை நிகழ்வுகளினூடாக வளர்த்தெடுக்கப்படுகிறது. மாணவர்களின் தலைமையில் தாமாகவே நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி ஆசிரியர்களின் வழிப்படுத்தலுடன் சிறப்பாக செயற்படுகிறார்கள். இம்மன்ற நிகழ்வுகளில் பேச்சு, கதை கூறல், விடுகதைகள், பொதுஅறிவு, நாடகம், குழுப்பாடல், ஆங்கில சிங்கள பாடல்கள், போலச்செய்தல், தனிநடிப்பு போன்ற பலவகைப்பட்ட நிகழ்ச்சிகளை மாணவர்கள் நிகழ்த்தி வருகின்றார்கள்.

இவ்வருடம் ஆரம்பக்கல்வி மாணவர்கள் பங்கு பற்றிய போட்டி நிகழ்வுகளில் சிலவற்றுக்கான இடங்கள் கிடைக்கப்பெற்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

- விரைவு கணிதப்போட்டியில் குடும்ப மட்டத்தில் செல்வி ச.திலோஜி 1ம் இடம் பெற்று கோட்டமட்ட போட்டியில் பங்கு பற்றியமை.

- தரம் 3,4 மாணவர்கள் பங்கு பற்றிய செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் குடும்ப மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றது. கோட்டமட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்று வலய மட்டப் போட்டியில் பங்கு பற்றியமை.

- தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட வாசிப்பு மாத போட்டி நிகழ்வில் தரம்1 மாணவி சி.ரஸ்மிகா 3ம் இடத்தைப் பெற்றமை சிறப்புக்குரிய விடயமாகும். ஆரம்பக்கல்வி மன்றப் பொறுப்பாசிரியராக திருமதி யூட்சி பீற்றர் ஜஸ்ரின் அவர்கள் செயற்பட்டு வருகிறார்.

## உயர்தர மாணவர் மன்றம்

மேற்படி எமது வித்தியாலயத்தின் உயர்தர மாணவர் மன்றமானது திரு. வி.நற்குணசிங்கம் அவர்களை பொறுப்பாசிரியராகக் கொண்டு இயங்கி வருகின்றது. கடந்த ஆண்டுகளில் உயர்தர வகுப்புக்களில் மாணவர் தொகை மிகக்குறைவாக காணப்பட்டமையால் இயங்க முடியாமல் போய்விட்டது. எனினும் 2016, 2017ம் ஆண்டுகளில் கணிசமான மாணவர்கள் இணைந்து கொண்ட காரணத்தால் புதுப் பொலிவு பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. இதன் பயனாக 2017, 2018ஆம் ஆண்டுகளில் உயர்தர மாணவர்களின் ஒன்று கூடல் வைபவம் மிகச் சிறப்பாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## முத்தமிழ் மன்றம்

இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திரு.க.சிவராசா இருந்து வருகின்றார். ஏனைய உறுப்பினர்களாக செல்வி கௌ.சிவகுரு, திருமதி க.பத்மராஜா, திருமதி யோ.ஸ்ராலின், திருமதி ம.கி.சற்குணராசா, திருமதி சி.கஜேந்திரன், திரு. பா.சுஜீபன், திரு. இ.ரவீஸ்வரன், திரு. இ.இதயராஸ் என்போர் செயற்பட்டு வருகின்றனர். இம்மன்றமானது முத்தமிழ்களான இயல், இசை, நாடகம் என்பவற்றை தன்னகத்தே கொண்டு காணப்படுகிறது. இவ் வருடம் தமிழ்தினப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற்ற மாணவர் விபரம் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| வாசிப்பு | பிரிவு II | சங்கவி | 3ம் இடம் |
| பேச்சு | பிரிவு V | ஜெ.அபினா | 2ம் இடம் |
| பாவோதல் | பிரிவு II | இ.தனுஜா | 2ம் இடம் |
| இலக்கிய விமர்சனம் | பிரிவு V | சி.பவதர்ஜினி | 2ம் இடம் |
| இசை தனி | பிரிவு III | அ.டிலோஜனா | 3ம் இடம் |
| திறனாய்வு | பிரிவு V | இ.பெனாயா | 2ம் இடம் |

கலாசார மத்திய நிலையத்தினால் நடாத்தப்பட்ட "பிரதீபா" போட்டியில் நாடகத்தில் தேசிய ரீதியில் சிறந்த நடிகைக்கான விருது மோ.கீர்த்தனாவுக்கு வழங்கப்பட்டது. இந்நாடகம் தேசிய ரீதியில் 2ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

வாசிப்பு மாதத்தை ஒட்டி பிரதேச சபையால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் தரம் 13ஐச் சேர்ந்த ச.சஞ்சிதா 3ம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அங்கர் நிறுவனத்தால் வடமாகாண ரீதியாக நடாத்தப்பட்ட "Anchor students with talents" என்னும் போட்டியில் தொழிநுட்பப்பிரிவில் "கழுகு" என்னும் ஆவணப்படமானது மூன்றாம் இடத்தினைப் பெற்று சாதனை படைத்தது. இதற்காக 15000 ரூபா பரிசை செல்வி இ.தஸ்மி பெற்றுக்கொண்டார். இம்மாணவியுடன் ஏனைய மாணவர்களும் பொறுப்பாசிரியராக செயற்பட்ட திரு.எ.சுஜீபன் அவர்களும் இவ்வெற்றிக்குழைத்தமை குறிப்பிடத்தக்கது.

வலயமட்ட சித்திரக்கண்காட்சியானது 12,13.10.2018 அன்று யா/ஸ்கந்தவரோதயா கல்லூரியில் நடைபெற்றது. இடைநிலைப் பாடசாலைகளாக 65 பாடசாலைகள் பங்கு பற்றின. இதன் அடிப்படையில் எமது பாடசாலையிலிருந்து 6-13 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த பெருமளவான மாணவர்கள் பங்கு கொண்டனர். எமது மாணவர்கள் ஆசிரியர்களுடைய ஆக்கங்கள் உட்பட சுமார் 67 ஆக்கங்களை காட்சிப்படுத்தி வலய மட்டத்திலே முதன்மை நிலையைப் பெற்றமை குறிப்பிடத்தக்க

விடயமாகும். அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளதாக சித்திரப் பாட ஆசிரிய ஆலோசகர் கூறியுள்ளார். இக்கண்காட்சி ஊடாக ஒரு மறுமலர்ச்சி இப்பாடசாலைக்கு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதற்குப் பொறுப்பாசிரியராகச் செயற்பட்ட திரு. இ. ரவீஸ்வரன் அவர்களும், ஏனைய ஆசிரியர்களும் வெற்றிக்குழைத்தமை குறிப்பிடத்தக்கது.

## சமூக விஞ்ஞான மன்றம்

இவ் ஆண்டுக்கான சமூக விஞ்ஞான மன்றம் திருவாளர் இ.கணேசானந்தன் (அதிபர்) தலைமையில் திரு.சா.கௌதமன், திரு.க.சிவராசா, திரு.வி.நற்குணசிங்கம், திருமதி க.பத்மராஜா, செல்வி நா.யாழினி ஆகியோர் பொறுப்பாசிரியர்களாக செயற்பட்டு வருவதுடன் அம் மன்றத்தின் தலைவர் சு.சுவேதிகன், செயலாளர் உ.பிரியங்கா, உப தலைவர் றெ.றெஜினோல்ட், உபசெயலாளர் சி.பவதாரணி, பொருளாளர் பா.நிரஞ்சனா, பத்திராதிபராக இ.ஜெனுஷா தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களால் மன்றச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கோட்டமட்ட, வலய மட்ட மாகாண மட்ட சமூக விஞ்ஞான போட்டிகளில் மாணவர்களை பங்கு பெறச் செய்வதுடன் தேசிய மட்ட சமூகவிஞ்ஞான ஒலும்பியா போட்டியில் மாணவர்கள் பங்கு பெறுவதற்கும் ஆசிரியர்கள் வழிப்படுத்தி வருகின்றனர். 2017ம் ஆண்டு வலய மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் செல்வி.சி.வின்சிகா, செல்வன் க.நியாந் வலய மட்ட போட்டியில் வெற்றியீட்டி மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகியிருந்தனர். 2018ம் ஆண்டு சமூகவிஞ்ஞான போட்டியில் செல்வி ரா.நிஷாந்தினி, செல்வன் க.நிஜாந், செல்வன் நி.நிந்துஜன், செல்வி ச.சங்கவி வலய மட்டத்தில் வெற்றியீட்டி மாகாண மட்டத்தில் பங்கு பற்றியிருந்தனர். 2017ம் ஆண்டு தேசிய மட்ட சமூக விஞ்ஞான ஒலும்பியா போட்டியில் அ.டயானி, க.டிலக்ஷிகா, ரா.நிஷாந்தினி, அ.வேணுசா, மோ. கீர்த்தனா ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர்.

## கணித விஞ்ஞான மன்றம்

எமது பாடசாலையில் கணிதவிஞ்ஞான மன்றமானது பல செயற்பாடுகளை ஆற்றி வருகின்றது. அவ்வகையில் மாணவர்களிடையே கணித வினாடிவினாப் போட்டிகளை நடாத்தி வருவதோடு தரம் 09 இற்கான மகாணமட்டப்பரீட்சை மற்றும் க.பொ.த(சா/த) பரீட்சைகளில் கணித, விஞ்ஞான பாடங்களில் சிறப்புத்தெர்ச்சி பெற உழைத்து வருகின்றது. இம் மன்றச்செயற்பாடுகளின் போசகராக திரு.ஜே.லூ. மரியதாசர் அவர்களும் உதவியாசிரியர்களாக திரு.செ.அகிலன், திருமதி.க.கிஷோன், செல்வன் சு. ஜஜீபன் ஆகியோரும் செயற்படுகின்றனர். இம்மன்றத்தின் தலைவராக செல்வன் ஜெ.தயானுசன், செயலாளராக செல்விம.திலக்ஷனா ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

## சுகாதாரக்கழகம்

இக்கழகமானது பாடசாலை சுற்றுப்புறச் சூழலைத் தூய்மைப்படுவதையும் சுகாதாரப் பழக்க வழக்கங்களை ஆரோக்கியமாக வளர்த்தெடுப்பதையும் நோக்கமாக கொண்டு செயற்பட்டு வருகின்றது. சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுகள் பாடசாலை சுகாதாரக் கழகத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இக் கழகத்தினால் குடிநீர் தொடர்பான போட்டிகளும், டெங்கு விழிப்புணர்வுகள், காசநோய் தொடர்பான போட்டிகளும் பாடசாலையில் நடாத்தப்பட்டன. அத்துடன் தேசிய ரீதியான தொற்றாத நோய்கள் தொடர்பான கட்டுரைப்போட்டியில் சி.வானுப்பிரியா, சி.வின்சிகா என்போர் வெற்றி பெற்றுள்ளனர். அத்துடன் தேசிய ரீதியான சுகவாழ்வுப் பேரவையால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் ச.துளசிகா விருதைப் பெற்றுள்ளார். உ.பிரியங்கா, பா.நிரஞ்சனா, ச.டிலக்சிகா, வ.றம்மியா, சு.தர்சிகா, மோ.கீர்த்தனா, சு.சுஜிந், இ.தனுஜா ஆகியோர் சிறந்த கட்டுரைகளை எழுதி விசேட, சிறப்பு, சாதாரண பரிசுகள் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 1,4,7,10 வகுப்பு மாணவர்களுக்கான உடல் திணிவுச்சுட்டி ஆரோக்கியம் தொடர்பான பரிசோதனை இளவாலை பிராந்திய வைத்திய அதிகாரி Dr.இரவீந்திரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஐப்பசி 15ம் திகதி கை கழுவுதல் தினம் கொண்டாடப்பட்டது. இம் மன்றத்திற்குரிய பொறுப்பாசிரியராக திருமதி க.பரமேஸ்வரன் செயற்படுகின்றார்.

## பரீட்சைப் பெறுபேறுகள்

உயர்பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறுகின்ற மாணவர்களாலே பாடசாலை பெருமையடைகின்றது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் ஒன்பது மாணவர்கள் தோற்றினர். செல்வி சு.லதுஜா 184 புள்ளிகளைப் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றுள்ளார். செல்வி ச.கேசியா 158 புள்ளிகளையும், செல்வி த.நிதுர்சி 144 புள்ளிகளையும், செல்வன் து.துவிக்சன் 135 புள்ளிகளையும், செல்வி அ.சிபோறா 102 புள்ளிகளையும், செல்வி த.நிதுசா 92 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். இம் மாணவர்களை சிறந்த முறையில் வழிப்படுத்திய ஆசிரியர் திருமதி சிவரூபி வரதராசா அவர்களையும் இவ்விடத்தில் பாராட்டி நிற்கின்றேன். 2017ம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு 26 மாணவர்கள் தோற்றியுள்ளனர். அவர்களில் 13 மாணவர்கள் க.பொத (உ/த) கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். க.பொத (உ/த) இல் 02 மாணவர்கள் தோற்றியுள்ளனர். அம் மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் சித்தி அடைந்துள்ளனர். சித்தியடைந்த மாணவர்களையும் வழிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டி நிற்கின்றேன்.

## பேண்தகு பாடசாலை வேலைத்திட்டம்

இவ்வேலைத்திட்டத்திற்கு பொறுப்பாசிரியராக ஆசிரியர் திரு.பா.எட்வேட் சுஜீபன் செயற்பட்டு வருக்கின்றார். அதன் கீழ் ஐந்து குழுக்கள் இயங்கி வருகின்றன.

விவசாயக்குழு - திரு. இ.இதயராஸ்

சுற்றாடல் குழு - திருமதி க.பத்மராஜா

சுகாதாரக்குழு - திருமதி க.பரமேஸ்வரன்

போதைப்பொருள் தடுப்புக்குழு - திரு. சா.கௌதமன்

சிறுவர் பாதுகாப்புக்குழு - திருமதி யோ.ஸ்ராலின்

## மாணவர் முதல்வர் அணி

யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவ முதல்வர் அணியானது திரு.வி.நற்குணசிங்கம் அவர்களை பொறுப்பாசிரியராக கொண்டு இயங்கி வருகின்றது. 2017ம், 2018ம் ஆண்டுகளில் அனைவரதும் வேண்டுகோளுக்கு அமைய கிட்டத்தட்ட 30 மாணவர்களிற்கு சின்னம் சூட்டி கௌரவிக்கப்பட்டது. இவ்வாண்டு செல்வன் ச.சுகந்தனை சிரேஷ்ட மாணவ தலைவராகவும், செல்வி ஜெ.அபினாவை சிரேஷ்ட மாணவ தலைவியாகவும் கொண்டு விளங்கும் இவ்வணியில் தலைமைத்துவ பயிற்சி பெற்றவர்களும் இணைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

**இவ் அணியின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் வகையில்...**

திரு. இ.கணேசானந்தன் (அதிபர்)

திரு. செ.அகிலன் (பிரதி அதிபர்)

திரு. வி.நற்குணசிங்கம் (பொறுப்பாசிரியர்)

திரு. ம.சிவமோகன்

திரு. க.சிவராசா

திரு. இரா.இதயராஸ்

திருமதி அ.மணிசேகரன்

செல்வி கௌ.சிவகுரு

திருமதி க.பத்மராசா

திருமதி யோ.ஸ்ராலின்

ஆகிய ஒழுக்காற்றுக் குழு உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

## வங்கிச்சேவை

சேமிப்புப்பழக்கத்தை சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்கு ஊக்குவிக்கும் முகமாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி (சங்கானை), தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றின் நடமாடும் சேவைப்பிரிவுகள் இணைந்து மாணவரின் சேமிப்பு திறனை

வளர்த்து வருவதுடன் மாணவர்களுக்கு அவர்களின் சேமிப்பு தொகைக்கு ஏற்ப பரிசுப்பொருட்களையும் வழங்கி தமது சேவையை திறம்பட செய்கின்றன. இலங்கைவங்கி (காங்கேசன்துறை) சிறுவர் தினத்தை ஒட்டி ஏராளமான பரிசில்களை வழங்கி உதவியது. பரிசளிப்பு வைபவத்திற்கான நிதியினை வங்கியில் இடுவதன் மூலம் அதற்கு பெறுமதியான பரிசில்களை தந்து உதவுகின்றனர். இது வங்கியின் மகத்துவமான சேவையாகும். இதற்கு நன்றி தெரிவிப்பதுடன் வங்கிச்சேவைகளுக்கு பொறுப்பாசிரியர்களாக திருமதி க.பரமேஸ்வரன், திருமதி யோ.ஸ்ராலின், செல்வி ந.யாழினி ஆகியோர் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

## விளையாட்டுத்துறை

எமது பாடசாலை மாணவர்களின் ஆரோக்கியமான வாழ்விற்கு அவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வகையில் இத்துறை மிகவும் அவசியமானது. வருடாந்த இல்ல மெய்வலுநர்போட்டி 2018.01.30 அன்று சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவின் பிரதம விருந்தினராக திரு.ச.சிவானந்தராசா (கோட்டக்கல்வி அலுவலர் சண்டிலிப்பாய்க் கோட்டம்) அவர்களும், சிறப்பு விருந்தினராக திரு.அ.தபேந்திரன் (உதவி இயக்குனர் தேசிய இளைஞர் சேவை மன்றம் யாழ்ப்பாணம்) அவர்களும், கௌரவ விருந்தினராக திரு.சே.சுரேந்தர் (பழைய மாணவன் மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி உத்தியோகத்தர் முல்லைத்தீவு), திருமதி சேந்தினி சுதாகரன் (பழைய மாணவி விளையாட்டுத்துறை ஆசிரியர், வவுனியா சைவப்பிரகாச மகளீர் கல்லூரி) அவர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் கலைமகள் இல்லம் முதலாம் இடத்தையும், மலைமகள் இல்லம் இரண்டாம் இடத்தையும், அலைமகள் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. இவ்விழாவின் செயலாளராக திருமதி க.பரமேஸ்வரன் செயற்பட்டார். கரப்பந்தாட்ட விளையாட்டுக்களில் எமது பாடசாலை சிறந்து விளங்குவது குறிப்பிடத் தக்கது. இந்த வகையில் இவ்வாண்டு போட்டி முடிவுகள் வருமாறு:

| விளையாட்டுப்பிரிவு | மட்டம் | இடம் | பொறுப்பாசிரியர் |
|---|---|---|---|
| *கரப்பந்தாட்டம்* | | | |
| 16 வயதின் கீழ் பெண் | தேசியம் | காலிறுதி | திருமதி.க.பத்மராஜா |
| 18 வயதின் கீழ் ஆண் | வலயம் | 3ம் இடம் | திரு.க.சிவராஜா |
| 18 வயதின் கீழ் பெண் | வலயம் | 3ம் இடம் | திருமதி.அ.பொ.ஸ்ரீஹரன் |

## மெய்வலுநர் விளையாட்டுக்கள்

| பெயர் | நிகழ்ச்சி | மட்டம் | இடம் |
|---|---|---|---|
| செல்வன் றெ.றெஜினோல்ட் | உயரம் பாய்தல் | வலயம் | 2ம்இடம் |
| | நீளம் பாய்தல் | கோட்டம் | 1ம் இடம் |
| செல்வன் ச.அனோசன் | 1500m | கோட்டம் | 3ம் இடம் |
| செல்வன் கா.கனீபன் | முப்பாய்ச்சல் | கோட்டம் | 2ம் இடம் |
| செல்வன் அ.ஷெஞ்சீவன் | 400m | கோட்டம் | 3ம் இடம் |
| செல்வன் சு.தசிந்தன் | 1500m | வலயம் | 2ம் இடம் |
| | 800m | கோட்டம் | 2ம் இடம் |
| | 5000m | வலயம் | 3ம் இடம் |
| செல்வன் ச.தர்சனா | 1500m | கோட்டம் | 3ம் இடம் |
| வ.கஜன்சிகா | 200m | வலயம் | 1ம் இடம் |
| | 400m | வலயம் | 1ம் இடம் |
| | நீளம் பாய்தல் | வலயம் | 3ம் இடம் |
| க.ரஜனிகா | குண்டு போடுதல் | கோட்டம் | 3ம் இடம் |
| | ஈட்டி எறிதல் | கோட்டம் | 3ம் இடம் |

வ.கஜன்சிகா மாகாணமட்டத்தில் 200m நிகழ்வில் 5ம் இடத்தை பெற்றுள்ளார்.

இவ்வருடம் 16 வயதின் கீழ் பெண்கள் கரப்பந்தாட்ட அணியினர் DSI கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், எமது பாடசாலை கரப்பந்தாட்ட அணியானது மாகாணத்தில் இரண்டாம் இடத்தை பெற்றதுடன் தேசிய மட்டத்தில் காலிறுதி வரை முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.

இவ்விளையாட்டுத்துறைக்கு பொறுப்பாசிரியராக செயற்பட்டு வெற்றிக்கு உழைத்த ஆசிரியர் திருமதி க.பரமேஸ்வரன் அவர்களுக்கும், பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுக் கொண்டிருக்கும் திரு.பொ.பிரக்ஷன் அவர்களுக்கும் இவ்வெற்றிகளுக்கு பல்வேறு வழிகளிலும் உதவிய பழைய மாணவர்கள் அனைவருக்கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகள்.

## பாடசாலையின் மாணவர் பாராளுமன்றச் செயற்பாடுகள்

மாணவர் பாராளுமன்றத்திற்கான அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் 2017.02.13 அன்று பாடசாலையின் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டது. கல்வியமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக எமது பாடசாலையின் மாணவர் பாராளுமன்றம் உருவாக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் பொறுப்பாசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இப்பாராளுமன்ற நிகழ்வுகளின் ஆரம்பவிழா 2017.03.17

அன்று ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அவற்றில் மாணவர் பாராளுமன்றத்தின் செயற்பாடுகளாக யூன் 05 சுற்றுச் சூழல் தினத்தன்று பாடசாலையில் மரம் நாட்டும் வைபவம் இடம்பெற்றது.

போதைப்பொருள் வாரத்தை முன்னிட்டு போதைப்பொருள் ஒழிப்பு எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற பேரணியானது இளவாலை பிரதேச வைத்தியசாலை முன்பாக ஆரம்பித்து பாடசாலையில் முடிந்தது. அத்துடன் பாடசாலை மண்டபத்தில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான உரைகளும் கருத்துக்களும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

சுகாதாரப்போசாக்கு அமைச்சின் ஊடாக சத்து மருந்து வழங்கும் நிகழ்வு நடைபெற்று வருகின்றது. சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களும், டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தில் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட செல்வன் அ.சஞ்சீபன் வலயமட்ட பாராளுமன்றத்தில் 2017ல் பிரதி சபாநாயகராகவும் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் 2018ம் ஆண்டு வலய மட்ட பாராளுமன்றத்தில் செல்வன் சு.சுவேதிகன் பௌதீகவள அபிவிருத்தி அனர்த்த முகாமைத்துவ பிரதியமைச்சராகவும் தெரிவு செய்யப்பட்டார். பாடசாலை மாணவர் பாராளுமன்ற செயற்பாட்டினை பிரதி செயலாளர் நாயகம் திரு.சா.கௌதமன் முன்னெடுத்து வருகின்றார். இச்செயற்பாடுகளிற்கு செயலாளர் நாயகம் திருவாளர் இ.கணேசானந்தன் அவர்களும் ஏனைய அங்கத்தவர்களும் ஆதரவை வழங்கி வருகின்றனர்.

**தேசிய மாணவர் படையணி**

தேசிய மாணவர் படையணியின் தொடருறு செயற்பாடுகளில் 2017,2018 ஆம் ஆண்டுகளில் தலா 25 மாணவர்களை உள்ளடக்கிய படையணிக்கு ஆசிரியர் திரு.சா.கௌதமன் தலைமையில் 20 ஆவது படைப்பிரிவின் படையணி வீரர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டு தேசிய ரீதியான போட்டிக்கு இரதம்பே பயிற்சி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 2017ம் ஆண்டிற்குரிய மாணவர் படையணியினர் 06ம் நிலையையும், 2018 இல் 10ம் நிலையையும் பெற்று சாதித்தனர்.

**நூலகம்**

மாணவர்களை தற்போது மாறிவரும் உலகிற்கு ஏற்றவர்களாக்குவதற்கு புதிய கல்விச்சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி நல்வழியில் வாழ்ந்து வர வழி சமைக்கின்றது. இந்த வகையில் மாணவர்களிடையே கல்விக்கான தேடலை ஊக்குவிக்கிறது. கல்விக்கான தேடலில் பாடசாலை நூலகமானது மாணவர்களின்

அறிவுப்பசியை தீர்ப்பதில் பெரும் பங்காற்றி வருகின்றது. அந்த வகையில் பாடசாலை நூலகமானது 2018ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் வர்ணம் தீட்டப்பட்டு அழகாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்களின் பாடவிதானத்தில் வாரத்தில் ஏழு பாடவேளைகள் நூலகம் சென்று நூல்களை கற்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

நூலகத்தை சிறப்பாக பராமரிக்க நூலகத்துறை தொடர்பான பயிற்சி பெற்ற ஓர் ஆசிரியர் தேவை. எனினும் தற்போது கணிதபாட ஆசிரியரான திரு.ஜே.லூ. மரியதாசர் என்பவர் நூலகத்தை பராமரித்து வருகின்றார். இன்று எமது பாடசாலையில் ஏறக்குறைய 3000 நூல்கள் மட்டுமே உள்ளன. இவற்றில் ஏராளமான நூல்கள் பழைய, பழுதடைந்த நூல்களாகும். இந்நிலையில் 21ம் நூற்றாண்டிற்கு ஏற்றதான புதிய நூல்களை கொள்வனவு செய்வது காலத்தின் தேவையாகும். இதற்கு பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஒத்துழைப்பு நல்குதல் அவசியமாகும்.

ஒவ்வொரு மாணவரும் தமது பிறந்தநாள் நிகழ்வின் போது தமது நினைவாக ஒரு நூலையாவது அன்பளிப்புச் செய்ய பெற்றோர்கள் வழிப்படுத்த வேண்டும். எமது பாடசாலை நூலகமானது ஒவ்வொரு வருடமும் தேசிய வாசிப்பு மாதமான ஐப்பசி மாதத்திலே கண்காட்சி மற்றும் போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்குவதுண்டு. அத்துடன் நூலகம் சார்பாக "தேடல்" என்னும் பெயரில் சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்பட்டு வந்தது. ஆனால் துரதிஷ்ட வசமாக இவ்வருடம்(2018) இச்செயற்பாடுகள் நடைபெறவில்லை. எதிர்வரும் காலங்களில் இச்செயற்பாடுகள் தொடரும் என உறுதி கூறுகின்றேன்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**

யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் நலன்புரிக் கழகமானது இன்றுவரை சிறப்பாக இயங்கி வருகின்றது. இக்கழகமானது ஆசிரியர்களின் பல்வேறுபட்ட இன்ப துன்பநிகழ்வுகளில் கலந்து கொள்வது மட்டுமல்லாது பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளிலும் உடல், உள, பண ரீதியான பங்களிப்புச் செய்வதுடன் ஒத்துழைப்பும் நல்கி வருகின்றது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஆசிரியர் திரு. இ.இதயராஸ் அவர்களைத் தலைவராகவும், திரு பா.சுஜீபன் அவர்களை பொருளாளராகவும், திருமதி ஜெ.ஜமுனகுமாரி அவர்களை செயலாளராகவும் கொண்டு இயங்கி வருகின்றது. இக்கழகத்தின் செயற்பாடுகள் அனைத்திற்கும் பல்வேறு விதமாக பணஉதவியும் ஒத்தாசையும் வழங்கி அனைத்து அங்கத்தவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

**பாடசாலை அபிவிருத்திக்குழு**

பாடசாலை அபிவிருத்திக்குழு பாடசாலையின் முன்னேற்றத்தில் அதீத அக்கறையுடன் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

**பழைய மாணவர் சங்கம்**

பாடசாலையின் முன்னேற்றத்தில் அதீத அக்கறையுடன் செயற்பட்டு பல அபிவிருத்தி வேலைகளுக்கான பங்களிப்பினையும் செய்து வருகின்றது.

**பிறஅமைப்புக்கள்**

பாடசாலையைச் சூழவுள்ள ஏனைய அமைப்புக்கள் பாடசாலை அபிவிருத்தியில் அதிக அக்கறையுடன் பல உதவிகளை வழங்கி வருகின்றன.

**பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள்**

1. பாடசாலை ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான செயற்பாட்டறை - அரசநிதி (2017)
2. பாடசாலையின் மூன்று கட்டடங்களில் திருத்த வேலைகள்
    1. ஏழூர் மண்டபம்
    2. ஞானாமிர்த மண்டபம் (2018)
    3. நூலகக் கட்டடத் தொகுதி

    (அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிதி ஒதுக்கீட்டில் 2018)

3. தெற்குப்பக்க மதில் கட்டுமாணம்

    (திரு.மாவைசேனாதிராசா நிதி ஒதுக்கீட்டில் 2018)

4. வாட்டர் ஸ்பொட், மலசல கூட கட்டுமாணம்

    (அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிதி ஒதுக்கீட்டில் 2018)

5. முன்பக்க மதில் பூச்சு வேலைகள்

    (பழைய மாணவர் திரு.செ.சிவகுமார் நிதி உதவி (018)

6. ஏழூர் மண்டப மேடையின் மேற்பகுதி முன்பகுதி லெவல் சிற் அடித்தமை

    (வைத்திய கலாநிதி திரு.த.பேரானந்தராஜா 2018)

**பாராட்டுக்குரியவர்கள்**

எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக நிதி உதவிகளையும், பொருள் உதவிகளையும், சரீர உதவிகளையும், அன்பளிப்புக்களையும் வழங்கி உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பாடசாலை வளர்ச்சிக்கு நிதி உதவி வழங்கியோர்

01. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
திரு. சோ.மாவை சேனாதிராசா 1100000
02. திருமதி இராஜேஸ்வரி அன்ரனிக்கா
திருமதி. ரூபி செபஸ்தியாம்பிள்ளை 100000 (உணவு வழங்கல்)
03. Dr. த.பேரானந்தராஜா 95000 (ஏழுர் மண்டப மேடைக்கான Level Sheet )
04. திரு. செ.சிவகுமார் 85000 (முன்மதில் பூச்சு, வர்ணம்)
05. திரு. க.அருந்தவராஜா 25000 (மாணவர் சீருடை)
06. திரு. இ.செந்தூர்க்குமாரன் 21000 (பூச்சாடி)
07. திரு. என்.இராஜரட்ணம் 20000
08. திரு. திருமதி சகிலதரன் 20000 (உணவு வழங்கல்)
09. திரு திருமதி சகிலதரன் 12000 (ஆரம்ப பிரிவு நூல்கள்)
10. திரு. சி.செந்தூரன் 11500 (ஆசிரியர் தினம்)
11. திரு. க.காசிநாதன் 10000
12. திரு. வ.கமலதாஸ் 10000 (பழைய மாணவர் கணக்கு வைப்பு)
13. திரு. தே.அலன்ரெலின் 10000 (பழைய மாணவர் கணக்கு வைப்பு)
14. திரு. ஏ.ஆனந்தவேல் 10000
15. திரு திருமதி சகிலதரன் 25 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்
16. அருட்தந்தை எட்வினாதன் 12 JC
17. Dr.த.பேரானந்தராஜா 100 சில்வர் டம்ளர்கள்,
வொலிபோல் மாணவியர் பதக்கங்கள்
18. கருகம்பனை இந்து இளைஞர் மன்றம்
வொலிபோல் சப்பாத்துக்கள், 11 சோடி
செயற்பட்டு மகிழ்வோம் மாணவர் சம்பியன்கள் 51
விளையாட்டு உபகரணங்கள்
19. திரு. சி.செல்வராசா துவிச்சக்கரவண்டி
20. திரு. பா. மரியதாஸ் துவிச்சக்கரவண்டி
21. திரு. இ.சக்திக்குமரன் சம்பியன் 9
22. திரு. சி.குமாரலிங்கம் சம்பியன் 3
23. திரு. சு.கிசோக்குமார் 4 டசின் பென்சில்
24. வருத்தப்படாத வாலிபர் சங்கம்
ஆரம்பக்கல்வி மாணவருக்கான சட்டவேலிகள்,
2 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்
25. திரு.க.விவேகானந்தம் வொலிபோல் பந்து 01
26. தாஸ் லாப் உரிமையாளர்
விளையாட்டுப்போட்டிச் சான்றிதழ்களும், அழைப்பிதழும்

## மாணவரின் கல்வியை மேம்படுத்துவதற்காக உதவி வழங்கியோர்

| | |
|---|---|
| 01. கொக்குவில் இந்துக் கல்லூரி பழையமாணவர் | 300000 |
| 02. திரு.எஸ். இரஞ்சன் | 20000 |
| 03. திருமதி கா. சுனித்தா | 12000 |
| 04. வருத்தப்படாத வாலிபர் சங்கம் | 6000 |
| 04. திருமதி சுகிலதரன் இந்திரவதனி | 5000 |
| 05. சமூக அபிவிருத்தி மன்றம் | 4500 |
| 06. திரு.சி.செந்தூரன் | 3000 |
| 07. திரு.வ.க.துரைராஜா | 3000 |
| 08. திரு.சி.குமாரலிங்கம் | 3000 |
| 09. திரு.மு.பிறேமதாசன் | 3000 |
| 10. திரு .சு.மதிமுகன் | 3000 |
| 11. திரு.அ.ரூபராசா | 3000 |
| 12. அருட்தந்தை எட்விநாதன் | 1500 |
| 13. திருமதி சி.வரதராசன் | 1500 |
| 14. திருமதி கு.பத்மராஜா | 500 |
| 15. திருமதி க.பரமேஸ்வரன் | 500 |

## விளையாட்டுத்துறைக்கு நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 01. தர்மசக்தி நிதியம் | 25000. | (விளையாட்டுப் போட்டி) |
| 02. திரு.தே.அலென்ரெலின் | 30000. | (றம்பட், தேசயமட்டம் செல்லல்) |
| 03. திரு.அ.வினோத் | 15000. | (தேசியமட்டம் - கரப்பந்து) |
| 04. த.பேரானந்தராஜா | 10000. | (மாகாணமட்ட கரப்பந்து) |
| 05. திரு.வே.சுதாகரன் | 10000. | (செயற்பட்டு மகிழ்வோம் - உபகரணம்) |
| 06. திரு.பா.ஆதீபன் | 10000. | (வீதி ஓட்ட நிகழ்வு) |
| 07. திரு.திரு.க.காசிநாதன் | 10000. | (தேசியம் - கரப்பந்து) |
| 08. திரு.சி.நகுலேஸ்வரன் | 10000. | (தேசிய மட்ட கரப்ப்நதாட்டம்) |
| 09. திருமதி.ந.சறோஜினிதேவி | 10000. | (தேசிய மட்ட கரப்ப்நதாட்டம்) |
| 10. வசந்தநிதியம் | 6500. | (விளையாட்டுப் போட்டி) |
| 11. திரு.கதிரவேலு சுதாகரன் | 5000. | (விளையாட்டுப் போட்டி) |
| 12. திரு.வ.கமலதாஸ் | 5000. | (விளையாட்டுப் போட்டி) |
| 13. திரு.க.சுதாகரன் | 5000. | (விளையாட்டுப் போட்டி) |
| 14. இளவாலை வருத்தப்படாத வாலிபர்சங்கம் | 5000. | (தேசிய மட்ட கரப்பந்தாட்டம்) |
| 15. திருமதி.சி.பிரசன்யா | 5000. | (சம்பியன்) |
| 16. திரு.தே.தர்சனன் | 4000. | (பாண்ட் உபகரணம்) |

| | | | |
|---|---|---|---|
| 17. | செல்வி.அ.ஜெஜீபா | 3000. | (விளையாட்டுப் போட்டி) |
| 18. | திரு.வ.க.துரைராஜா | 2000. | (தேசிய மட்ட கரப்பந்தாட்டம்) |
| 19. | திரு.சு.மதிமுகன் | 2000. | (பாண்ட் உபகரணம்) |
| 20. | திருமதி.ந.அருமைநாயகம் | 2000. | (வீதி ஓட்டம்) |
| 21. | திருமதி.சி.தர்மபாலா | 2000. | (விளையாட்டுப் போட்டி) |
| 22. | திரு.வை சிவகுமார் | 1000. | (பாண்ட் உபகரணம்) |
| 23. | திருமதி,யோ.ஸ்ரீதேவி | 1000. | (விளையாட்டுப் போட்டி) |
| 24. | திருமதி.செ.பிருந்தா | 1000. | (விளையாட்டுப் போட்டி) |
| 25. | மாயவன் ஹாட்வெயார் | 1000. | (விளையாட்டுப் போட்டி) |
| 26. | திரு.மு.பிறேமதாசன் | 1000. | (விளையாட்டுப் போட்டி) |
| 27. | செல்வி ச.நகநந்தினி | 500. | (விளையாட்டுப் போட்டி) |
| 28. | திரு.ப.தம்பித்துரை | 500. | (விளையாட்டுப் போட்டி) |
| 29. | திரு.சு.கிசோக்குமார் | 500. | (விளையாட்டுப் போட்டி) |

**வேண்டுகோள்**

இன்றைய விழாவின் முதன்மை விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மாவை சோ.சேனாதிராசா அவர்களிடம் அன்பான வேண்டுகோளை விடுக்கின்றோம். ஞானாமிர்த மண்டபத்தில் இடைநிலை மாணவர்களின் வகுப்பறைகள் அடைப்புகளின்றி கற்றற் செயற்பாடுகளுக்கு பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது. முறையான விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்று இல்லாததும் பெருங்குறையாக இருந்து வருகின்றது. இவற்றை எம்மாணவர்களுக்கு பெற்றுத்தர வேண்டும் என்ற வேண்டுகோளை இப்பாடசாலைச் சமூகத்தின் சார்பில் முன்வைக்கின்றேன்.

**நிறைவுரை**

பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற வலயக்கல்விப் பணிப்பாளர் (வலிகாமம்), கோட்டக்கல்வி பணிப்பாளர் (தெல்லிப்பளை) வலயக்கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

+++++

# தொற்றா நோய்த்தன்மையைத் தவிர்ப்போம்

மனித வாழ்வில் ஆரோக்கியம் முக்கியமானதாகும். தற்காலத்தில் தொற்றா நோய்களான இதயநோய், நீரிழிவு, குருதி அமுக்கம், புற்றுநோய் மற்றும் சுவாசநோய் போன்றவை அதிகரித்துள்ளன. உலக சனத்தொகையில் 33 வீதத்திற்கு அதிகமானவர்கள் தொற்றா நோய்களுக்கு ஆளாகியுள்ளதுடன், உலகில் ஏற்படும் மரணங்களில் 63 வீதமானவை தொற்றா நோய்கள் காரணமாகவே ஏற்படுகின்றது என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கின்றது. வாழ்க்கையில் எளிய மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் வருடாந்த இறப்பு வீதத்தை 2வீதமாக குறைத்து 8 மில்லியன் மக்களின் உயிர்களை 10 வருடங்களில் பாதுகாக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. 80% மான இதய நோய்கள் மற்றும் பக்கவாதம். 80% வகை 2 நீரிழிவு மற்றும் 40% ஆன புற்று நோய்கள் போன்றவற்றை ஆரோக்கியமான உணவுப்பழக்கம், உடற்பயிற்சி, புகைத்தலை நிறுத்துதல், மதுப்பாவனையை நிறுத்துதல் இவ்வாறான செயற்பாடுகளால் கட்டுப்படுத்தலாம்.

தொற்றா நோய்களை ஏற்படுத்தும் மிகப் பிரதானமான காரணிகளாக புகைத்தலும் புகையிலை பாவித்தலும், ஆரோக்கியமற்ற உணவு, உடல் மந்த நிலை பேணல், அதிகளவு மது அருந்துதல் மற்றும் மன அழுத்தம் போன்ற ஆபத்து விளைவிக்கும் காரணிகளே பொதுவாக எல்லா வகை தொற்றா நோய்கள் ஏற்படக் காரணமாக உள்ளன. இவ்வகையான ஆபத்து விளைக்கும் காரணிகள் மக்கள் தொகையில் காணப்படும் போது நோய்த்தாக்கம் மற்றும் இறப்பு போன்றவற்றில் இவை பெரிதும் செல்வாக்கு செலுத்துபவையாக உள்ளன. புகைத்தலையும் புகையிலை பாவனையையும் விரைவாக கை விடுவததல் கிடைக்கும் நன்மைகளை எடுத்து நோக்குகையில் புகைத்தலால் ஏற்படும் பாரதூரமான நோய்களான இதயநோய், புற்றுநோய், நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் போன்றவற்றின் ஆபத்துக்கள் வராது தடுக்கலாம். வாழ்வை அச்சுறுத்தும் ஏனைய அசாதாரண நிலைகளை ஏற்படுத்தும் ஆபத்துக்களின் தன்மையைக் குறைக்கலாம். உதாரணமாக ஆண்மைக்குறைவு, கண்புரைநோய், கருவுறுதல் பிரச்சினைகள், பார்வை நரம்புக் கோளாறு, தசைச்சீரழிவு நோய், பல் இழப்பு, எலும்புப்புரை நோய் என்பவற்றுடன் நீங்கள் கற்பமாக இருந்தால் மகப்பேற்று சிக்கல்கள் குறையும்.

மேலும் ஆரோக்கியமற்ற உணவையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது உங்களுக்குப் பிடித்த அனைத்து உணவு வகைகளையும் தவிர்த்து உணவை உண்ணுதல் ஆரோக்கியமான உணவுண்ணல் முறையல்ல. உண்மையில்

ஆரோக்கிய உணவை உண்பதில் முதலாவது விதியே அனுபவித்து உண்ணுதலாகும். ஆரோக்கியமான உணவு உண்பது என்பது சமநிலை உணவை உண்ணுதலாகும். அனைத்து நீண்டகால நோய்களுக்கும் மிகப் பிரதானமான அபாயகர காரணியே ஆரோக்கியமற்ற உணவு ஆகும். அதிகம் சிக்கல் தன்மை மிக்க காபோஹைதரேட்டு, நார், விற்றமின்கள் மற்றும் குறைந்த கொலஸ்ரோல் போன்றவை காணப்படும் மரக்கறிகள், தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளை அதிகளவு உண்ணுங்கள், உள்ளூர் உற்பத்தி மற்றும் புதிய உற்பத்திப்பொருட்களை வாங்குங்கள். ஆரோக்கியமான உணவானது உங்கள் சக்தியையும் நன்நடத்தையையும் அதிகரிப்பதோடு, பல நோய்களுக்கான அபாயத்தையும் குறைக்கின்றது. உடல் செயற்பாடு மற்றும் உடற்பயிற்சி நடவடிக்கைகளையும் உங்களது ஆரோக்கிய உணவுத்திட்டத்தில் உள்ளடக்கினால் இன்னும் நன்றாக இருக்கும். புதிய உணவுப் பழக்கங்களைச் செயன்முறைப்படுத்தும் போது ஒரு நேரத்தில் ஒரு உணவு வகையில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

இதைவிட பௌதீக செயற்பாட்டில் பெருமளவான மக்களுக்கு மந்தம் ஏற்படுகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு உடற்பயிற்சி மிகவும் இன்றியமையாததாகும். உடற்பயிற்சியின் மூலம் உங்கள் உடல் ஆளுமையை அதிகரித்து. மன உளைச்சலை குறைத்து நன்றாக உணர வைக்க முடியும். உங்களை விரைவாக தூங்கச் செய்யவும் விழிக்கச் செய்யவும் முன்னேற்றும், உடல் நிறையை கட்டுப்பாட்டுக்குள் பேணும், உங்கள் சக்தியைக் கூட்டும், நீரிழிவைத் தடுக்கும், தசை வலிமையைக் கூட்டுவதோடு, ஏனைய உடல் செயற்பாடுகள் செய்யும் தன்மையைத் தூண்டும். இவ்வாறாக உடற்பயிற்சியும் தொற்றாநோயில் செல்வாக்குச் செலுத்துகின்றது. உளவியல் ரீதியான மன அழுத்தம் காரணமாகவும் தொற்றாநோய்கள் ஏற்படுகின்றன. உளவியல் மனஅழுத்தத்தை வரையறை செய்தலோ அளவடுவிதோ கடினமாகும். தொடர்ச்சியான மனஅழுத்தம் உடல் ஆரோக்கியத்திற்குப் பங்கமாகும். தொடர்ச்சியான மனஅழுத்தத்தால் பின்வாழ்க்கை நிலைகளில் இதயநோய் ஏற்படுவதற்கான அபாயமும் காணப்படும். ஏனைய உடற் தொழிற்பாடுகளுக்கும் வியாதிகளிற்கும் மன அழுத்தம் பங்களிப்புச் செய்யும். இவற்றை இல்லாது செய்வதற்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணியை இனம் கண்டு தீர்வைப் பெறல், ஆழமான சுவாசம், தேவையானளவு நித்திரை போன்றவற்றை மேற்கொள்வது அவசியமாகும்.

மேலும் தொற்றா நோய்களான வெல்ல நீரிழிவு, உயர்குருதி அழுத்தம், புற்று நோய் போன்றவற்றை எடுத்து நோக்கி அவற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றியும் ஆராய்வோம். முதலில் வெல்ல நீரிழிவைப் பற்றி நோக்குவோம். நீரிழிவு என்பது வளர்சிதை மாற்ற நோய்களின் ஒரு தொகுப்பாகும். தேவையான இன்சுலினை

உடல் உற்பத்தி செய்யாத அல்லது உடல் உற்பத்தி செய்த இன்சுலினைப் பலனளிக்கும் விதத்தில் பயன்படுத்த இயலாத நிலையில் இந்நோய் உள்ளவர்களின் இரத்தத்தில் அதிகளவு சர்க்கரை இருக்கும். இந்நோய் உள்ளவர்களுக்கு தொடர்ச்சியான சலப்போக்கு, அசாதாரணமான தாகம் அல்லது நாவறட்சி, நிறையில் விபரிக்கப்பட முடியாத இழப்பு, உச்ச அளவு களைப்பு அல்லது சக்தி இழப்பு, தொடர்ச்சியான பசி, ஆறாத காயங்கள், பாதங்கள் எரிவதைப் போல உணர்தல், சாப்பிட்ட பின் மிகையான வியர்வை போன்ற அறிகுறிகள் ஏற்படும். இந்நோயை சமநிலை உணவை சுவைத்தல், மூன்று நேர பிரதான உணவை மற்றும் இடையே இருமுறை நொறுக்குத்தீனிகள் உண்ணுதல், சாப்பாட்டை தவறாது உண்ணுதல், அதிகளவான இனிப்புள்ள மற்றும் எண்ணெய்த் தன்மையான உணவுகளை உண்ண வேண்டாம், ஒவ்வொரு உணவின் பின்னரும் பழங்களைச் சாப்பிடுதல் போன்ற நற்பண்புகளை கடைப்பிடிப்பதன் மூலம் நீரிழிவு நோயை கட்டுப்படுத்த முடியும்.

உயர்குருதி அழுத்தம் அதிகளவானோருக்கு ஏற்படும் தொற்றா நோய்களில் ஒன்றாகும். குருதியோட்டத்தின் அழுத்தத்தில் தொடர்ச்சியான அதிகரிப்பு காணப்பட்டால் உயர் குருதி அழுத்தமாகும். திடகாத்திரமான இளைஞர் ஒருவருக்கு 120/80mmHg அழுத்தத்தை விட குறைவாக காணப்பட வேண்டும். ஒவ்வொரு 20/10mmHg அழுத்த அதிகரிப்புக்கும் இதயக்குழாய் நோய் ஏற்படும் சாத்தியக்கூறு இருமடங்காகின்றது. ஏனைய தொற்றா நோய்களுடனும் இந்த நோய் தொடர்புடையது. பெரும்பாலும் எந்த அடிப்படைக்காரணமும் இந்நோய்க்கு இல்லை. ஆனால் வாழ்க்கை முறையில் பல காரணங்களோடு தொடர்புபட்டது. இந்நோயானது கட்டுப்பாட்டில் இல்லாதுவிடின் பல சிக்கல்களை ஏற்படுத்துவதோடு அகால மரணங்களுக்கும் காரணமாகிறது. வழக்கமற்ற தலைவலி, மயக்கம் ஏற்படுதல், வியர்த்தல், நித்திரை, குழப்பம், குமட்டல் மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகள் ஏற்படும். உயர்குருதி அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உப்புப் பாவனையைக் குறைத்தல், புகையிலை புகைத்தல், மெல்லுதல், மற்றும் மது அருந்தலை தவிர்க்கவும். தினமும் குறைந்தளவு 30-60 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தல், ஆரோக்கியமான உடல் நிறையைப் பேணுதல் போன்றவற்றினால் உயர் குருதி அழுத்தத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

இதைவிட புற்றுநோயே உயிர்கொல்லி நோயாகும். அசாதாரண மற்றும் கட்டுப்பாடற்ற கலங்களின் பிரிவுகள் உடலில் ஏற்படுவதால் புற்றுநோய்கள் உண்டாகின்றன. இவை உடலின் எந்த உறுப்புக்களிலும் ஏற்படலாம். மிகவும் பொதுவாக பெண்களின் மார்பகம் மற்றும் கருப்பை வாய், வாய்வழி குழி, உணவுக்குழாய், சிறுநீரகம், சிறுநீர்பை மற்றும் தோல் போன்ற இடங்களில் புற்று நோய்கள் விருத்தியடைகின்றன. புகையிலை, மது, ஆரோக்கியமற்ற

உணவுப்பழக்கம், குறைந்த உடற்செயற்பாடுகள், அதிக உடல் பருமன் மற்றும் மன உளச்சல் போன்ற காரணிகளே மிகப்பொதுவான அபாயத்தை ஏற்படுத்துபவையாகும். பெரும்பாலான புற்றுநோய்களை புகையிலை புகைத்தல் மற்றும் மெல்லுதலை தவிர்த்தல், ஆரோக்கியமான நிறையைப் பேணுதல், தினமும் 30 நிமிடம் உடல் செயற்பாடுகளில் ஈடுபடுதல், மன அழுத்தங்களை தவிர்த்தல், தாராளமாக நீர் அருந்துதல் போன்றவற்றின் மூலம் தடுத்துக் கொள்ளலாம்.

ஆகவே தொற்றா நோய்களின் அதிகரித்த தாக்கத்திற்கு எங்களது உணவு உள்ளிட்ட அன்றாட வாழ்க்கை முறை மற்றும் பழக்கவழக்கங்களே காரணமாகும். முறையான உணவுப்பழக்கம், உடற்பயிற்சி என்பவற்றினால் தொற்றா நோய்களின் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறமுடியும். நாம் இவற்றை ஏற்றுக்கொள்ளாது உதாசீனம் செய்து பின்னர் அவஸ்தைப்படுவதையே வழக்கமாக்கிக் கொண்டுள்ளோம். இன்று தொற்றா நோய்கள் மக்களுடன் போராடி உயிரைப் பறித்து வெற்றி பெறும் நிலையே காணப்படுகிறது. இதனை மக்கள் இறைவன் தீர்ப்பு அல்லது தலையெழுத்து என ஏற்றுக் கொண்டு வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். இறுதியாக அதிக ஆபத்து அவலங்களை ஏற்படுத்தும் தொற்றா நோய்கள் குறித்து சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் அவதானமாக தொழிற்படுவதுடன், தொற்றா நோய்கள் தொடர்பில் தெளிவான விளக்கம் பெற்றவர்களாக மக்கள் விளங்க வேண்டும்.

**'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'**

**உ. பிரியங்கா**
[கலைப்பிரிவு A/L 2020 ]

---

# அன்பு

அன்பிற்கு ஆழமில்லை
அன்பிற்கு உயரமில்லை
அன்பிற்கு ஈடில்லை
அன்பிற்கு இணையேதும் இல்லை

வானம் ஒழிந்தாலும்
அன்பு ஒழியாது
கடல் அலை ஓய்ந்தாலும்
அன்பு ஓயாது

என்றும் நிலைத்திருப்பது
அன்பு மட்டுமே
அன்பு இல்லாத மனிதன்
பூமியில் வாழ்ந்தும் பயனில்லை.

**க. அபிராஜ்**
தரம் 02

# யாரொடு நோகேன்

நாளெல்லாம் முயன்றுழைத்து நற்கல்விப் பயிர்வளர்த்து
யாழ்ப்பாணப் புகழையன்று நம்முன்னோர் நாட்டி வைத்தார்
வாள் கம்பு கொண்டு நிதம் வன் குருதிக் கூத்தாடி
பாழ்பட்டு நிற்குமெங்கள் பட்டியரிது உணராரோ?

கோதையரை நல்ல தெய்வமென்று கொண்டாடும் நிலைமாறி
போதைவழி தாம் நடந்து பொறுப்பற்றுப் போவதென்ன
பாதைகாட்டிப் பண்பூட்டும் பாரில் நல்ல கற்பகமாம்
தாதையன்ன பெரியோரும் தம்பாட்டில் இருப்பதென்ன?

அன்பினிய பெற்றோரை ஆற்றல் மிகு பெரியோரை
பண்பினிய ஆசானைப் பாதம் பணிந்த காலம் போய்
கண்மருட்டும் காட்சி நல்கி காசு தன்னைப் பறித்திடும்
நண்ணல் ஒண்ணா நடிகர்தமை நயக்கும் நிலை மாறாதோ

மெய் வருந்தி புகழைத்தந்த மேதினியில் உயர்ந்து நின்ற
கைவினைகள் தானழிந்து களவுகளும் மலிந்ததென்ன
கைபேசி பார்த்திங்கே காலநிதி கரைத்திட்டு
பொய்யான உறவு தேடும் பொல்லாங்கு நேர்ந்ததென்ன

நாவலரும் பாவலரும் நம் தந்தை செல்வாவும்
காவலராய் நின்றுமே காத்திட்ட கலாசாரம்
பாவ இருள் சூழ்ந்து பரிதவிக்கும் நிலை கண்டும்
கேவலராய் இருந்து நாம் கெட்டழிந்து போவோமோ?


**ச. சஞ்சிதா**
A/L [2019]

# புலமை வென்ற புதல்வர்களுடன்...



செல்வி இ. தனுஜா

(2016)



செல்வன் இ. விமோக்ஷன்

(2017)



செல்வி சு. லதுஜா

(2018)



16 வயதின்கீழ் கரப்பந்து அணி மாகாணம் 2ம் இடம்
DSI மாவட்டம் முதல் இடம் (2017.2018), தேசியம்




Anchor Students with Talent - 2018
தொழிநுட்பப் போட்டி மாகாணம் 3ம் இடம்



செல்வி சி. வின்சிகா
சுகாதாரவிருத்தி தேசிய மட்ட கட்டுரைப்போட்டி சிரேஷ்ட பிரிவு 4ம் இடம்,
கத்தோலிக்க திருமறை மாவட்ட நிலை - 3



செல்வி சி.வாணுப்பிரியா
சுகாதாரவிருத்தி தேசிய மட்ட கட்டுரைப்போட்டி
இடைநிலைப்பிரிவு - 12ம் இடம்,

# அம்மா

நான் பார்த்த முதல் தெய்வம் அம்மா
சுமை என்று நினைக்காமல் என்னைச் சுமந்தவளே
எல்லோர் வாழ்விலும் மரணமே எல்லையாக இருந்தும்
மரணத்தின் எல்லை தாண்டி என்னைப் பெற்றவளே

நீ அன்பாய்க் கொடுத்த முதல் முத்தம்
என்றும் என்றும் வேண்டுமம்மா
எனது பசி தீர்த்த பின் நீ பசி காண்பது அதிசயமே
எனது எச்சிலையும் எடுத்து உண்பாயே



நான் உறங்க தங்கத் தொட்டில் இருந்தாலும்
உன் புடவை போதுமம்மா
நீ பாடும் தாலாட்டுப் பாட்டைக் கேட்டு
சந்திரனும் உறங்குமடி

நான் செய்த தவறுக்காய் அடித்தாய்
வலி கண்டது நான் அழுதது நீயம்மா
வானிலிருந்து வந்த மழைத்துளி
என்னைத் தழுவு முன் சட்டென்று

என்னை மூடிய உந்தன் முந்தானை
குடையாக விரியுமம்மா
நான் பிறக்கும் வரை என்னை
உன் வயிற்றில் சுமந்தாய் நடக்கும் வரை இடுப்பில் சுமந்தாய்

அத்தனையும் என்ன செய்து உன் கடன் தீர்ப்பேனம்மா
கடவுளிடம் வரம் வாங்கி
உன்னை என் கருவில் வைத்து பெற்றெடுப்பேன்
என் மகளாக அம்மா.

**சு.தர்சிகா**
தரம்- 09

# நீர் வெறுப்பு நோய்

கண்ணின் இமையாய் எங்களைக் காத்திடும்
கண்ணியம் மிக்க பிராணி நாய் தனை
கனிவுடன் எம் பிள்ளை போன்று பேணி
காலந்தோறும் வேளை உணவுடன் வேண்டிய - நற்சுகாதாரம்
கலந்திட்ட பாசத்தோடு நன்றியறிதலை நமக்கு
தந்திட்டவர்களை நீர் வெறுப்பு நோயிலிருந்து காப்போம்

ஆண்டு தோறும் நோய்த்தடுப்பூசி ஏற்றி - நன்றியுள்ளவர்கள்
மாண்டிடாது கட்டாகாலிகள் ஆகிடா வண்ணம்
தீண்டி நம்மவர் உயிர் குடிக்காது இருக்க - நாய்களினை
கண்டபடி அலைந்திடாது கட்டுப்பாட்டுடன் வீட்டில்
மட்டுடன் கூடிய சுதந்திரத்துடன் வளர்ப்போம்

நீர் வெறுப்புநோய் நாய்களுக்கு வந்திடா வகையில்
நீவீர் நாய்களை உரிய முறையில் வளர்ப்பீர், காப்பீர்
நமக்காக வாழ்பவர்களை நாமும் நல்ல முறையில் பேணுவோம்
உமக்கு நோய் உள்ள நாய்கள் கடித்திடாமல் காப்போம்
கடித்திட்டால் சவர்க்கார நீரால் கழுவி
வேளையுடன் வைத்தியசாலை சென்று உயிர் காப்பீர்
வேதனையின்றி நலமுடன் வாழ்ந்திடுவீர்.

**அ. டிலோஜனா**
தரம் 09

**மீனுக்குக்கூடத் தொல்லை வராது-அது தன்**
**வாயை மூடிக் கொண்டிருந்தால்.**

**சின்னக் கவலைகள் என்பது கொசு போல:**
**ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தால் அது பறந்து ஓடிவிடும்.**

# ஆசானே போற்றி போற்றி

ஆறு வயதினிலே அடி எடுத்து வைக்கும்
மழலை மாதவங்களை
அன்போடு அரவணைத்து ஆசி கூறி
கல்வியைப் போதிக்கும் ஆசானே போற்றி! போற்றி!

அறிவுரையும் ஆக்கமும் ஊக்கமும்
தந்திடும் ஆசானே போற்றி!
அறியாமை நீக்கி எங்கள் உள்ளத்திலே
ஒளி விளக்கை ஏற்றும் ஆசானே போற்றி! போற்றி!

சமுதாயம் என்ற ஆர்வத்துடனே
அறிவுச்சுடர் ஏற்றி வைக்கும் ஆசானே போற்றி
ஆனந்தம் பொங்கிடும் ஆல் போல் விளங்கும்
ஆற்றல் உடைய ஆசானே போற்றி! போற்றி!

ஆயிரமாயிரம் தொழில்கள் இவ்வுலகில் இருப்பினும்
இத் தொழிலுக்கு நிகராய் ஏதுமுண்டோ
இத்தொழில் புரிந்து நின்றொழுகும்
ஆசானே போற்றி! போற்றி!

ச.டிலக்சிகா
தரம் 09

மனிதர்களில் இரண்டு வகையினர் மட்டுமே உண்டு.
ஒன்று திறமையானவர்கள்.
இரண்டு,திறமையைப் பயன்படுத்தாதவர்கள்.

முகத்தை அழகாக வைத்துக்கொள்ள
செலவில்லாத ஒப்பனை புன்னகை.

## பூவே

பூவே நீ மலர்ந்தாய்
என்னைக் கவர்ந்தாய்
புதுப் பொலிவுடன்
புது மணத்துடன்
புதிதாய் மலர்ந்தாய்

பல வர்ணம் கொண்டு நீ
பல வர்ணப் பட்டாம் பூச்சிகள் தேடி வர
தேனைப் பக்குவமாய் கொண்டே
குருவிகள் தனையும் வர வைத்தாய்

இத்தனை அழகு இத்தனை பக்குவம்
இத்தனை மென்மை இத்தனை வர்ணம்
அத்தனையும் ஒருங்குடன் கொண்டே

உனைப் பறித்து அர்ச்சனை செய்திடுவேன்
அழகாய் மாலையது புனைந்திடுவேன்
அன்பது உணர்த்திடக் கொடுத்திடுவேன்

பூவே உனைப்பாடிடவே
வார்த்தை ஏதும் என்னிடமில்லை



**றெ.றெஜீனோல்ட்**
A/L [2020]

**ஆசைப்படுவது மனம்.**
**ஆசைப்பட வைப்பது புத்தி.**
**அவதிப்படுவதோ உடல்.**

**உன் கௌரவம் உன் நாக்கின் நுனியில் உள்ளது.**

**இவ்வளவு நீண்ட வாழ்வில் ஒரே ஒரு முறைதான் சாகிறோம்.**

# அன்னை

அன்னை என்பவள் தெய்வம் - நாம்
அவனியில் அவதரிக்க கருவியானவள்
மூலக்கருதனில் முந்நூறு நாள் சுமந்து
மூச்சு முதல் வழி பொருள் தந்தவள்

அன்னை என் உலகு - பக்குவமாய்
அரவணைத்தென்னை வளர்த்திட்டவள்
பசி நோக்காது பொருள் தந்தவள்
பாலகனென்னை பக்குவமாய் பார்த்தவள்

நடைபயின்று உடையணிந்து - பள்ளிக்கு
நல் மாணவனாய் நான் செல்ல உதவுவாள்
கல்விகளைக் கற்ற நல்ல பிரஜையாக - அவள்
கண் துஞ்சாது எனக்கு அறிவூட்டுவாள்

அன்னை இல்லாது நான் இல்லை
அன்னை இல்லை உலகு இல்லை
அன்னை இல்லாது அன்பு கிடையாது
அன்னை மடிதேடி ஓடுவோம் - அவள்
பாதம் போற்றி புகழ்வோம்

ச.திவ்யா
A/L [2020]

கோபத்தில் ஆரம்பமாவது எல்லாம்
இறுதியில் வெட்கப்படும்படி முடியும்.

ஆபத்து பயத்தையும்,பயம் அதைவிடப் பெரிய ஆபத்தையும் தருகிறது.

வயதானவர்கள் கவலைப்படுவதெல்லாம், தங்களுக்கு வயதாகி விட்டதே என்பதல்ல: மற்றவர்கள் இளமையாக இருக்கிறார்களே என்றுதான்.

# கால மாற்றம்

கொலையுதிர் காலம் போலும்
கோபத் தீ நாக்குகளால்
பூமி கொதித்த படியே
இருக்கின்றது

ஆதி வாழ்க்கை
முடிக்கப்பட்டே விட்டது
பெரும் ஆரவாரங்கள்
வான் நாணும் கட்டடங்கள்
வாசலற்ற வீடுகள்
அமில மழைத் தூறல்கள்
இவை இன்றைக்கு முகவரிகள்

பூமி போதாமலே போய் விட்டது
என் தோள்களும்
எண்ணி வைக்கப்பட்டிருக்கின்றன
எரிக்கப்படுவதற்கு
போர் அது கால வடு
அசுத்த நீர் அது
இன்றைய வாடிக்கை

பட்டங்களும் படிப்புகளும்
பிரமஸ்தானம் வழங்கிடுமா?
இல்லை பிறப்புக் கொள்கை
மாற்றிப் போட்டிடுமா?

புத்தி இல்லாதவர்கள் தான்
இன்றைய மனிதர்கள்
கொலைகள் இவர்கட்டு
பிறப்பற்ற நினைப்புக்கள்

இ.ஜெனுஷா
A/L [2020]

# மெய்யொளி வீசிய தருணங்கள்




ANNUAL GETTOGETHER 2018




இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி 2017




ANNUAL LUNCH 2017




சிறுவர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் 02.12.2017


யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
மாணவர் பாராளுமன்றம் 2017


யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி 2017





# முதியோர்




முதியோர் என்றால் பெரியோர் தானே
சிறியோர் என்றும் பெரியோர் சொல்லை
வாழும் நாளில் கேட்டு நடந்தால்
வாழும் வரைக்கும் உயர்வு உண்டாம்

உழைக்கம் வயதில் அப்பா வாங்கோ
இழைக்கும் வயதில் கிழவர் வாறார்
இப்படி எல்லாம் சொல்லி ஏனோ
செப்படி வித்தை காட்டுகிறீர்

சொத்துக் கொஞ்சம் இருந்தது கண்டால்
மெத்தக் கவனம் கொடுத்திடுவீர்
இல்லை என்றால் பொல்லால் அடியும்
காலால் உதையும்

காவோலை விழ குருத்தோலையும்
கருத்தறியாமல் சிரிக்குது பார்
இந்நிலையை மாற்றிடுவீரே
வந்திடும் உமக்கும் இதே கதிதான்
முதியோரை போற்றி வணங்கிடுவோம்
அவர் சொல் கேட்டு வாழ்ந்திடுவோம்.

**சி. அபிஷன்**
தரம் 02

**மண்ணுக்குள் மறைந்தால்தான் செடியாக முளைக்க முடியும்.**
**-மு.வ**

**மௌனமாக இருப்பது கோழைத்தனம் என்று நினைத்துவிடக் கூடாது.**
**-மொரார்ஜி தேசாய்**

# திசைகாட்டிகள்

நாற்றிசையும் புகழ் மணக்கும்
நாயகரை உருவாக்க
ஏற்ற பணி செய்கின்ற
எங்களது கொற்றவரே
மாற்றம் பெரிதென்று
மாண்புடனே எங்களது - வாழ்வின்
வழி காட்டும் திசை காட்டியானோரே
ஆசிரிய பெருந்தகைகள்
ஆனவரின் பணி பெரிது
ஆங்கிடையோர் சிறிது வரியில்
அவர் புகழ் பாடமுடியாது
மெய்கண்டான் ஆலயத்தை
மெரு கேற்றும் பெரும்சுடர்கள்

வருங்கால சிற்பிகளில்
வண்ணத்தை சேர்த்தோர்கள்
பொன்னமுதச் சுனை போல - எம்
மனதில் வாழ்பவர்கள்

காற்றினிலே வந்து - பெரு
கல்விச் சிறகசைக்க ஏற்ற வழி செய்கின்ற
எங்களது ஆசான்கள்
திண்ணமுறு பயங்கிளிடை
துயிலுகிற சேயினைப் போல்
வண்ணமுறு
வாழ்வமைய
வணங்குகிறோம்.
வரம் தருவீர்.

**அ. மதுஜன்**
A/L [2020]

# முதியவர்களைக் கனம் பண்ணுதல்

முதுமை என்பது இயல்பானது. சிறியவர்களான நாமும் காலவோட்டத்தில் முதியவர்களாக வந்தேயாக வேண்டும். எமது தாய்-தந்தையர், எமக்கு மூத்த சகோதர-சகோதரியர், எமக்கு வழிகாட்டும் ஆசான்கள், சமூகத்திலேயே எம்மோடு உறவு கொள்ளும் பெரியவர்கள், சான்றோர்கள் எல்லோரையும் நாம் ஏன் கனம் பண்ண வேண்டும்? நன்றி தெரிவிக்க வேண்டும் என்பதை ஆராய்வோம்.

அறிவு, ஆற்றல், அனுபவம், வயது ஆகியவற்றால் முதிர்ந்தவர்களை சான்றோரென்றும் பெரியோரென்றும் போற்றுகிறோம். எமது வாழ்வில் கனம் பண்ணுகிறோம். படித்தவரிடத்தும் பண்புள்ளவர்களிடத்தும் நாம் காட்டும் மரியாதையால் அவர்கள் அகமகிழ்வு எய்துவார்; எம்மை வாழ்த்துவர். அவர்களிடமிருந்து நல்ல அறிவுரைகளைப் பெற நாம் முயல வேண்டும். அப் பெரியவர்களின் நல்லாசிகளும் பாராட்டும் நமது வாழ்வு உயர உதவும். இந்த உண்மையை உணர்ந்து அவர்களை நாடி நல்லாசிகளைப் பெறுவோம். “பெரியோர்களை கனம் பண்ணு” என்றும் “மூர்த்தோர் சொல் வார்த்தை அமிர்தம்” என்றும் எம் முன்னோர்கள் எம்மை அறிவுறுத்தியுள்ளார்கள். பணிவு என்ற பண்புக்கு அடையாளம் பெரியவர்களுக்கு அடங்கி மரியாதை செய்வது தான். இதனை வள்ளுவர் “பணியுமாம் என்றும் பெருமை” என்கிறார். எவரொருவர் பணிவாகிய குணத்தைக் கடைப்பிடிக்கிறார்களோ அவர்கள் வாழ்வில் பெருமையுடன் வாழத் தகுதி பெறுகிறார்கள் எனச் சூசகமாக உணர்த்துகிறார். ஆண்டொன்று போனால் வயதொன்று போகின்றதல்லவா? நாம் மூப்பை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது எம்மை வந்து அடையத்தான் போகிறது. வாழ்க்கையில் மூப்பும் பிணியும் இறப்பும் இயல்பானவை; விதிக்கப்பட்டவை. சிறுவர்-சிறுமியராக இருக்கும் நாம் வளர்ந்து, பெரியவர்களாகிப் பல விடயங்களை வாழ்வில் சாதிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். மூப்பை எய்த அவாக் கொள்கிறோம்.

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” “தந்தை சொல் மிக்க மந்திரமில்லை” “தந்தை தாய் பேண்” என்ற மூதுரைகள் எமக்குச் சொல்லும் செய்தி நாம் பெற்றோர்களை மதித்துப் பேணி நடக்க வேண்டும் என்பதேயாகும். இந்த வகையில் பெற்றோர்கள் பிள்ளைகளின் கண் கண்ட தெய்வங்கள் ஆவர். தந்தையும் தாயும் செய்த தியாகத்தால்தான் இவ்விதம் வளர்ந்து உலகில் வாழ்கிறோம் என்பதை நாம் உணர்ந்தால் அவர்களை அலட்சியப்படுத்தும் எண்ணமே நமக்கு வராது.

சமூகத்தில் சிலர் தம் பெற்றோர் முதுமை நிலையை அடையும் போது அவர்களது தியாகத்தை கவனியாது செய்ந்நன்றி மறந்தவர்களாய் அவர்களை உதாசீனம் செய்கின்றனர். அது தவறு மாறாக அவர்களை மாத்திரமல்ல, முதியவர்கள், மூத்தோர்கள் யாராயினும் அவர்களைப் புரிந்து கொள்வதற்கான பொறுமை எமக்கு

அவசியம். அத்தோடு அவர்களுக்கும் எமக்கும் மத்தியில் புரிந்துணர்வு ஏற்படவும் வேண்டும்.

முதியோர்கள் தங்களது பழைய ஆளுமை இயல்புகளைப் படிப்படியாக இழக்கிறார்கள். எனவே எப்பொழுதும் மற்றவர்கள் தம் மீது அக்கறை காட்டுவதையும் அன்பு செலுத்துவதையும் விரும்புகிறார்கள். உடல் நலக்குறைவு, தளர்வு, நடமாட முடியாமை என்பன அவர்களது முக்கியமான பிரச்சினைகளாகும். கடின வேலைகளை வயது ஏற ஏற அவர்களால் செய்ய முடியாது. அடிக்கடி நோய் நொடி வரும் வேளையில் தம் எதிர்காலத்தை நினைத்து உள்ளூரப் பயம் கொள்பவர்களாகவும் இருப்பர். எனவே பிள்ளைகள் முதியவர்களை நன்கு அனுசரித்து நடக்கத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். தமக்கு ஆறுதல் சொல்வதற்கும் தம்மை அன்புடன் கவனிப்பதற்கும் யாராவது நெருங்கிய உறவினர்கள் வரமாட்டார்களா என்ற ஏக்கம் அவர்களிடம் காணப்படலாம். அவர்கள் செய்யும் காரியங்களைக் கொண்டு அவர்கள் மனம் நோகும்படி சிரிக்கவோ எள்ளிநகையாடவோ கூடாது. “காவோலை விழ குருத்தோலை சிரிக்கிறதே” என்ற வார்த்தை எத்தனை அற்புதமானது? நமக்கும் எதிர்காலத்தில் இதே நிலைமை வரமென்பதை நாம் மறக்கக்கூடாது.

அன்பு என்பது அள்ளி அள்ளிக் கொடுக்கக் கொடுக்க குறையாத செல்வம். அதனால் சாதிக்க முடியாதது எதுவுமேயில்லை. மனதர்களாகப் பிறந்த எமக்கு அது தான் ஆயுதம். எனவே சிறுவயதிலிருந்தே இந்த உண்மையை உணர்ந்து மூத்தோர்களாகிய எமது பெற்றோர், உற்றார், உறவினரை மாத்திரமன்றி ஏனையோரையும் நேசித்துக் கனம் பண்ணப் பழகிக்கொள்ள வேண்டும். பொறுமை, அன்பு, சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு போன்ற நற்பண்புகளுடன் முதியோர்களை அணுகினால் அதன் பிரதிபலன்களை நாமும் முதுமையில் அனுபவிக்கலாம். எனவே முதியோரைப் பேணி, அவர்களை அனுசரித்து, அவர்களோடு அன்புடன் பழகுவோம்.

**ச. சங்கவி**
தரம்- 06

**வயது செல்லச்செல்ல தோல் சுருங்கி விடுகிறது. ஆனால்
மகிழ்ச்சியை விட்டுவிட்டால் வாழ்வே சுருங்கிவிடும்.**

**நாள் என்பது இரவையும் சேர்த்துத்தான்.
பூ என்பது காயையும் சேர்த்துத்தான்.
கடல் என்பது நுரைகளையும் சேர்த்துத்தான்.
வாழ்க்கை என்பது ரணங்களையும் சேர்த்துத்தான்.**

# இலங்கையின் முருகைக் கற்பாறை

பவள அல்லது முருகைக் கற்பாறைத் தொடர்கள் கடலில் ஒரு வகைச் சேதனப் பாறையாகும். தரையில் உள்ள கருங்கல் பாறையல்ல இவை. இவை பல்லின உயிர்களினால் ஆனவை. அத்துடன் இவை சமுத்திரங்களிலும் கடற்கரையிலும் காணப்படும்.

இப் பாறையில் உயிரினங்கள் தமக்குத் தேவையான தாவரப்போசனையையும் ஜீவசக்தியையும் விசத்தன்மை உள்ள சூணாக்கன்திலே (zooxanthallae) என்னும் தாவர இழையங்களில் பெறுகின்றன. இத் தாவரம் சூரியஒளியையும் காபனீரொக்சைட்டையும் பெற்று தேவையான போசாக்கையும் சக்தியையும் (pthotosynthesis) ஒளித்தொகுப்பு முறையில் பெறுகின்றது.

இப் பாறைகள் பெரும்பாலும் வெப்ப வலயத்திலும் இடைவெப்ப வலயத்திலும் காரனீரில், அதாவது 25 வட அகலாங்குப் பிரதேசத்திலும், 25 தென் அகலாங்குப் பிரதேசத்திலும் உருவாகுவதைக் காணலாம். இங்கு இவை உருவாகுவதற்கு ஏற்ற சூரியஒளியும், தட்ப வெப்ப நிலையும் சாதகமாக உள்ளன. முருகைக்கற்பாறைகளும் ஏற்ற தெளிந்த நீரில் அடையற்படிவுகள், இழையங்கள் வளர்வதற்கு ஏற்றதாக இருக்கும் இங்கு இதற்கு தேவையான 25-30c சீதோஷ்ணமும் வாய்ப்பாக இருக்கும். இங்கு தேவையான உவர்த்தன்மையும் தெளிந்த நீரில் அதிகமாக இருக்கும்.

பொதுவாக உலகின் பல்வேறு தாவரங்களுக்கும், உயிரினங்களுக்கும் இப் பாறைகளே “தாயகம்” என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இப் பவளப் பாறைகளின் உறைவிடமே கடல் வாழ் உயிரினங்களின் பாலூட்டும் தளமாக (Nursery Grounds) விளங்குகின்றது. மேலும் கடற்கரையில் வாழும் மக்கள் குழுமங்களுக்கு (costal communities) இப் பாறை திட்டுக்கள் அன்றாட ஜீவனோபாயத்திற்கு உதவுகிறது. நாட்டின் பொளாதார வளத்துக்கான சுற்றுலாப் பயணிகள் வருகைக்கும் உல்லாசத்திற்கும் தளமாக விளங்குகின்றன. இப் பாறையில் வாழும் உயிரினங்களிலுள்ள முக்கியமான மருந்து மூலிகைத் துணிக்கைகள் (pharmaceitical properties) புற்று நோய் சிகிச்சைகளுக்கு உதவுகின்றன.

**சி.பவதாரணி**
A/L [2020]

# உடற் கல்வி

நமது மனநலனுக்கும் அறிவு வளத்திற்கும் உடல் நலமே அடிப்படையாகும். இதனால் தான் மகாகவி பாரதியாரும் "உடலினை உறுதி செய்ய" என பணித்தார். உடல் வளமே ஒருவனது பல் துறை வளர்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளது என பன்னெடுங்காலமாக வலியுறுத்தப்படுகின்றது.


"சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்பது பழமொழி. உடல் ஆரோக்கியமாக இருந்தால் தான் எத்தகைய பணிகளையும் மேற்கொள்ள முடியும். நாம் பள்ளிப் பருவத்தில் ஏட்டுக்கல்வியோடு உடற்கல்வியும் பயில வேண்டும். உடற்கல்வி பெறாது ஏட்டுக்கல்வியில் நாம் எவ்வளவு அடைவுகளைப் பெற்றாலும் நாம் முழுமையான கல்வி அறிவு பெற்றவர்கள் ஆகி விட முடியாது. உடற்கல்வியானது உடல் வளத்தை மட்டும் மேம்படுத்துவது அல்ல. அது நம் உள வளத்தையும் மேம்படுத்துகின்றது.

விளையாட்டு உடற்கல்வியின் முக்கிய அம்சமாகும். விளையாட்டுப்போட்டிகளில் ஈடுபட்டு வெற்றி வாகை சூடுவோரை மக்கள் பெரிதும் பாராட்டுவர். விளையாட்டுக்களில் சாதனைகளை நிலை நாட்டும் போது அவர்களுடைய பெயர் மக்கள் மனதில் பதிந்து விடுகின்றது. எனவே உடற்பயிற்சியை உயிராக கொண்டு முயன்றிட வேண்டும். மற்றும் நாம் உடற்கல்வியை பெறுவதன் மூலம் பரிவு, சுயகட்டுப்பாடு, ஊக்கம் போன்ற அரிய பண்புகளை வளர்த்துக் கொள்ளலாம்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" என்ற திருமூலரின் வாக்கினை நெஞ்சில் நிறுத்த வேண்டும். உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன். உயிர் வளர்த்தேன் என்று அவர் கூறும் அறிவுரைப்படி நமது உடம்பினை வளர்த்திட வேண்டும். உடற்கல்வியனை நன்கு கற்று உடலின் ஆற்றலைப் பெருக்கி உலக சாதனை நிலைநாட்டிட முயல்வோம்.

**செ.ரிலக்சனா**
தரம் 11

# பறக்கும் மீன்கள்



சமுத்திரங்களில் பறக்கும் மீன்கள் (flying fish) என்றொரு வகை மீன்களுள்ளன. அவை பறப்பது வினோதமான காட்சி. விமானம் பறப்பதற்கு முன் தரையில் ஓடுவது போல இந்த வகை மீன்கள் நீரில் படுவேகமாக நீந்தும். பின்னர் துடுப்புப் போன்ற முன்னுறுப்பை விரித்துக் கொண்டு காற்றில் பறக்கும். பறக்கும் போது விரியும் துடுப்புக்களை இந்த மீன்கள் தசைநார்களின் உதவியால் விறைப்பாக வைத்திருக்கும்.அலைகளில் மோதிக்கொண்டே இவை நீருக்கு மேல் காற்றில் மிதக்கும் போது அழகாக இருக்கும். பறக்கும் போது விரியும் துடுப்புகள் இவை மீண்டும் நீரில் புகுந்ததும் சுருங்கி இயல்பான நிலைக்கு வந்துவிடுகின்றன. இப் பறக்கும் மீன்கள் 365 மீற்றர் தூரம் வரை கூடப்பறக்கும் இயல்பின. இவை பொதுவாக 5 சென்ரிமீற்றரிலிருந்து 45 சென்ரிமீற்றர் நீளம் வரை வளரக்கூடியன. இவை நீர் மட்டத்திலிருந்து அதிக பட்சம் கப்பலின் மேல்தள உயரம் வரை பறக்கின்றன. அதனால் தாமாகவே கப்பலின் மேல்தளத்தில் விழுந்து விடுவதுண்டு. உலகின் எல்லா கடல்களிலும் இவ்வகை மீன்கள் உள்ளன. ஆனால் அரிதாகவே காணப்படுகின்றன.

**சி.நிதர்சிகா**
தரம் 08

**ஆற்றலை வெளிப்படுத்தும் ஆற்றல் இல்லாவிட்டால் அந்த ஆற்றல் மதிப்பற்று போய்விடுகிறது.**
**- நெப்போலியன்**

**இனிமையாக பேசுபவனுக்கு பகைவர்கள் இருக்கமாட்டார்கள்.**
**-கிருபானந்த வாரியார்.**

**துன்பமும் ஏழ்மையும் போதிப்பதுபோல் வேறொன்றும் போதிக்கமுடியாது.**
**-விவேகானந்தர்.**

# தொற்றாத் தன்மை நோய்களைத் தடுப்பதில் உடல் உழைப்பின் அவசியம்

நுண்ணங்கித் தொற்றுக்கள் அல்லாததும் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்றாததுமான எமது உடலின் வெவ்வேறு செயற்பாடுகளின் வேறுபாடுகள் காரணமாக ஏற்படக்கூடியதுமான நோய்களே தொற்றாநோய்கள் எனப்படுகின்றன.

தொற்றாத் தன்மை நோய்கள் தீவிரமானவை, நாட்பட்டவை என இரு வகைப்படும். உணவு நஞ்சாதல், பாம்புக்கடி, மின்சார அதிர்ச்சி, விபத்துக்காயங்கள் என்பன தீவிரமான தொற்றாத்தன்மை நோய்களாகும். நீரிழிவு நோய், உயர்குருதி அமுக்கம், புற்றுநோய்கள், இதயநோய், மனநோய் என்பன நாட்பட்ட தொற்றாத்தன்மை வாய்ந்த நோய்களாகும்.

இத்தொற்றாதநோய்களைத் தடுப்பதில் எமது உடல் உழைப்பு மிகவும் அவசியமானது. தொற்றாத நோய் ஏற்படுவதற்கு வயதும் ஒரு காரணியாகும். வயது என்பது எம்மால் மாற்ற முடியாத காரணியாகும். எனினும் உடற்பருமன், உணவுப் பாவனை, உள நெருக்கிடை போன்றன எமது உடல் உழைப்பால் மாற்றக் கூடிய காரணிகளாகும்.

ஒருவர் நோய்வாய்ப்படும்போது அவர் மட்டுமன்றி அவரது குடும்ப அங்கத்தவர்களும் அவர் வாழும் நாடும் குடும்ப பொருளாதார சமூகப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். அவரின் நோய் நிலைமை அவரையும் அவர் சார்ந்த குடும்பத்தினரையும் உளநெருக்கிடைக்கு ஆளாக்கும்.

தொற்றாத நாட்பட்ட நோய்களை முற்றாக குணப்படுத்த முடியாது. எனவே நீண்டகாலச் சிகிச்சை பரிசோதனைக்கு பெருமளவு பணச்செலவு ஏற்படும். நோயின் காரணமாக உயிரிழப்பு ஏற்படும் போது அந்நோயாளியில் தங்கி வாழ்வோர் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். எனவே தொற்றாதநோய்களிலிருந்து தவிர்த்திருப்பதற்காக நாம் சிறப்பான வாழ்க்கைக் கோலங்களை பின்பற்றுதல் அவசியம். அத்துடன் அவ்வகை நோய்கள் தொடர்பாக விழிப்புடனிருந்து சிகிச்சை பெற்றுக் கொள்வதும் அவசியமாகும்.

தொற்றாநோய்களை நாம் எவ்வாறு உடல் உழைப்பின் மூலம் தடுக்கலாம் என அவதானிப்போமாயின் ஆரோக்கியமான உணவு வேளையைப் பெற்றுக் கொள்ளலைக் குறிப்பிடலாம். இதற்காக இயலுமான எல்லா நேரங்களிலும் இயற்கையான, புதிய

உணவுகளை உட்கொள்ளல், கொழுப்பு, உப்பு, சீனி என்பவற்றை குறைவாக உட்கொள்ளல், பல்வேறு வகையான மரக்கறி மற்றும் பழ வகைகளிலிருந்து குறைந்தது ஐந்து வகைகளையேனும் உணவுடன் தினமும் சேர்த்துக்கொள்ளல், சுத்தமான குடிநீரைப் பயன்படுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

தினமும் உடற்பயிற்சியில் ஈடுபடல், தனது வயதிற்கும் உயரத்திற்கும் ஏற்ற உடல் நிறையைப் பேணிக் கொள்ளல், போதியளவு நித்திரையும் ஓய்வும் பெற்றுக் கொள்ளல், உள நெருக்கிடையை முகாமை செய்தல், புகைப்பிடிப்பதிலிருந்தும் போதைப் பொருட்களின் பாவனையிலிருந்தும் விலகியிருத்தல், அடிக்கடி வைத்திய பரிசோதனைகளையும் சிகிச்சைகளையும் பெறல், தனது பரம்பரையில் இவ்வகை நோய்களை உடைய மூத்தோர் காணப்பட்டால் இளம் வயதிலிருந்தே சிறந்த வாழ்க்கைக் கோலமொன்றைப் பின்பற்றல் போன்ற உடல் உழைப்புக்களின் மூலமும் தடுக்கலாம்.

தீவிரமான தொற்றாநோய்களைத் தடுப்பதற்காக நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவும் உடல் உழைப்பின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக உணவுகளுக்கு அருகில் நஞ்சுப் பொருட்களை வைக்காது விடல், பழுதடைந்த உணவை உட்கொள்ளாதிருத்தல், உலர் உணவுகளை வாங்கும் போது காலாவதித் திகதியைப் பார்த்து வாங்குதல், உணவை மூடி வைத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அடுத்து விபத்துக்கள் ஏற்படலைத் தடுப்பதற்காக வாகனங்களை சரியான விதி முறையில் செலுத்துதல், உயர் மலைகளில் ஏறும் போது கவனமாக ஏறுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தொற்றாத் தன்மை நோய்களைத் தடுப்பதற்குச் சிறந்த வாழ்க்கைக் கோலங்களைப் பின்பற்ற வேண்டும். அத்துடன் நோய் ஏற்பட்டிருப்பின் உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதும் முக்கியமானதாகும்.

**இ. தனுஜா**
தரம் 07

# விடுகதைகள்

பச்சைக்கிளி பெண்ணுக்கு உடம்பெல்லாம் முள்ளாம் அது என்ன?
பலாப்பழம்

பிறை போல இருக்கும் அண்ணன் பயிர் பச்சை எல்லாம் அறுத்திடுவான் அது என்ன?
அரிவாள்

கடலுக்குள் பூத்தது கோயிலிலே முழங்குவது அது என்ன?
சங்கு

பூக்கள் கொட்டக் கொட்ட அள்ள முடியவில்லை அது என்ன?
மழை

ஒன்று போனால் மற்றொன்று வாழாது அது என்ன?
செருப்பு

எத்தனை முறை திறந்து மூடினாலும் ஓசை வராத கதவு அது என்ன?
கண்

கடல் நீரில் வளர்ந்து மழை நீரில் மடிவது அது என்ன?
உப்பு

எங்க அக்கா சிவப்புக் குளித்தால் கறுப்பு அது என்ன?
அடுப்புக்கரி

தரையில் இருப்பான் தண்ணீரில் மிதப்பான் அது என்ன?
படகு

ஆயிரம் பேர் வந்து போனாலும் வந்த சுவடு தெரியாது அது என்ன?
எறும்பு

**ஜெ.நிலக்சனா**
தரம் 01

**உங்களுக்கு அவசியமில்லாததை நீங்கள் வாங்கினால் சீக்கிரமே உங்களுக்கு அவசியமானவற்றை விற்க நேரிடும்.**
**-ரிச்சர்ட் சாண்டர்ஸ்.**

**ஒருமுறை அறிவாளியுடன் பேசுவது, ஒரு மாதம் நூல்களைப் படிப்பதைவிட அதிக நன்மை தரும்.**
**- யாரோ.**

# குருவி கொடுத்த விதை

ஓர் ஊரில் பெரிய பண்ணையார் ஒருவர் இருந்தார். அந்த ஊரில் இருந்த பெரும்பாலான நிலங்கள் அவருக்கு தான் சொந்தம். அவரிடம் முனியன் என்ற உழவன் வேலை பார்த்து வந்தான். அவனுக்கு குடிசை ஒன்றும் சிறிதளவு நிலமும் இருந்தது. பண்ணையரிடம் வந்த அவன் ஐயா! எல்லா நிலத்திலும் உழுது விதை நட்டு விட்டார்கள் எனது நிலம் மட்டுமே வெறுமனே உள்ளது. நீங்கள் சிறிது தானியம் தாருங்கள் என் நிலத்திலும் விதைத்து விடுகிறேன் என்றான். என் நிலத்திலேயே உழுது பயிரிடு சொந்தமாக பயிரிட வேண்டாம். பண்ணையார் ஆகும் ஆசையைக் கைவிடு கூலியாளாகவே இரு அரை வயிற்றுக்கு கஞ்சியாவது கிடைக்கும் என்று கோபத்துடன் கூறினார் பண்ணையார். சோகத்துடன் வீடு திரும்பினான் அவன். தன் மனைவியிடம் நாம் வளம் பெறுவது! பண்ணையாருக்கு பிடிக்கவில்லை தானியம் தர மறுத்து விட்டார். நம் குழந்தைகள் எப்போதும் போல பட்டினி கிடக்க வேண்டியது தான். இது தான் நம் தலைவிதி என வருத்தத்துடன் கூறினான்.

அவர்கள் குடிசையில் குருவி ஒன்று கூடு கட்டியது. இதைப் பார்த்த அவன் மனைவி நம் குடிசை புயலுக்கும் மழைக்கும் எப்பொழுது விழும் என்று நாம் அஞ்சுகின்றோம். இங்கு வந்து கூடு கட்டுகிறது பாருங்கள் என்று மனைவி கூறினாள். பாவம் வாய் பேச முடியாத உயிர் அது நிலைமை புரிந்தவுடன் அதுவே இங்கிருந்து போய் விடும் என்று கூறினான். கூட்டில் அந்தக் குருவி நான்கு முட்டைகள் இட்டது. நான்கும் குஞ்சுகளாயின. திடிரென்று அந்தக் குருவிக் கூட்டிற்குள் பாம்பு நுழைந்தது. குஞ்சுகளைப் பிடித்து சாப்பிடத் தொடங்கியது. அவை அலறின சத்தம் கேட்ட உழவன் பாம்பை அடித்துக் கொன்றான். ஒரு குஞ்சு மட்டும் காயத்துடன் தப்பியது. அதைக் கையில் எடுத்து அன்போடு அதற்கு மருந்து தடவி கூட்டில் விட்டான். அதற்கு உணவளித்தான். சில நாட்களில் அந்தக் குருவி நலமடைந்து கூட்டை விட்டுப் பறந்து சென்றது.


உழவனோ தினமும் சாப்பாட்டிற்கு கஸ்டப்பட்டு வந்தான். ஒரு நாள் அவனது கதவு தட்டும் சத்தம் கேட்டது வெளியே சென்று பார்த்தான் . அவன் காப்பாற்றிய குருவி வந்து நின்றது. அது உழவனிடம் மூன்று விதைகளைக் கொடுத்து உனது தோட்டத்திலே நடு என்று கூறி பறந்து சென்றது. அவனும் நட்டான். அடுத்த நொடியே மூன்றும் பூசணிக்காயாக மாறியது. அதனை வீட்டிற்கு எடுத்துச் சென்று பூசணிக்காயை வெட்டினான். என்ன ஆச்சரியம் பூசணிக்காய்களில் இருந்து விதவிதமான உணவுப்பொருட்கள், நகைகள், ஆடைகள், பொற்காசுகள் என குவிந்தன. சில நாட்களில் அவன் பெரும் செல்வந்தன் ஆனான்.

இதை அறிந்த பண்ணையார் அவனிடம் வந்து என்ன நடந்தது நீ எப்படி பணக்காரன் ஆனாய் என்று கேட்டார். அவனும் நடந்தவற்றைக் கூறினான். அவரது பேராசை தானும் அவ்வாறே செய்வோமென குருவி கூடு கட்டினார். குருவியும் வந்தது. நான்கு முட்டைகள் இட்டு குஞ்சும் பொரித்தது. ஆனால் பாம்பு வரவில்லை. தானே மூன்று குஞ்சுகளைக் கொன்றார். ஒரு குஞ்சை பாசமாக வளர்ப்பது போல் நடித்தார். குருவியும் கூட்டை விட்டு பறந்தது. ஒருநாள் அவரது கதவைத் தட்டி அவரிடமும் மூன்று விதைகளைக் கொடுத்தது. அவரும் அதை நட்டார். பூசணிக்காய்கள் முளைத்தன வீட்டிற்கு எடுத்துச் சென்று வெட்டினார். என்ன கொடுமை அதற்குள் பூச்சி, பாம்பு, தேள், நெருப்பு என்பன இருந்தன. உடனே அவரது வீடு தீப்பற்றி எரிந்தது. கொடுமை புரிந்த பண்ணையார் அழிந்தார் என மக்கள் குதூகலித்தனர்.

**பேராசை பெரும் அழிவு**

**ர.டிமல்சாந்**
தரம் 01

## கிளி



கிளி பச்சை நிறம்.
கிளியின் சொண்டு சிவப்பு.
கிளி கீ.. கீ.. என்று கத்தும்.
கிளி பறந்து செல்லும்.
கிளி பழங்களை விரும்பி உண்ணும்.

**ச.சுகர்ணன்**
தரம் 01

## பழைய கலையம்சங்களும் மன்னர்களும்

| | |
|---|---|
| அவுக்கண புத்தர்சிலை | - தாதுசேனன் |
| சிகிரியா | - காசியப்பன் |
| எம்பக்க தேவாலயம் | - 5ம் புவனேகபாகு |
| அபயகிரி விகாரை | - வலகம்பா மன்னன் |
| ருவன்வெலிசாய | - துட்டகைமுனு |
| தூபராம | - தேவநம்பியதீசன் |
| இசுறுமுனி விகாரை | - தேவநம்பியதீசன் |
| யாப்பகூவ | - 7ம் புவனேகபாகு |

**த.நிதுர்சி**
தரம் 05

# நினைவில் வைத்திருக்க வேண்டியவை

| | |
|---|---|
| மிகப் பெரிய வெகுமதி | - மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | - பணிவு |
| மிகப் பெரிய தேவை | - நம்பிக்கை |
| மிகக்கொடிய நோய் | - பேராசை |
| மிகவும் சுலபமானது | - குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விடயம் | - பொறாமை |
| நம்பக்கூடாதது | - வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | - நம்பிக்கைத்துரோகம் |
| செய்யக் கூடியது | - உதவி |
| விலக்க வேண்டியது | - விவேகம், சோம்பேறித்தனம் |
| வருவதும் போவதும் இரண்டு | - இன்பம், துன்பம் |
| வந்தால் போகாதது | - புகழ்ச்சி, பழி |
| போனால் வராதவை | - மானம், உயிர் |
| உயர்வுக்கு வழி | - உழைப்பு |
| நழுவ விடக் கூடாதது | - வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | - நட்பு |
| தானாக வருபவை | - இளமை, முதுமை |
| தன்னுடன் வருவது | - பாவம், புண்ணியம் |
| அன்பு விளைப்பது | - ஒற்றுமை |
| அகந்தை விளைப்பது | - வேற்றுமை |
| அடக்க முடியாதவை | - பசி, தாகம் |
| நம்மை விட்டுப் பிரியாதவை | - பந்தம், பாசம் |
| எல்லோருக்கும் சமமானது | - இறப்பு, பிறப்பு |
| கண்கண்ட தெய்வம் | - தாய், தந்தை |

**S. லதுஜா**
தரம் 05

# அகர வரிசையில் பழமொழிகள்

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்

இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை

ஈட்டி எட்டின மட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்.

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.

எட்டிப் பளுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது

ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா?

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி.

**வ. கஜீபன்**
தரம் 06

# எனது அப்பா

எனது அப்பாவின் பெயர் அ.இரத்தினசிங்கம்
எனது அப்பா மிகவும் அன்பானவர்.
எனது அப்பா எனக்கு பென்சில், கொப்பி வாங்கித் தருவார்.
எனது அப்பா எனக்கு பாடம் சொல்லித் தருவார்.
நான் தவறு செய்தால் அன்பாக புத்திமதி கூறுவார்.
நான் எனது அப்பாவை மிகவும் நேசிக்கின்றேன்.

**இ. அனுஷ்கா**
தரம் 02

## என் அம்மா

எனது அம்மாவின் பெயர் மதிவதனி.
அம்மா உணவு சமைப்பார்.
பாடம் சொல்லித் தருவார்.
எனக்கு உணவு ஊட்டுவார்.
நான் அம்மாவை அன்பு செய்கின்றேன்.
அம்மாவும் என்னை அன்பு செய்கிறார்.

**சி.ரஸ்மிகா**
தரம் 01

---

## சிரிக்க வைக்கும் சிரிப்பொலிகள்

வயோதிபர்: என்னுடைய ஐந்து சன்களும் என்னைக் கைவிட்டு விட்டார்கள். இப்ப ஆறாவது சன் தான் கை கொடுக்கிறான்.
மற்றெருவர்: அது யார் ஆறாவது சன்?
வயோதிபர்: அவர் தான் பென்சன்.

---

பொலிஸ்: எதுக்கு உன்னோட மனைவியை தண்ணியில் தள்ளி விட்ட?
அவன்: எப்போ பார்த்தாலும் உன்னால தான் முழுகாம இருக்கேன். முழுகாம இருக்கேன்னு சொல்றா, அது தான் சரி போய் முழுகிட்டு வரட்டும்னு தள்ளி விட்டேன் சேர்.

---

பையன்: அப்பா ஆசிரியர் என்னை மரம் போல வளர்ந்திருக்கியே பதில் தெரியல்லையான்னு கேட்டார்.
தந்தை: செம்மரமா? தேக்கு மரமான்னு கேட்டுட்டு வாடா

---

பெண்: ஏன்டி உன்ர லவ்வர கழட்டி விட்டுட்டே?
நண்பி: அப்புறம் என்னடி? அவருக்கு இரண்டு தடவை போண் பண்ணினேன். இரண்டு தடவையும் நீங்கள் தொடர்பு கொண்ட எண் வேறு ஒருவருடன் தொடர்பில் இருப்பதால் சிறிது நேரம் கழித்து முயற்சிக்கவும்ன்னு சொல்றாங்க. நல்ல வேளையடி ஏமாறாம தப்பிச்சுட்டேன்.

**ச.சஞ்சீபன்**
A/L 2020

# பிரதான வீதிகளின் பெயர்

A1 - கொழும்பு - கண்டி
A2 - கொழும்பு - வெள்ளவாய
A3 - போலியகொட - புத்தளம்
A4 - கொழும்பு - மட்டக்களப்பு
A5 - பேராதனை - செங்கலட்டி
A6 - அம்பேபுஸ்ஸ - திருகோணமலை
A7 - அவிஸ்ஸவெல - இரத்தினபுரி
A8 - பாணாந்துறை - இரத்தினபுரி
A9 - கண்டி - யாழ்ப்பாணம்
A10 - கண்டி - புத்தளம்
A11 - மரதன்கடவெல - திருகண்டிமடு
A12 - புத்தளம் - திருகோணமலை
A13 - அநுராதபுரம் - கல்கமுவ
A14 - மதவாச்சி - தலைமன்னார்
A15 - மட்டக்களப்பு - திருகோணமலை
A16 - பேரகல - ஹாலிஎவ
A17 - காலி - மாதம்பே
A18 - பெல்மதுளை - நோனாகம
A19 - பெல்காவெல - கேகாலை
A20 - அநுராதபுரம் - இரம்பேவ
A21 - கேகாலை - கரவனல்ல
A22 - பசறை - மொனராகல
A23 - வெள்ளவாய - எல்ல
A24 - மாத்தறை - அங்குரஸ்ஸ
A25 - சியன்யலன்துவ - அம்பாறை
A26 - கண்டி - படியத்தலாவா
A27 - அம்பாறை - மகாஓயா
A28 - அநுராதபுரம் - படேனியா
A29 - வவுனியா - கொரவப்பொத்தான
A30 - வவுனியா - பறையனான் குளம்
A31 - காரைதீவு - அம்பாறை
A32 - நாவற்குழி - மன்னார்
A33 - ஜதஎல - யக்எல
A34 - மாங்குளம் - முல்லைத்தீவு
A35 - பரந்தன் - முல்லைத்தீவு

- **கி. திரிஷா,** தரம் 07

## விநோத உயிரினங்கள்

அதிக நீர் அருந்தும் பறவை - புறா
மிகச் சிறிய முட்டையிடும் பறவை - தேன்சிட்டு
சத்தமிடாத விலங்கு - ஒட்டகச்சிவிங்கி
ஞாபக சக்தி கூடிய விலங்கு - யானை
நீல நிற இரத்தத்தை உடைய கடல் உயிரினங்கள் - நண்டு, இறால்
பல்லில்லாத முலையூட்டி - தேவாங்கு
கடல் நீரைப் பருகும் ஒரேயொரு பறவை - பென்குயின்
பறக்கும் போதே தூங்கும் பறவை - ஆல்பட்றாஸ்
மிகப் பெரிய வாயுள்ள விலங்கு - நீர்யானை
பித்தப்பை இல்லாத முலையூட்டி - எலி
நாக்கு இல்லாத ஊர்வன - முதலை
பறக்கும் முலையூட்டி - வௌவால்
நீந்தத் தெரியாத விலங்கு - ஒட்டகம்
தான் உண்ட எலும்பை ஜீரணிக்கும் ஆற்றலுடைய ஒரேயொரு உயிரினம் - முதலை

**சு. கிருத்திகா**
தரம் 07

## சர்வதேசக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| வெண்புறா, ஒலிவ்மரத்தின் இலை | ⇨ | சமாதானம் |
| சிவப்புச்சக்கரம் | ⇨ | வளர்ச்சி |
| சிவப்பு முக்கோணம் | ⇨ | குடும்பக் கட்டுப்பாடு |
| சிவப்பு விளக்கு | ⇨ | மருத்துவமனை, ஆபத்து, நிறுத்து |
| சிவப்புக்கொடி | ⇨ | உலகத் தொழிலாளர் அமைப்பு புரட்சி |
| கறுப்புக்கொடி | ⇨ | எதிர்ப்பு, சோகம், மரணம் |
| மஞ்சள் கொடி | ⇨ | தொற்றுநோய் |
| செஞ்சிலுவை | ⇨ | மருத்துவ உதவி |
| செம்பிறை | ⇨ | அரபு நாடுகளின் செம்பிறைச் சங்கம் |
| கையில், சட்டையில் கறுப்புத்துணி | ⇨ | துக்கம் |
| அரைக்கம்பத்தில் தேசியக்கொடி | ⇨ | இரக்கம் |
| தலைகீழான கொடி | ⇨ | துன்பம் |
| வெள்ளைக் கொடி | ⇨ | சமாதானம், பௌத்தர்களின் துக்கம் |
| பச்சை விளக்கு | ⇨ | அனுமதி |
| தாமரை | ⇨ | பண்பாடு, நாகரிகம் |

**இ. தனுஜா**
தரம் 07

## தமிழிலும் சிங்களத்திலும் ஒத்து உச்சரிக்கும் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| ☐ பென்சில் | ■ පැන්සල් | ☐ லீக்ஸ் | ■ ලීක්ස් |
| ☐ கரட் | ■ කැරට් | ☐ ரம்புட்டான் | ■ රඹුටන |
| ☐ மைனா | ■ මිනි | ☐ சாரம் | ■ සාරය |
| ☐ அம்மா | ■ අම්මා | ☐ அக்கா | ■ අක්කා |
| ☐ மாமா | ■ මාමා | ☐ ஆச்சி/பாட்டி | ■ ආච්චි |
| ☐ பாண் | ■ පාන් | ☐ வடை | ■ වඩේ |
| ☐ அப்பம் | ■ ආප්ප | | |

**வ. யஸ்மினா**

தரம் 07

## எருதும் கழுதையும்

ஒரு குடியானவனுக்கு கடவுள் அருளால் ஒரு வரம் கிடைத்திருந்தது. அவனுக்கு விலங்குகள் பேசுவதை புரிந்து கொள்ளும் ஆற்றல் இருந்தது. ஒரு நாள் கழுதை எருதோடு பேசுவதை கேட்க நேர்ந்தது. கழுதை எருதைப் பார்த்து ஏன் இவ்வளவு கடுமையாக நீ வேலை செய்கின்றாய் என்னைப் பார் நான் சிறிது சுமையே ஒரு நாள் விட்டு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு ஒருமுறை எடுத்துச் செல்கின்றேன். எனக்குத் தேவையான உணவு கிடைக்கின்றது. நீ நாள் முழுதும் வேலை செய்கின்றாய். ஆனால் உனக்கு இதே அளவு உணவு தான் கிடைக்கிறது. அதிகம் ஒன்றும் கிடைப்பதில்லை என்றது. ஆனால் நான் என்ன செய்ய முடியும் என்று எருது கேட்டது. உடல் நலமில்லாதது போல் நடி உணவைத் தொடாதே வலியால் தவிர்ப்பது போல் புலம்பு அப்பொழுது நீ வேலையிலிருந்து தப்பலாம் என்று கழுதை அறிவுரை கூறியது.

அடுத்தநாள் காலை எருது கழுதை சொன்னது போலவே செய்தது. அந்தக் குடியானவனுக்கு இவர்களது தந்திரம் புரிந்ததால் எருது நீ இன்று ஓய்வு எடுத்துக் கொள். கழுதை வயலை உழும் என்றான். கழுதை நாள் முழுதும் வயலில் உழுதது மாலை அது திரும்பி வந்ததும் கீழே மயக்க முற்று விழும் நிலைக்கு வந்தது. அந்த எருது கூறியது உன்னுடைய யோசனை அற்புதமாய் இருக்கின்றது. நாளையும் நான் இம்மாதியே செய்யப் போகின்றேன் என்றது. கழுதைக்கு பயம் பிடித்துக் கொண்டது. அது அவசர அவசரமாக கூறியது நீ அம்மாதிரி செய்யாதே தொடர்ந்து நீ வியாதியால் பீடிக்கப்பட்டால் அந்தக் குடியானவன் உன்னைக் கசாப்புக் கடைக்காரனிடம் விற்று விடப் போவதாக கூறியதைக் கேட்டேன். நீ காலையில் சீக்கிரமாய் எழுந்து விடு. உன்னுடைய உணவை உண்டு விட்டு சுறுசுறுப்பாய் இரு என்றது. அதனால் எருது மறுநாள் தனது வேலையைச் செய்ய தயாரானது கழுதையும் ஒரு பாடம் கற்றுக் கொண்டது.

**ம. மதுசன்**

தரம் 04

## எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம். எனது பாடசாலை மிகவும் அழகானது. எனது பாடசாலையில் தரம் 01 முதல் தரம் 13 வரையான வகுப்புக்கள் காணப்படுகின்றன. எனது பாடசாலையை ஏழூர் இராசரத்தினம் என்பவர் ஆரம்பித்தார். எனது பாடசாலையில் ஏழூர் மண்டபம், கிருபாசக்தி மண்டபம், ஏழூர் அரங்கு, விஞ்ஞான ஆய்வுகூடம், சமையலறை, நடராஜர் ஆலயம், விளையாட்டு முற்றம், நூலகம், சிற்றுண்டிச்சாலை என பல பகுதிகள் காணப்படுகின்றன. எனது பாடசாலை அதிபரின் பெயர் திரு.இ.கணேசானந்தன், உபஅதிபரின் பெயர் செ.அகிலன், எனது பிரிவுக்கான பகுதித்தலைவரின் பெயர் திரு.இ.இதயராஸ். எனது வகுப்பாசிரியரின் பெயர் திருமதி சி.மாசிலாமணி.

நான் எனது பாடசாலையை மிகவும் நேசிக்கின்றேன்.

**லூ. ம. அனிமார்க் கிளாறிஸ்**

தரம் 02

## உலகியல் விடயங்கள்

உலகிலேயே மிகப் பெரிய விளையாட்டு அரங்கம் -ஸ்ட்ராஹோவ்
உலகில் மிகப் பெரிய துறைமுகம் - நியூயோர்க் துறைமுகம்
உலகில் மிகவும் வறுமையான நாடு - ருவண்டா
உலகில் வருமான வரி இல்லாத நாடு - குவைத்
உலகில் விவாகரத்து செய்ய முடியாத நாடு - அயர்லாந்து
உலகில் தட்டையான சமதளமான நாடு - மாலை தீவு
உலகிலே அதிகளவு மீன் பிடிபடும் நாடு - ஜப்பான்
உலகிலே அதிகளவு சிலைகள் வடிக்கப்பட்ட தலைவர் - லெனின்
உலகில் மிகக் கூடிய மக்களுடைய நாடு - சீனா
உலகிலே சிறிய நாடு - வத்திக்கான்
உலகில் மிகவும் சிறிய கண்டம் - அவுஸ்ரேலியா
உலகில் மிகவும் சிறிய தேசியகீதம் - ஜப்பானிய தேசிய கீதம்
உலகில் மிகப்பெரிய மலைத்தொடர் - அந்தீஸ்
உலகில் மிக நீளமான அணை - ஹிராகுட்
உலகில் மிகப்பெரிய சுவர் - சீனப் பெருஞ்சுவர்
உலகில் மிகப் பெரிய பாம்பினம் - அனகொண்டா
உலகில் நீளமான சுரங்கப்பாதை - சைக்கான்
உலகில் நீளமான தொங்குபாலம் - ஆகாக்கியா
உலகில் மிகவும் நீளமான குகை - மாமத்குகை
உலகில் மிகப்பெரிய தீவு - கிறீன்லாந்து
உலகில் மிகப்பெரிய கண்டம் - ஆசியாக்கண்டம்

**பா.நிரஞ்சனா**

A/L [2020]

# சூழல் மாசடைதல்

நாம் வாழும் சூழலில் மரம், செடி, கொடி, நிலம், நீர், வாயு இருக்கின்றன. இவையெல்லாம் பாதிக்கப்படுவதால் சூழல் மாசடைகிறது. இவற்றை பாதுகாக்க வேண்டியது எம் கடமையாகும். நீர் குடிப்பதற்கு, குளிப்பதற்கு, விவசாயத்திற்கு மிகவும் உதவுகின்றது. அந் நீரில் கால்நடைகளை நீராட்டுவதால், தொழிற்சாலைக் கழிவுகளை நீரில் கலப்பதால், நீர்நிலைகளில் குப்பைகளைக் கொட்டுவதால் நீர் மாசடைகிறது. இவற்றைக் குடிப்பதால் எமக்கும் விலங்குகளுக்கும் பல நோய்கள் ஏற்படுகின்றன.

வாயுவை நாம் சுவாசிப்பதற்கு பயன்படுத்துகின்றோம். அவ் வாயுவில் தொழிற்சாலை புகையும், பொலித்தீன் பிளாஸ்ரிக் பொருட்களை எரிப்பதால் ஏற்படும் புகையும் கலப்பதால் வாயு மாசடைகின்றது. நிலம் எமக்கு விவசாயம் செய்ய மிகவும் உதவுகிறது. விவசாயம் செய்யும் போது மருந்துகளை விசிறுவதால் நிலம் மாசடைகிறது. இது மட்டுமன்றி பிளாஸ்ரிக் பொலித்தீன் பொருட்களை புதைப்பதாலும் நிலம் மாசடைகிறது. இவற்றை எல்லாம் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். சூழலை பாதுகாப்போம். சுகமாக வாழ்வோம்.

**சி.நிவேதன்**
தரம் 04

# A Story
## The Elephant and Friends

The long elephant wondered the forest looking for friends. She came across a monkey and asked "will you be my friend, monkey?" "you are too big and can not swing on trees as I do. So I can not be your friend", said the monkey.

The elephant then came across a rabbit and asked him if she could be his friend "you are too big to fit inside my barrow you can not be my friend" replied the rabbit.

Then the rabbit asked a fox, and he got the same reply, that he was too big. The nextday, all the animals in the forest were running in fear. The elephant stopped a bear and asked what was happening and was told that a tiger has been attacking all the animals.

The elephant wanted to save the other weak animal and went to the tiger and said "please sir leave my friends alone, do not eat them". The tiger didn't listen and asked the elephant to mind her own business. Seeing no other way to solve the problem, the elephant kicked the tiger and scared it away.Then, that want to back to others and told them what happended. On hearing how the elephant saved their lives, the animals greed in union, you are just the right size to be our friend.

**R.Nijanth**
Gr 08

# Mother Theresa

Through her selfless service of the poor and the sick, Mother Theresa has won



the hearts of the people all over the world. she arrived in India in 1929 when she was 19 years old. She was moved at the sight of crippled and helpless people on the pavement. So she madeup her mind to stay back in India to serve the distitude. Since then she had been devorting herself completely. There were thousand of members working with her at the time and many still continue. Calcatta was the centre of her humanitratian activities. She was the founder of many organizations which serve the suffering like mission aries of charity (sisters). 'Nirmal Hridoy' homes for the sick and the dying and "Sishy Bhavan" for disabled and mentally retarded children.

Mother Theresa received many national and international awards in recognition of her noble work for humanity. Most important among these are noble peace prize (1979) Bharat Rathna (1980), Jawaharlal Neru award for International peace (1972), Ramon Magsaysay award (1962) and the templeton foundation prize (1972).

Mother theresa was born on August 27th 1910 in Spoje (Yugos lavia). Her real name was Agnes Gonxha Bothia after becoming a nun of the Roman Catholic church her name was changed to Mother Theresa In 1921 a group of Christan missionaries from Yugoslavia went to India for humanitarian service and sent a letter back seeking help from their country for the poverty stricken people of India.

On reating the appeal Aga felt an over helping disire to the serve the helpless poor and physically in vaild and She went to India on January6, 1929 and has stayed there ever since for Mother Theresa life was always a mission to serve suffering after a prolonged illness. She died on 5th september 1997 in Calcatta. Millions of people around the world mourned her death. Her memory will live with us forever.

**S.Divinsika**
Gr 08

## மெய்கண்டான் நங்கையே நீ வளமுடன் வாழ்க!

இலங்கையின் வடபகுதியாய்
இருக்கின்ற யாழின் வடக்கே
கலங்கரை விளக்காய் ஒளிர்ந்தே
கல்விப் பணி புரிந்து வருகின்ற
இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமே
இகமதில் சேவை செய்து
களம் பல கண்டே நீயும்
கனிவுடன் வாழ வாழ்த்துகின்றேன்

அள்ளவே குறைந்திடாத எம்
அமுத சுரபியாய் விளங்கிய
வள்ளல் ஏழூரிற்கு உதித்த
வற்றாத எண்ணமதால் - அவர்
கள்ளமில்லா சேவைசெய்து
கடினமாய் உழைத்ததனாலே
தென்று தமிழுலகிற்கு வந்த
தெவிட்டாத முத்தேயுனை வாழ்த்துகின்றோம்

நூற்றாண்டை நோக்கிச் செல்லும்
நுந்தனின் சேவைகளுமே
காற்றிலே கலந்து சென்றேயிங்கு
கதை பல செப்புகின்றதே
நாற்றிசையும் சென்றே அந்த
நறுமணப் புகழ் மழையினாலே
ஏற்றம் பெற்றே நீயும்
என்றென்றும் வாழ வாழ்த்துகிறோம்

வல்ல பல ஆசான்களையே நீயும்
வளமாகக் கொண்டே இன்று
நல்ல பல பிரஜைகளையே என்றும்
நவில்கின்றாய் இவ்வுலகிற்கே
கல்வி, கலை, கலாச்சாரமென்றே
கலைமகளின் கடைக்கண் பார்வையாலே
சொல்லிட முடியாத காவியமாய்
சொர்க்கத் தாயகமாய் மிளிர வாழ்த்துகின்றோம்

உடலுக்கு இதயம் போன்றே
உந்தனின் சேவையாலே இன்று
திடமது பெற்றே மாணவர்களும்
திண்ணமாய் கல்வி பெறுகின்றனரே

முடமான மாணவருமிங்கு வந்தால்
முன்னேறிடலாம் கல்வி தனிலே
கடமையை சிறப்பாய் செய்தே நீயும்
கண்ணியமாய் வாழ வாழ்த்துகின்றோம்

சமுதாய வளமாம் மாணவர்களையே
சமத்துவமாய் எண்ணியவர்கள்
சுமுகமாயிருந்து கல்வி கற்றிடவே
சுதந்திரமும் தந்தே அவர் வாழ
அமுதுடன் அற்புதக் கல்வியும்
அளித்திடும் மெய்கண்டானே
திமு திமு என்றே எழுந்து நீயும்
திடமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

நித்தியமும் மறைநெறி தழுவி
நிலவு போலொழிரும் மெய்கண்டாணே
சத்தியமும் தர்மமும் போதிப்பதில்
சரித்திரம் படைக்கும் மெய்கண்டானே
பக்தியுடன் உனை நாடி வரும்
பக்தர்களின் மனக்குறை தீர்க்கும் மெய்கண்டானே
எத்திக்கும் உந்தன் புகழ் பரவி மலை போல்
எழுந்திடவே வாழ்த்துகின்றோம்

தனக்குறு பசிபோலெண்ணியிங்கு
தவித்திடும் மாணவர்களின்
மனக்குறைகளையே நீக்கியவர்
மகிழ்வுடன் வாழ வைத்தாய்
சனத்தினது மதிப்பைப் பெற்று நீயும்
சற்குருவாய் என்றும் வாழ
வனத்துறை சிங்கராசா போல
வல்லவனாய் வாழ வாழ்த்துகின்றேன்

ஆசையினாலே இவ்விழா மலரில்
அன்னையுனை எண்ணி நானும்
ஓசைத் தமிழ் கவிதையாலே
ஒன்றிணைந்தே எழுதினேன்
வாசத்தமிழை போதிக்கும் எங்கள்
வற்றாத மெய்கண்டானே!
மாசது இருந்தால் எந்தனை
மன்னித்திட வேண்டுகின்றேன்.

**திரு.ஜே.லூ.மரியதாசர்**
ஆசிரியர்

# பாடசாலையின் வினைத்திறனான செயற்பாட்டிற்கும் குறித்த இலக்கினை அடைவதற்குமான அதிபர், ஆசிரியர்களின் வகிபங்கு

**1) முன்திட்டமிடல்**

பாடசாலையின் எதிர்கால செயற்பாட்டிற்கான முன்திட்டமிடல் என்பது அதிபர் ஆசிரியர்களுக்கு இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. அதிபர் தனது பாடசாலையின் நிர்வாக செயற்பாட்டிலும் முன்திட்டமிடலைத் தயாரித்து அதற்கேற்ப அதனை நடைமுறைப்படுத்தி செயற்படுத்த வேண்டியது அவசியமானதாகும். இவ்வாறு செயற்படுத்தப்படும் பொழுது பாடசாலையின் செயற்பாடுகள் காலதாமதமின்றி விரைவாகவும் வினைத்திறனுடனும் செயற்பட வழிவகுக்கின்றது.

பாடசாலையில் தினமும் செயற்படுத்த வேண்டிய விடயங்களை பட்டியல் படுத்தி அதற்கேற்ப செயற்பாடுகளை மேற்கொண்டு பின்னர் செய்யப்பட்ட பணிகளை செவ்வை பார்த்தல் அவசியமானதாகும். அதில் ஏதாவது திருத்தங்கள் இருப்பின் அதனை சீர்செய்து செயற்படுத்துவதற்கான வழிவகைகளைக் காணவேண்டியது அவசியமாகின்றது.

ஆசிரியர்கள் தமது செயற்பாட்டுப்பணிகள் எவை என்பதனை முன்கூட்டியே தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். அந்த வகையில் வகுப்பறைச் செயற்பாட்டுப்பணிகள், வகுப்பறைக்கு வெளியேயான செயற்பாட்டுப்பணிகள் என இரண்டு வகையாக பிரித்து நோக்கலாம். இந்த வகையில் ஆசிரியர்கள் வகுப்பறைச் செயற்பாட்டுப்பணிகளில் இன்று கற்பிக்க போகும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், விடய உள்ளடக்கம், கற்றல் பேறு அதற்கான பாடவேளை என்பவற்றை முன்கூட்டியே அறிந்து அதற்கேற்ப பாடவேளைகளை பங்கீடு செய்ய வேண்டியது மிகமுக்கிய கருமமாகும். ஆசிரியர் தனது வகுப்பு பாடத்தின் ஓர் தேர்ச்சி நிலையில் உள்ள ஒவ்வொரு தேர்ச்சி மட்டங்களையும் இனம் கண்டு தேர்ச்சி மட்டங்களின் நிறைகளைக் கருத்தில் கொண்டு பாடவேளைகளை முன்கூட்டியே ஒதுக்கீடு செய்து கொள்ள வேண்டும். அதற்கேற்ப ஆசிரியர்கள் தமது கற்பித்தல் முறையினைத் தீர்மானித்து அதனை வகுப்பறையில் செயற்படுத்த வேண்டும். அத்துடன் அந்தத் தேர்ச்சி மட்டத்திற்கு அடைய வேண்டிய கற்றல் பேறினை அடைவதற்குத் தேவையான கற்றல் கற்பித்தல் சாதனங்களை உருவாக்கி அதனை கற்பித்தல் முறையுடன் பயன்படுத்த வேண்டியது பொருத்தமானதாகும். ஆசிரியர்கள் கற்பித்தலில் ஆசிரியர் கைந்நூலினை மிக முக்கியமாக தம்வசம் வைத்திருந்து பயன்படுத்துதல் சாலப்பொருத்தமானதாகும். ஆசிரியர் தனது கற்பித்தலுக்கு உதவி மூலமாக மாணவர்களுக்கான பாடநூலினை பயன்படுத்திக் கொள்ளலாம். மாறாக பாடத்தேர்ச்சி மட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பாடவேளைகள் ஒதுக்கப்படுமாக இருந்தால் குறைந்த பாடவேளைகளில்

தேர்ச்சி மட்டம் விரிவுரை முறையில் நிறைவடைந்து விடும். இது மாணவர்கள் மட்டத்தில் சிறந்த கற்றல் பேறினை ஏற்படுத்தி விடாது எனலாம்.

வகுப்பறையில் உள்ள மாணவர்களின் கற்றல் நிலை, குடும்பநிலை என்பவற்றை முன்கூட்டியே ஆசிரியர்கள் இனங்கண்டு அதற்கேற்ப கற்பித்தல் செயற்பாட்டினை முன்னெடுக்க வேண்டும். ஆசிரியர்கள் குறித்த வாரத்தின் ஆரம்பத்தில் அந்தவாரத்திற்குள் செயற்படுத்தப்போகும் தேர்ச்சிக்கான தேர்ச்சி மட்டங்களை குறிப்பிட்டு தன் நிறைக்கேற்ப பாடவேளைகளை ஒதுக்கீடு செய்து முன்அனுமதி பெற்றுச் செயற்படுத்த வேண்டியது அவசியமானதாகும். பின்னர் வகுப்பறை மட்டத்தில் மதிப்பீடு என்பது இன்றியமையாத ஒன்றாகவும் காணப்படுகின்றது.

**2) நேரமுகாமைத்துவம்**

பணியில் ஈடுபடும் அனைத்துத் தரப்பினருக்கும் நேரமுகாமைத்துவம் என்பது பிரதான விடயமாகக் காணப்படுகின்றது. பாடசாலையில் கருமமாற்றும் அனைத்துப் பணியாளர்களும் குறித்த நேரத்திற்கு முன் சமுகமளித்து தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவாக ஆற்ற வேண்டியது முக்கியமானதாகும். நேரமுகாமைத்துவத்தை கடைப்பிடிக்காதுவிடின் அந்தந்தக் காலப்பகுதிகளில் கருமமாற்ற வேண்டிய பணிகளை மேற்கொள்ள முடியாது போய்விடுகிறது. பாடசாலைச் செயற்பாடுகள் உரியநேரத்தில் ஆரம்பிக்கப்பட்டால் அதன் பின்னரான எல்லாச் செயற்பாடுகளும் கிரமமான முறையில் சிறப்பாக இடம்பெற்றுச் செல்லும் என்பதில் ஐயமில்லை. வகுப்பறைமட்டக் கற்பித்தலில் உரிய நேரத்திற்கென தேர்ச்சிமட்டத்தினை செயற்படுத்தி மதிப்பீட்டினை அந்த பாடவேளைக்குள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**3) அதிபர் - ஆசிரியர்கள் இடைவினை உறவு**

பாடசாலையில் அதிபர் ஆசிரியர்களுக்கும் இடையிலான இடைவினை உறவு சிறப்பானதாக அமையவேண்டியது முக்கியமானதாகும். அதிபர் பாடசாலையில் சகல கருமங்களிலும் சர்வதிகாரி போலச் செயற்படக்கூடாது. அதிபரால் ஆசிரியர்களுக்கென ஒதுக்கப்பட்ட பணிகள் இடம்பெறுவதனை மேற்பார்வை செய்து அவ்வப்போது ஆலோசனை வழங்குபவராக அதிபர் திகழ வேண்டும். அதேபோல் ஆசிரியர்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட பணிகளை முழுமனதுடன் செய்ய வேண்டும். பாடசாலைக் கருமங்களை ஆற்றுவதில் சகல ஆசிரியர்களும் முழுஒத்துழைப்பினை வழங்க வேண்டியது அவசியமானதாகும். பாடசாலைகளில் சிலஆசிரியர்கள் தாமாகவே அதிக கருமங்களை விருப்புடன் ஆற்றுவதில் முன்நிற்கிறார்கள். சிலஆசிரியர்கள் ஏதோ ஒரு காரணத்தினால் அதிக கருமங்களை ஆற்றுவதிலிருந்து பின் வாங்கும் நிலையையும் நாம் மறுக்க முடியாது. இந்நிலை பாடசாலைகளில் சீர்திருத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.

ஆசிரியர்களின் நலன் கருதிய செயற்பாட்டிற்கு அதிபர்கள் எவ்வாறு ஒத்துழைப்பு நல்கின்றார்களோ அதற்கேற்றவாறு ஆசிரியர்களும் பாடசாலையில் அதிபரினால் பணிக்கப்படும் கருமங்களிற்கு முழுஅர்ப்பணிப்புடன் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். பாடசாலைகளில் நடைபெறும் பணிகளில் அதிபர்கள் "அதிகாரி" என்ற நிலையிலிருந்து படி இறங்கி ஆசிரியர்களுடன் கூட்டிணைந்து பாடசாலைக் கருமங்களில் செயற்படும் போது விளைதிறனான செயற்பாட்டினை வெளிப்படுத்திக் கொள்ள முடியும். பாடசாலை விழாக்கள், போட்டிகளின் போதும் மற்றும் பாடசாலைப் பணியாளர்களின் பல்வேறு நிகழ்வுகள் விழாக்களின் போதும் கருத்தொற்றுமையுடன் பங்குபற்றல் மேற்கூறிய இடைவினையுறவு வலுப்பெற வழிவகுக்கின்றது. பாடசாலை விழாக்களின் போது விருப்பத்துடன் அதிபரால் வழங்கப்படும் வேலைப்பகிர்வை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமானவிடயமாகும். அத்துடன் தமக்கென ஒதுக்கப்பட்ட வேலையினை செவ்வனே நிறைவேற்றி பாடசாலை விழாக்கள் சிறப்பாக அமைய வழிவகுக்க வேண்டும்.

**4) இணைப்பாட விதானச்செயற்பாடுகளில் அதிக அக்கறையினை ஆசிரியர்கள் செலுத்துதல்**

புதியஆண்டில் பாடசாலை ஆரம்பித்தது முதல் பல்வேறு கல்வி சார்ந்த போட்டிகள் பாடசாலைமட்டம், குடும்பமட்டம், கோட்டமட்டம், வலயமட்டம், மாகாணமட்டம், தேசியமட்டம் என்ற வகையில் இடம்பெறுவதனை அவதானிக்கலாம். இந்தப் போட்டிகளுக்கான முன்ஆயத்தங்களை குறித்த போட்டியின் பொறுப்பாசிரியர் மாணவர்களுக்கு மேற்கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். நேரசூசி தவிர்ந்த ஏனைய வேளைகளில் அதாவது பாடசாலை நடைபெறும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மாணவர்களை வரவழைத்து போட்டிக்கான முன்னாயத்தக் கல்விப்பயிற்சிகளை வழங்க முடியும். அதிபர் பணிப்பின் பெயரில் மேற்கூறிய செயற்பாட்டினை மேற்கொள்ளாது ஆசிரியர்கள் தாமாகவே உணர்ந்து செயற்பட வேண்டும். எமது வீட்டுப்பிள்ளைகளின் கல்வி, ஒழுக்க மேம்பாட்டிற்கு எவ்வாறு அதீத அக்கறை செலுத்துகின்றோமோ அதேபோன்று பாடசாலை மாணவர்களையும் கருத வேண்டும்.

போட்டிகளுக்கான முன்னாயத்தம் என்பது நீண்டகால இடைவெளியில் இடம்பெற வேண்டும். போட்டிகளை எதிர் கொள்ளத்தக்க வகையில் மாணவர்களிடத்தில் தன்னம்பிக்கையை ஏற்படுத்தி சுயஆற்றலை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியரைச் சார்ந்தது. மாணவர்களை போட்டிகளில் பங்கு பற்றச் செய்வதற்கான ஆசிரியரின் செயற்பாடுகள் மாணவர் மனதில் இடம்பிடிக்க வேண்டியதும் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது.

**5) பாடசாலைகளில் ஆசிரியர் பிரிவினை ஏற்படுவதைத் தடுத்தல்**

"ஒற்றுமையே பலம்" என்ற வாக்கிற்கிணங்க பாடசாலைகளில் மாணவர்களின் கல்வி ஒழுக்க மேம்பாடு கருதிய செயற்பாடுகளில் அக்கறையுடன் செயற்படவேண்டியதும், ஆசிரியர்கள் தங்களுக்கிடையே பகைமை கொள்ளாது பாடசாலைகளின் குறிக்கோள் இலக்கு நோக்கியதான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டியதும் முக்கியமானதாகும். ஆசிரியர்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக் கொள்வதும், பகைமையுடன் செயற்படுவதும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தினைப் பாதிப்படையச் செய்கின்றது. பாடசாலை ஒரு குடும்பம் போல ஒற்றுமையாக மாணவர்கள் முன்னேற்றச் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் அளித்து ஆசிரியர்கள் செயற்படுவது இன்றியமையாததாகும். ஆசிரியர்கள் தங்களிடையே பரஸ்பரம் பாராட்டும் பண்புகள், விழாக்களில், நிகழ்வுகளில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கும் பண்புகளை ஆசிரியர்கள் தங்களிடையே வளர்த்துக் கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் தமக்கிடையே மற்றவர்களைக் கவரக்கூடிய இனிமையான பேச்சுக்கள், மனதைக்கவரும் தொடர்பாடல், ஒருவரை ஒருவர் மதிக்கும் பண்பு, விட்டுக்கொடுப்புக்கள், ஒருவருக்கொருவர் உதவி செய்யும் பண்புகள் வளர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். பாடசாலைகளில் ஆசிரியர்கள் ஒற்றுமையாகச் செயற்படுவார்களாயின் அந்தப் பாடசாலை உச்சஅடைவு மற்றும் சமூகத்தால் போற்றப்படும் முதற்தரப் பாடசாலையாக மாற்றமடையும்.

**6) ஆசிரியர்கள் நேர்மனப்பாங்கினை வளர்த்துக்கொள்ளுதல்**

பாடசாலையில் பணியாற்றும் பணியாளர்கள் நேர்சிந்தனையுடன் பணிபுரிய வேண்டியது அவசியமானதாகும். நேர்சிந்தனையானது மாணவர் மத்தியில் சிறந்த மனப்பாங்கினை ஏற்படுத்த உதவுகின்றது. ஆசிரியர்கள் தமது வாழ்க்கையில் நேர்மனப்பாங்கினைப் பின்பற்றினால் அதன் வெற்றிக்கு வழிவகுக்கும்.

**7) மாணவர்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக அதிபர் ஆசிரியர்கள் விளங்குதல்**

நான் குறித்த ஆசிரியரிடம் கல்வி கற்றால் எனது இலக்கை நோக்கி இலகுவாக நகரலாம் என்ற நம்பிக்கை மாணவர்கள் மத்தியில் ஏற்படுவதற்கு ஆசிரியர் காரணமாக இருக்க வேண்டும். குறித்த ஆசிரியரின் பாடசாலையின் வரவு ஒழுங்கு, மாணவர்களுக்கு விளங்கக்கூடிய வகையில் கற்பிக்கும் திறன், துல்லியமாக இனம் காணும் திறன், அதற்கேற்ப தனது பணிகளை முன்னெடுக்கும் திறன் என்பவை ஆசிரியர்களிடம் காணப்பட வேண்டிய முக்கிய விடயங்கள், இவை ஆசிரியர்கள் பால் மாணவர்கள் ஈர்க்கும் திறனை அதிகரிக்க வழிவகுக்கின்றது.

அதேபோல் பாடசாலை அதிபரானவர் ஆசிரியர்களை சிறப்பாக வழிநடாத்தி பாடசாலை இலக்குகளை விரைவாக அடைவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள

வேண்டும். அத்துடன் ஆசிரியர்களுக்கிடையான உறவு, ஆசிரியர் மாணவர் உணர்வு, அதிபர் ஆசிரியர்களுக்கிடையான உறவு என்பன வலுப்பெற்றதாகக் காணப்பட வேண்டும். இதன் மூலமே உயர்ந்த கல்விப் பெறுபேறு என்ற இலக்கு சாத்தியமாகின்றது.

மாணவர்களால் வெளிப்படுத்தப்படும் சில அந்தரங்கமான விடயங்களை செவிமடுக்கும் அதிபர் ஆசிரியர்கள் அதனை வேறுஎவருக்கும் வெளிப்படுத்தாது அந்த விடயங்கள் சார்ந்த மாணவர்களுக்கு அதனைத் தீர்ப்பதற்கான ஆலோசகராகவும் நிதி உதவி செய்பவர்களாகவும் திகழ வேண்டும். இந்த நிகழ்வுகள் அதிபர் ஆசிரியர்கள் மீது மாணவர்களுக்கு அதீத நம்பிக்கையும் பெருவிருப்பும் ஏற்படவும் வழிவகுக்கும்.

**8) மெல்லக்கற்போர் மீது அதீதநாட்டம் செலுத்தி அந்த மாணவர்களின் கல்வி ஒழுக்க வளர்ச்சிக்கு உதவ ஆதிபர் ஆசிரியர்கள் அதீத அக்கறை கொள்ள வேண்டும்.**

ஒவ்வொரு பாடசாலைகளிலும் உள்ள வகுப்புக்களில் மெல்லக் கற்கும் மாணவர்கள் காணப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அந்த மாணவர்களை அதிபர் ஆசிரியர்கள் ஒதுக்கி புறந்தள்ளி விடாது அதற்கென விசேட வகுப்புக்களை ஏற்படுத்தி அவர்கள் கற்றலில் இடர்ப்படும் விடயங்களை இனங்கண்டு அதனை நிவர்த்திக்கும் கற்பித்தல் செயற்பாட்டினை முன்னெடுக்க வேண்டியது அவசியமானதாகும். ஆசிரியர்கள் நேரசூசியில் தமக்கென ஒதுக்கப்பட்ட பாடவேளைகளுக்கு மேலதிகமாக உள்ள பாடவேளைகளைப் பயன்படுத்தி இந்தச் செயற்பாட்டினை முன்னெடுக்கலாம். அதற்கேற்ப ஆசிரியர்கள் தனது மனப்பாங்கினையும், அர்ப்பணிப்புச்சிந்தனையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். மீத்திறன் உள்ள மாணவர்கள் தமது கல்விப்பாதையில் எந்த விதமான தடையுமின்றி விரைவாக சென்று கொண்டிருப்பார்கள். எனவே இவர்களை உற்சாகமூட்டி குறைந்த நேரத்தில் உயரிய இலக்கிற்கு வழிப்படுத்தி விடலாம். ஆனால் மீத்திறன் குறைந்தவர்கள் மீது ஆசிரியர்கள் கூடியளவு நேரம் அக்கறை செலுத்திக் கல்விப்பணி ஆற்றவேண்டி உள்ளது. இந்தப் பணியைச் செய்யும் ஆசிரியர்கள் உயரிய இறைபணி செய்யும் அடியவர்களுக்கு ஒப்பானவர்கள் எனலாம்.

**9) மாற்றமுறும் அறிவு விடயங்களை உடனுக்குடன் அறிந்து அதற்கேற்ப மாணவர்களை வழிப்படுத்துபவர்களாக அதிபர் ஆசிரியர்கள் திகழ வேண்டும்.**

நாட்டில் இன்று நடைமுறையில உள்ள விடயங்கள் நாளை அதிகாலை வேறொரு விடயங்களாக மாறி விடுகின்றன. எனவே அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒவ்வொரு கணப்பொழுதும் மாற்றமுறும் விடயங்கள் தொடர்பாக உச்ச கவனத்துடன் அவதானித்துக் கொண்டிருக்க வேண்டியது முக்கியமானதாகும். இதற்காக செய்தித் தொடர்பு சாதனங்களான நாளாந்தப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பவற்றினால் வழங்கப்படும் நாளாந்தச் செய்திகளை

உடனுக்குடன் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும். இந்தச் செய்தி விடயங்களை மற்றவர்களுக்கு உடனுக்குடன் பகிர்ந்து கொண்டு அவர்களின் அறிவு மேம்பாட்டிற்கு உதவ வேண்டும். இன்றைய இலத்திரனியல் புரட்சிக்கு ஏற்ற தொழிநுட்ப வளர்ச்சியினால் சந்தைக்கு வருகை தந்துள்ள கணிணி, ஸ்மாட்போன் ஐ போன், இன்ரநெற் தொடர்பான சகல அறிவினையும் பாடசாலைப் பணியாளர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

**10) ஆசிரியர்கள் விருப்பத்துடன் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளுதலும், பாடசாலைச் செயற்பாடுகளை அவ்வப்போது உரிய வேளைகளில் செய்தலும்**

பாடசாலைகளில் பல்வேறு செயற்பாடுகளை ஆசிரியர்கள் தன் பால் விருப்புடன் பொறுப்பேற்று கருமமாற்றி வரவேண்டியது அவசியமானதாகும். அந்த வகையில் அந்தக் கருமங்கள் சிறப்பான முறையில் ஆற்றப்படும் போது பாடசாலையின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் அதிகரிக்கப்பட வழிவகுக்கின்றது.

தொகுத்து நோக்குவோமாயின் அதிபர் ஆசிரியர்களின் பாடசாலை வரவு ஒழுங்கு, பொறுப்புக்களை நபர்களிடையே பகிர்ந்து அளித்தல், அவற்றினை விருப்பத்துடன் ஏற்றுச் செயலாற்றுதல், அதிபர் ஆசிரியர்கள் உறவில் திருப்திகரமான நிலை, நேர்மனப்பாங்கான பணியாளர்கள், முன்திட்டமிடல் கருமங்கள் செவ்வனே நிறைவேற்றப்படல், ஆசிரியர்களுக்கிடையான இடைவினைஉறவு மேம்பட்டுக் காணப்படுதல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் விருத்திநிலை, பாடசாலைப் பிள்ளைகளின் மீது காட்டுகின்ற அதீத அக்கறை என்பன பாடசாலையை உன்னத வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

**திரு. இ. கணேசானந்தன் (SLPS-II)**
அதிபர்

# கட்டிளமைப் பருவ மாணவர்களும் கற்றலும்

மானிட வாழ்வின் முக்கிய வளர்ச்சிப் பருவங்களில் கட்டிளமைப்பருவம் சிறப்பாக நோக்கப்படுகின்றது. உடலியல் - உளவியல் மாற்றங்கள் விரைவாக ஏற்படும் பருவமான இதில், ஒருவன் பால் முதிர்ச்சியடைகின்றான். தனக்கென ஓர் தனித்தன்மையைப் பெறுகின்றான். தன் எதிர்காலம் பற்றி எண்ண எத்தணிக்கின்றான். உடல் உள மாற்றல்கள், உடற்பருமன் அதிகரிப்பு போன்ற வியற்பேற்படுகின்ற பன்முகத் தாக்கங்களின் காரணங்களினால் அமைதியற்ற பருவமாகக் காணப் படுகின்றது. இப்பருவத்தினரை ஆசிரியர்களும், பெற்றோர்களும் வழிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

தற்காலத்தின் சமூக பின்னணி முன் எப்போதும் இல்லாதவாறான சிக்கலும், பிரச்சினைகளும் உடையதாகக் காணப்படுகின்றது. இதில் நீதியும், நியாயமும் அற்றுப் போகத்தக்க மனித நடவடிக்கைகள் அதிகரித்த வண்ணமுள்ளன. கலாசார சீர்கேடுகள், நேர்மையீனம், தவறான முதியோர் எடுத்துக்காட்டுக்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள், பலாத்காரம் புரிதல்கள், குடும்பங்களின் பிரிவு, போதைப்பொருள் பாவனை, பொருத்தமற்ற ஆடம்பரப் பொருட்கள் ஆகியவற்றின் தாக்கங்களிற்கு உடனடியாக உட்படுவோர் கட்டிளமைப்பருவத்தினரே ஆவார். மேலும் இவர்களுக்குப் பொருத்தமான பாடசாலைக்கல்வி, வீட்டுச்சூழல், வேலை உலகு, எதிர் காலம் பற்றிய நம்பிக்கைகளும் சிதைந்த நிலையில் இலங்கையில் காணப்படுவதாக தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை எடுத்தியம்புகின்றது.

"இக்கட்டிளமைப்பருவ பாடசாலை மாணவர்களின் கற்றல் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கான மூலகாரணம் இப்பருவத்தினரின் விசேட சிறப்பியல்புகளை பெற்றோர் ஆசிரியர்கள் உணராமையே, மேலும் கட்டிளமைப்பருவத்தினர் பிரச்சனைகளுடன் அல்லது பிரச்சினைகள் இன்றி வாழ்வது சமூகம் அவனை எவ்வாறு நோக்கும் என்பதை பொறுத்தே அமைகிறது" என்கிறார் உளவியலாளர் மாக்கரட் மீட்.

இவ்வாறான பருவத்தினரின் சிறப்பியல்புகளாக நோக்கின்

- தன்னுணர்வு மிகுந்து காணப்படல்
- உடல் மனவெழுச்சி வளர்ச்சியில் விரைவான மாற்றங்கள்
- எதிர்பாலரிடையே கவர்ச்சியும், பாலுணர்ச்சி அதிகரித்தலும்
- சுயசார்வு பெற விழைதல்
- சக பாடிகளுடன் நெருங்கிப் பழகுதல்
- தலைமைத்துவம் ஏற்பதில் அதிக ஆர்வம்
- சாதனைகள் செய்ய விழைதல், கற்பனைகளின் பெருக்கம்

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இச்சிறப்பியல்புகளைக் கொண்ட பருவத்தினர்களின் கல்விச் செயற்பாடானது பல்வேறு காரணிகளால் பாதிப்படைகின்றது. கற்றல் இவர்களுக்கு போராட்டம் நிறைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. திறமையுள்ள பிள்ளைகளும் கற்றலில் பின்னடைவைக் காட்டுவதும் இப்பருவத்திலேயே. இதற்கு முதன்மையான காரணம் காதல்-பாலியல் தொடர்பான சிக்கல்களே ஆகும். இவர்களுக்கு சிறந்த வழிகாட்டல் சேவையும், பாலியல் தொடர்பான விழிப்புணர்வையும் வழங்க வேண்டியுள்ளது. மேலும் புகைத்தல் போதைப்பொருள் பாவனை, கையடக்கத் தொலைபேசிப் பாவனை, சம வயதுக்குழுக்களின் தீய வழிகாட்டல்கள், தொலைக்காட்சி மற்றும் ஊடகங்கள், குடும்பப்பிரிவுகள் ஆகிய காரணிகளாலும் இப்பருவத்தினரின் கல்விச் செயற்பாடு பாதிப்படைகின்றன.

இச்சமூகத்தினரை சமூகத்தின் சிறந்த உறுப்பினராகவும் பொறுப்புடையவராகவும் உருவாக்கும் முயற்சியில் பாடசாலையின் பங்கு முதன்மையானது. அந்த வகையில் அதிபர் ஆசிரியர்களின் செயலாற்றுகைகள் உறுதியுடையதாகவும், இப்பருவமாணவர்களுக்கு வழிகாட்டலாகவும் அமைதல் வேண்டும். அதிபர் ஆசிரியர்கள் தொடர்பான புலக்காட்சிகள் நம்பிக்கையை வளர்ப்பதாகவும், அவர்களது உணர்வுகளை தேவைகளைப் புரிந்து அக்கறையுடன் வழிகாட்டுபவர்களாகவும் இருத்தல் வேண்டும். மாறாக இப்பருவத்தினரின் உணர்வுகளை மதிக்காமல் நடப்பது பலர் முன்னிலையில் அவமதிப்பது, கடிந்துரைப்பது போன்ற செயற்பாடுகளினால் இவர்களிடையே தாழ்வு மனப்பான்மை வளர்ந்து ஆற்றல்கள் மழுங்கடிக்கப்படுகின்றது. இம் மாணவர்களின் கற்றல் பெறுபேறு சிறந்ததாக இருக்குமா? எனவே இப்பருவத்தினருக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறந்த உளவளத் துணையாளராக, நண்பர்களாக, வளர்ப்புப் பெற்றோர்களாக, வழிகாட்டியாக, ஆலோசனை வழங்குபவராக, அன்புடையவராக, பரிவுடையவராக, கல்வி தொழில் வழிகாட்டியாக விளங்க வேண்டும்.

இப்பருவத்தினர் எவ்வகையான வழிகாட்டல்களையும் விரும்ப மாட்டார்கள் என்ற பொதுவான எண்ணங்களை விலக்கி அவர்களுக்கு உதவி, காப்பு, கணிப்பு, அன்பு, வழிகாட்டல் என்பன பெரிதும் தேவைப்படுகின்றது என அறிந்து கொள்ளல் எம் ஒவ்வொருவரதும் கடமையாகும். எனவே பெற்றோர், ஆசிரியர், அதிபர், சமூகத்தவர்கள் தமது வேலைச்சுமை பிரச்சினைகள் சிக்கல்கள் என்பவற்றை அர்ப்பணிப்புடன் சகித்து இப்பருவத்தினரின் கல்வி மற்றும் வாழ்க்கை வளம் பெற உதவ வேண்டும்.

**திரு.செ.அகிலன்**
பிரதிஅதிபர்

# வாழ்வியலில் இந்து சமயத்தின் வகிபாகம்

உலகமே ஒரு கிராமம் போல் சுருங்கி விட்டதாம் தகவல் தொடர்பு வலைப்பின்னலினால் உலகின் எந்த மூலையுடனும் கணப்பொழுதில் உறவாட முடிகின்றதாம் ஆயினும் அருகில் இருப்பவருடன் உறவாடுவதில் தான் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. அறிவியல் வளர்ச்சி அருகில் இருப்பவரை மற்றவர் ஆக்கி விட்டது. ஆனால் சமாதான தர்மம் என போற்றப்படுகின்ற இந்து சமயம் தனி மனிதனாலோ அல்லது ஒரு குழுவினராலோ தோற்றுவிக்கப்பட்ட மதமன்று. அது எப்போது யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதை அறிவதற்கு ஆராய்ச்சியாளர்களுக்கே சவாலாகி விட்டது. அதனாலேயே இறைவனால் மனிதர்களுக்காக அளித்த ஒரு மதமாக விளங்குகின்றது. இந்த விடயத்தில் அறிவியல் ஏன் மௌனியாகி விட்டது? என்பதே பலரது கேள்வி. இது ஆச்சரியத்திற்குரிய விடயமும் கூட.

சமயம் என்பது வாழும்நெறி அல்லது வாழ்க்கைநெறி என்று கூறுவார்கள். எப்படியும் வாழலாம் என்பதை விட்டு இப்படித் தான் வாழ வேண்டும் என கோடிட்டு காட்டி நிற்கின்றது இந்து மதம். தத்துவத்தில் உண்டு செயற்பாட்டில் இல்லை. அறிவியலில் உண்டு அனுட்டானத்தில் இல்லை. போதனையில் உண்டு சாதனையில் இல்லை. போர்வையாகி விட்டது பாதையாக இல்லை. இதற்கு விடையாக தெரிவது சமயம். இச் சமயமானது இன்று சரித்திரநூல்களிலும், பாடநூல்களிலும், போதனைகளிலும், பரீட்சை வினாத்தாள்களிலும், சமயவாதிகளின் பேச்சுக்களிலும், நற்சிந்தனைகளிலும் தெளிவுபடுத்தப்படுகின்றது. இவற்றால் ஏற்படும் பயன் யாது?

சமயம் எங்கு வாழ வேண்டுமோ அங்கு வாழ வேண்டும். சமயம் வேறு வாழ்க்கை வேறு அன்று. சமயம் சமூகத்துடன் இணைய வேண்டும். சமய விழாக்களும் விரதங்களும் பண்டிகைகளும் விழுமியங்களும் வாழ்க்கையில் சைவநெறியை அனுஸ்டிக்கவும், அனுட்டானம் ஆசாரம் ஒழுக்கம் என்பவற்றைப் பேணி வரவும் உறுதுணையாக அமைகின்றன. மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு சமயச்சூழல் இன்றியமையாதது. இத்தகைய சமூகச்சூழலில் தான் இறைநம்பிக்கையும் வழிபாடும் அவசியமாகின்றது. இதனாலேயே நாவுக்கரசர் தனது திருப்பாடல்களில் திருக்கோவில் வழிபாட்டினை வலியுறுத்தியிருப்பதைக் காண்கின்றோம்.

சைவசமயிகாகப் பிறந்த ஒவ்வொருவரும் இறைவனது திருவருளைப் பெற முயற்சிக்க வேண்டும். இதற்கு சிறந்த வழி இறைவன் மீது கொண்டுள்ள நம்பிக்கை வாழ்க்கை மீது கொண்டுள்ள நம்பிக்கை. நம்பிக்கை தான் வாழ்க்கை என்பது உளவியலாளர்களின் கருத்து. வாழ்க்கை என்பது முழுமையான வசந்தமல்ல அதேவேளை கொடுமையான சூறாவளியும் அல்ல. இன்பமும் துன்பமும் நிறைந்த ஒரு இனிமையான கலவை. மனித மனங்கள் எப்போதும் மகிழ்ச்சியையே விரும்புகின்றன. துன்பம் வரும் போது அது தனக்கு மட்டுமே ஏற்பட்ட கொடுமையாக நினைக்கிறது. வாழ்வில் எல்லாம் முடிந்து விட்டது என்ற எண்ணம் மேலோங்கி நிற்கிறது. எம்மைப்

படைத்த இறைவனைப் பற்றி சிந்திப்பதே இல்லை. இன்பமும் துன்பமும் நாம் தேடிய தேட்டங்கள் என்பதை உணர்ந்து விட்டால் துன்பங்கள் எம்மைச் சேரமாட்டாது.

இந்த அருமையான உடம்பைத் தந்தவன் இறைவன். மனமாகிய அழுகையையும் அறியாமையாகிய இருளையும் நீக்கி ஒளியையும் இன்பத்தினையும் பெறுவதனை அறிந்து கொள்ளாமல் அழுக்குகளையும் கொடுமைகளையும் செய்து வருகின்றனர். சைவ மக்கள் ஒவ்வொருவரும் பிறர் துன்பம் நீக்க வழிபாடு செய்தல் வேண்டும். இன்று எமது வழிபாடுகள் சுயநலம் கருதியே இடம் பெறுகின்றன. இலஞ்சம் கொடுத்தாவது இறைவனிடம் எதையும் பெற முடியுமாயின் பெற்று விட உலகம் துடியாய் துடிக்கிறது. இந்தச் சுயநலம் வேண்டாம், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற சித்தர்களின் ஆதார சுருதி இந்துக்கள் ஒவ்வொருவரதும் மனதிலும் இடம்பெற வேண்டும் நான் மட்டும் வாழ்ந்தால் போதாது எல்லோரும் வாழ வேண்டும் என நினைத்து வழிபடுதலே சிறந்தது. சுவாசிப்பதற்கு காற்று, குடிப்பதற்கு நீர், உண்பதற்கு உணவு, உடுப்பதற்கு துணி என்பன தேவையானவை அதே போல் சமயஉணர்வும் கடவுள் நம்பிக்கையும் மேலோங்க வேண்டும். இதனால் தான் நாவுக்கரசரும் திருக்கோயில் வழிபாடு அவசியம் என்பதை உணர்த்தியிருக்கின்றார்.

எவருக்கும் இடையூறுகள் இன்றி தத்தம் கடமைகளையும் கருமங்களையும் ஆற்றுபவர்கள் ஒழுக்க சீலர் ஆவர் என்பது இந்துமத உண்மை. இவ் ஒழுக்க வாழ்வு சிறுபராயத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பது பெரியோர் வாக்கு. பெற்றோர் பிள்ளைகளை ஒழுக்கமாக பயிற்றுதல் வேண்டும். சின்ன வயதிலிருந்தே ஒழுக்க விழுமியங்களையும் மானிடப்பண்புகளையும் உணர வைக்க வேண்டும். பெற்றோருக்கு மேலாக கடவுள் என்று ஒரு சக்தி உண்டு என்ற நம்பிக்கையை ஊட்டி வளர்க்க வேண்டும். இன்று விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. கடவுள் எங்கே இருக்கிறார்? என்ற கேள்வியை பலரும் கேட்க தயாராகின்றனர். ஆனாலும் சைவசமயம் வாழ்வில் பல சம்பிரதாயங்களையும் ஆசாரங்களையும் இன்று வரை கடைப்பிடித்து வருகின்றது. நம் முன்னோர்கள் விதித்த விதியை இன்று மறுப்பதற்கில்லை பெரியோர்கள் தரும் பொருளை ஒரு கையால் வாங்கக் கூடாது. வாங்கும் வேளையில் நன்றி கூற வேண்டும். படுக்கும் போது இறைவனை வணங்குதல், விரதம், செபம், தவம், யாத்திரை பௌர்ணமி நாட்களில் எண்ணெய் தேய்த்தல் ஆகாது, இரவில் வீடு கூட்டுதல் ஆகாது போன்ற ஆசாரங்கள் இன்று நழுவிச் செல்வதையே காண முடிகிறது. அது மட்டுமன்றி ஆசாரக் குறைபாடு செயற்பாடுகளைக் கூட காணக் கூடியதாகவுள்ளது.

ஆலயத்திற்குச் செல்லும் போது ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி நீளக்காற்சட்டையுடன் வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். ஆனால் அட்டாங்க நமஸ்காரமோ, பஞ்சாங்க நமஸ்காரமோ இல்லை. அதற்கு இடையில் தொலைபேசி அழைப்புக்கள் தோத்திரம் பாடிக்கொண்டிருக்கும் வேளையில் "ஹலோ" என்ற சாகச மந்திரம். இது மட்டுமன்றி சிவ சின்னங்களில் ஒன்றான விபூதி தரிக்கும் முறைகள் கூட மாறி விட்டன. திரிபுண்டரம், உத்தூளனம் முறைகளுக்கு அப்பால் ஒற்றை விரலினால்

விபூதி அணியும் வழக்கம் எம்மவர்களில் அனேகம் பேர் பின்பற்றுகின்றார்கள் இத்தகைய வழிபாட்டு முறைகள் பற்றி வேத ஆகமங்களில் கூட கூறப்படவில்லை. இந்துக்கள் என்போர் இம் முறைகளிலிருந்து விடுபட வேண்டும். இத்தகைய செயற்பாடு "குளிக்கப்போய் சேறு பூசிய கதையாகி விடும்" இன்னொரு வகையில் சிவ நிந்தனை என்று கூட கூறலாம். இறைவனால் படைக்கப்பட்ட நாம் செய்யும் செயற்பாடுகளிலும் பெரும் தவறுகளைப் புரிந்து வருகின்றோம். அழகான தலை முடியை அசிங்கமாக அழகுபடுத்தி அதாவது தலைவிரி கோலமாக அலைவது எமது தமிழர் பண்பாட்டிற்கே ஆகாததொன்று. சமயம் என்பது வாழ்க்கையோடு இணைந்த ஒன்று என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

மனிதனை மனிதனாக்குவது சமயம். நூல்கள், சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்பன பல கதைகள் மூலம் தத்துவங்களையும் வாழ்க்கையில் உண்மை நிலைப்பாட்டினையும் விளங்க வைக்கின்றன. நம்மில் எத்தனை பேர் சமய விழுமியங்களை கருத்தில் கொள்கின்றோம், வாழ்வில் அனுசரிக்கின்றோம். பசுக் கொலைக்கு கொலைக்கு அஞ்சி நாட்டை விட்டு ஓடியவர் சுவாமி ஞானப்பிரகாசர். ஆலயங்களில் பலியிடுதலை தவறுத்தவர் நாவலர் பெருமான் மற்றும் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார். ஆனால் இன்று சட்ட ரீதியாகவே ஆலயங்களில்பலியிடுவது தடை செய்யப்பட்டுள்ளது. அவர்களின் வழியில் நின்று நாமும் உயிர்களுக்கு துன்பம் செய்தலை தவிர்த்தல் நல்ல விழுமியமாக அமைகின்றது.

மனிதன் நன்னெறியில் வாழ கடவுள் மற்றும் சமயப்பற்றும் மக்களின் வாழ்வில் இடம் பிடித்தல் வேண்டும். உலக வாழ்க்கை மிகவும் இனிமையானது நமபிக்கையோடு வாழ்வதே இதன் சிறப்பாகும். கடவுள் நம்பிக்கை இதனோடு கூடியது. எமது உளத்தை வளப்படுத்தும் தன்மை கடவுள் நம்பிக்கையில் காணப்படுகின்றது. அந்த நம்பிக்கை எம்மை இறைபணியில் நிற்கத்தூண்டி பெரும் வெற்றியையும் தருகிறது. சைவ முறைப்படி வாழ்ந்தால் துன்பங்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலையே உருவாகாது. வாழ்க்கை வேறு சமயம் வேறு என்பதை விடுத்து அன்பர் பணி செய்ய நாம் முன் வர வேண்டும். "அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே" என்ற தாயுமானவர் கூற்றுக்கு அமைய சமூகம் சார்ந்த சேவைகளை மனதில் கொண்டு சைவர்களாக வாழ்வோமாக.

**'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'**

**திரு. வி. நற்குணசிங்கம்** [B.A.Dip In Edu]
ஆசிரியர்
(இந்து நாகரிகம்)

# அன்பு

இறைவன் மனிதன் மீது கொண்ட அன்பினால் மனிதனை மீட்க தம் ஒரே பேறான மகனை இவ்வுலகிற்கு ஈர்ந்தது இறையன்பினாலே ஆகும். இறையன்பானது தான்தோன்றித்தனமான வாழ்வால் தன்னை விட்டு தூர விலகும் மானிடனின் மன்னிப்பை, மனம் திரும்புதலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. ஆதலால் மனம் திரும்பி வரும் பாவியைக் குறித்து விண்ணகத்தில் பெருமகிழ்ச்சி உண்டாவது மனிதன் பால் உள்ள அன்பாலே தான்.

எமது மானிட வாழ்விலே "உறவுகளுக்கிடையேயான அன்பு-பாசம், நண்பர்களுக்கிடையேயான அன்பு-நட்பு, குடும்பங்களுக்கிடையேயான அன்பு-பந்தம், உணர்வுகளுக்கிடையேயான அன்பு-மோகம், அயலவர்களுக்கிடையேயான அன்பு-பிறரன்பு, மனிதன் இறைவன் மேல் கொண்ட அன்பு-பக்தி, இறைவன் மனிதன் மேல் கொண்ட அன்பு-இறையன்பு, போர் வீரன் நாட்டின் மேல் கொண்ட அன்பு-பற்று" எனவும் அன்பானது வாழப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இவ்வாறிருக்கும் போது "நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்" என்னும் இயேசுவின் வார்த்தைக்கமைய எமது வாழ்விலே அன்பு செய்து வாழ அழைக்கப்படுகின்றோம்.

தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலே அன்பு பற்றி இவ்வாறு கூறுகின்றார். அன்பு பொறுமையுள்ளது; நன்மை செய்யும்; பொறாமைப்படாது; தற்புகழ்ச்சி கொள்ளாது; இறுமாப்பு அடையாது; அன்பு இழிவானதைச் செய்யாது; தன்னலம் நாடாது; எரிச்சலுக்கு இடம் கொடாது; தீங்கு நினையாது; அன்பு தீவினையில் மகிழ்வுறாது; மாறாக உண்மையில் அது மகிழும்; அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்; அனைத்தையும் நம்பும்; அனைத்தையும் எதிர் நோக்கியிருக்கும்; அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும்.

இவ்வாறு அன்பானது எல்லை கடந்த விதமாக அர்த்தத்தை உணர்த்திய வண்ணம் இருப்பதைக் காணமுடிகிறது. வாழ்நாள் முழுவதுமே, அதாவது மானிட வாழ்வானது அன்பிலே வாழப்பட வேண்டும் என்பதையும் எடுத்தியம்புகின்றன. நாம் எமது வாழ்வில் எவ்விதமாக அன்புக்கு இலக்கணம் வகுக்கிறோம். அன்பினால் எதையும் வெல்ல முடியும். சாதிக்க முடியும் என்பதை உணர்கிறோமா? அன்பின் வழி நடத்தலை ஏற்கிறோமா? வழிப்படுத்துகிறோமா? சிந்திப்போம். கிறிஸ்தவ வாழ்வானது அன்பின் அடித்தளத்திலே கட்டியெழுப்பப்பட வேண்டும். அன்பின் பிணைப்பிலே சிறப்பாக மிளிர வேண்டும்.

**திருமதி அ.பொ.ஸ்ரீஹரிகரன்**
ஆசிரியர்

# நிலைபேண் அபிவிருத்தி எண்ணக்கருவும் அதன் நோக்கங்களும்

18ம் நூற்றாண்டுகளின் பின்னர் மனிதன் இந்த உலகத்தை வென்று கொண்டிருக்கின்ற போதும் அவன் இந்த பூமிக்கு பெரும் சவால் நிறைந்த ஒரு வளமாகவே காணப்படுகின்றான். சனத்தொகை பெருக்கமும் அதனால் ஏற்பட்ட பொருட்களுக்கான கேள்விகளும் அதிகரித்த வண்ணம் உள்ளன. எனவே தனது உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக இந்தப் பூமிப்பந்தோடு போராடும் மனிதன் பூமியின் அரும் பெரும் வளங்களைச் சூறையாடி வருகின்றான். அதனால் எதிர்கால சந்ததிக்கு பூமியின் இயற்கை வளங்கள் இல்லாமல் போகலாம் என்பதை இன்றைய சூழலில் உணர்ந்து கொள்ள ஆரம்பித்துள்ளான். இதனால் நிலை பேண் அபிவிருத்தி என்னும் புதிய எண்ணம் தொடர்பில் சிந்திக்க தலைப்பட்டுள்ளான்.

அதாவது இயற்கை சூழலில் உள்ள ஒளி, வளி, நீர், மண், கனியங்கள், ஏனைய வளங்கள் (வளிக்கோளம், நீர்க்கோளம், உயிர்க்கோளம், கற்கோளம்) என்பனவற்றில் காணப்படும் அருகி வரும் வளங்களும் புதுப்பிக்கப்படாத அழிந்து போகும் வளங்களும் குறைவடைவதுடன், ஏனைய வளங்களில் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்கள் காரணமாகவே பேண்தகு அபிவிருத்தி பற்றி சிந்திக்கப்படுகின்றது. மனிதனுடன் தொடர்புடைய சூழல் அவனது பொருளாதார அபிவிருத்தியிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அத்துடன் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியிலும் பொருளாதார, அரசியல், சமூகக் காரணிகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. சூழலானது மனிதச் செயற்பாடுகள் காரணமாக பல்வேறு தாக்கத்திற்குள்ளாகின்றது. இயற்கையில் மனிதனால் ஏற்படுத்தப்படும் பல்வேறு அசாதாரண நடவடிக்கைகள் காரணமாக சூழல் மாசடைந்து வருகின்றது. அவ்வாறான சூழ்நிலையில் வளங்கள் வீண்விரயம் செய்யப்படுகின்றது. அதனால் இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு நாட்டிற்கும் தனிநபர்களுக்கும் உரிய கடமையாகும்.

ஆகவே இன்று வளர்முக நாடுகளும் ஏனைய விருத்தியடைந்து வரும் நாடுகளும் இது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றன. ஆயினும் இவ்வாறான நடவடிக்கைகள் தனிப்பட்ட நாடுகளுக்கு மட்டுப்படுத்தப்படாமல் உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பொதுச்சட்டமாக்கப்படவேண்டும். நிலைபேண் அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருவின் முன்னோடியாக விளங்கியவர் நோர்வே நாட்டின் முன்னாள் பிரதமர் கற்கார்லம் புருண்ட்லண்ட் ஆவார். இவரது தலைமையில் 1983ம் ஆண்டு உலகச்சூழல் ஆணைக்குழு நிறுவப்பட்டது. இவ் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையானது எமது பொதுவான எதிர்காலம் என்பதன் மூலம் வாதிடப்பட்டது.

நிலைபேண் அபிவிருத்தி இரு பிரதான ஆக்கக் கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

1) தேவைகள் பற்றிய எண்ணக்கரு உலகில் வறியோருக்கான அத்தியாவசிய தேவைகள்

2) இத்தேவைகளை எதிர்கொள்வதற்கு சூழலின் ஆற்றல் மீதும் தொழிநுட்பத்தினாலும் சமுதாயத்தினாலும் சுமத்தப்படும் வரையறுப்புக்கள் பற்றிய சிந்தனைகள்

நிலைபேண் அபிவிருத்தி என்பது "யாவரினதும் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்தல் சிறந்த வாழ்க்கைக்கான அவர்களது அபிலாசைகளைத் திருப்தி செய்வதற்காக சகல சந்தர்ப்பங்களையும் விரிவாக்குதல்" என்பதாகும்.

"எதிர்காலச் சந்ததிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான அபிவிருத்தி செயற்பாடுகளையும் அதற்கான வழிவகைகளையும் உலகலாவிய மற்றும் தேசிய மட்டங்களில் முன்னெடுத்தலாகும்"

**நிலைபேண் அபிவிருத்தியின் நோக்கங்கள்**

❖ எல்லா நாடுகளும் தமது கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை சூழல் மற்றும் பொருளாதார விருத்தியின் மீது எத்தகைய தொடர்பினை கொண்டிருக்கின்றன என்பது தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதே நிலைபேண் அபிவிருத்தியின் நோக்கமாகும்.

❖ வளர்ச்சிக்கு புத்தாக்கம் அளித்தல்.

**வளங்களை அறிவு பூர்வமாக பயன்படுத்துவதற்கான மக்களின் அபிவிருத்தியில் கவனம் செலுத்துதல்.**

✷குறைந்த சக்தி பயன்படுத்தி நீண்டகாலம் நிலைத்து நிற்கக் கூடிய பொருளாதார சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடியதாக வளங்களை பிரயோகித்தல்.

✷வளர்முக நாடுகளில் பெருகிவரும் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் குறைந்த நுகர்வு நியமங்களை உறுதி செய்யக்கூடிய வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களை உருவாக்கல் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய திருப்தியான சக்தித் தேவைகளை உற்பத்தி செய்தல்.

✷அடிப்படையான தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி அனர்த்த முகாமைத்துவத்தினைப் பேணல் அதாவது தீர்மானம் எடுத்தலில் சூழலியல் மற்றும் பொருளாதார விடயங்களை ஒன்றிணைத்தல் இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டு 1992ம் ஆண்டு உலக வங்கி நிலைபேண் அபிவிருத்தி தொடர்பில் உலக அபிவிருத்தி அறிக்கையை வெளியிட்டுள்ளது. அவற்றில் மூன்று விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

✷பொருளியலாளர்கள் தற்பொழுது காணப்படும் முதலிருப்புத் தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி அதிகளவான மனித தேவைகளைப் பெற விரும்புகின்றனர். இவர்கள் இயற்கையில் வளங்கள் பற்றி கருத்தில் கொள்கின்றனர்.

✷சூழலியலாளர்கள் உபசூழல் தொகுதிகளின் ஒன்றிணைப்பை பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கை தொடர்பில் கவனம் செலுத்துகின்றனர்.ஏனெனில் புவியின் நிலைப்பாட்டிற்கு ஒவ்வொரு உபசூழலும் ஒன்றோடோன்று தொடர்புடையது. ஆகவே உயிர் நிலைத்திருப்பிற்கு சூழல் மிக முக்கியமானது ஆகவே அதனைப் பாதுகாக்க வேண்டும்.

✷சமூகவியல் நோக்கில் நிலைபேண் அபிவிருத்தியை அடைந்து கொள்ள மனிதன் சிறந்த சமூக நிறுவனமாக காணப்படுகின்றான். காரணம் சமூகக் காரணி பற்றி கவனம் செலுத்தப்படாதவிடத்து அவை பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை பாதித்து விடும்.

**நிலைபேண் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு அணுகுமுறைகள் காணப்படுகின்றன.**

1) பொருளியல் அணுகுமுறை
2) சூழலியல் அணுகுமுறை
3) சமூகவியல் அணுகுமுறை

பொருளியல் அணுகுமுறை நிலைபேண் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் வகையினை நோக்கும் போது அருகிவரும் இயற்கை வளங்களை பயன்படுத்தும் போது அந்நாடுகள் அதனை கருத்தில் கொள்வதில்லை. சில வளங்கள் மீள்புதுப்பிக்கப்படாத வளங்கள், சில வளங்கள் மனிதனுக்கு இன்றியமையாதவையாகும். எனவே அவ்வாறான வளங்களை பயன்படுத்தும் போது மனிதன் சிந்திக்க மறந்து போகின்றான். காரணம் இலாப நோக்கமும் இன்றைய பொருளாதார நிலைமையும் ஆகும். எடுத்துக்காட்டாக நிலக்கரி அகழ்வு, அயனக்காடுகள் அழிப்பு, பயிர்ச்சிசெய்கை காரணமாக மேல் மண் அரிப்பு போன்ற செய்ற்பாடுகள் இன்றைய பௌதீக சூழலை பாதிப்பதுடன், எதிர்கால சந்ததிக்கும் இவ்வாறான வளங்கள் பயன்பாட்டிற்கு இல்லாமல் போகலாம். அத்துடன் வளிமண்டலத்தில் சேரும் காபனீரொட்சைட்டின் செறிவு எமக்கு பாதிப்பை ஏற்படுத்தாமல் விட்டாலும் எதிர்கால சந்ததியை பாதிக்கலாம்.

நாம் CFC (குளோறோ புளோறோ காபன்) பயன்படுத்தும் போது ஓசோன் படையில் பாதிப்பு ஏற்பட்டமை பற்றி அறிந்திருக்கவில்லை. அதன் தாக்கம் நடைமுறையில் ஏற்பட்ட போதே மாற்றுவழிகளை சிந்தித்தோம். அதேபோல் எதிர்கால சந்ததியினரை கருத்தில் கொண்டு "தேசியசூழல்" செயற்றிட்டங்களை பல்வேறு

நாடுகள் வரையறுத்துள்ளன. சூழல் தொடர்பான நிலை பேண் அபிவிருத்தியின் கொள்கைகள்

1) பொருளாதார வளங்களை மேம்படுத்தல், அழகியலை விருத்தி செய்தல். இதற்காக கல்வி, சனத்தொகை நிகழ்ச்சி திட்டங்களை விரிவுபடுத்தல்.

2) தூண்டுதல் ஒழுங்குமுறையின் ஊடாக சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடத்தைகளைக் கட்டுப்படுத்தல்.

இவ்வாறான பொருளியல் அணுகுமுறைகளை கருத்தில் கொள்ளும் போது

✷நடைமுறை சார்ந்த முன்னேற்றங்கள் மூன்று மட்டங்களில் பின்பற்றப்படுகின்றன. அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களில் பாதிக்கப்பட்டவர்கள் திட்டங்களின் வரைவு நிலையில் ஈடுபாடு கொள்ள வேண்டும்.

✷திட்டங்களை வரையறை செய்யும் போது உள்ளூர் அறிவு பயன்பட வேண்டும்.

✷கொள்கைகள் மற்றும் முதலீடுகளின் சமூகத் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு எமது ஆற்றலைக் கட்டியெழுப்ப வேண்டும்.

**நிலைபேண் அபிவிருத்தியில் சூழலியல் தொடர்பான அணுகுமுறைகள்**

நிலைபேண் அபிவிருத்தியில் இயற்கை சூழலானது செல்வாக்குச் செலுத்துகின்றது. இச்சூழல் அண்மைக்காலங்களில் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றது. இயற்கை வளங்கள் இலவசமாக கிடைக்கும் வளங்கள் எனப்பட்டது. இன்று மூன்று வகையான சூழல் தத்துவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

1) மனிதனின் பொருளாதார நடவடிக்கையுடன் இணைந்த பொருளாதாரத்தைப் பேணிப் பாதுகாத்தல்.

2) பொருளாதார வளர்ச்சியும் சனத்தொகையின் பயன்பாட்டு வளர்ச்சியும் இயற்கை வளங்களின் அமைவுகளைப் பெருக்குகின்றன. இதனால் சூழல் தொகுதியின் தாங்கக் கூடிய ஆற்றல் மீறப்படுகின்றது.

3) அபிவிருத்தி செயற்பாடுகளில் நீண்ட அல்லது எதிர்மறையான சூழல் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதனால் அருகி வரும் சூழல் தொடர்பில் பூகோள ரீதியான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பொருளாதார மற்றும் துறை ரீதியான அபிவிருத்தி கொள்கைகளில் சூழலியல் விடயங்களில் ஒன்றிணைப்பதற்குத் தூண்டுதல் அளித்தல்.

அபிவிருத்தி செயற்பாட்டிற்காகவும் பாதுகாப்பான செய்முறைகளை உருவாக்குதல்.

மேம்பாட்டினை ஏற்படுத்தக் கூடிய சிறந்த சூழலியல் கொள்கைகள் அபிவிருத்திக்கு நன்மை பயக்கும் என காட்டுதல்.

பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்ப வளங்களின் பயன்பாடு அதிகரிப்பதுடன் அதனால் வளங்கள் சுரண்டப்படுகின்றன. இவ்வாறான இயற்கை வளங்களைப் பாதுகாக்க உலகவங்கியும், ஏனைய நிறுவனங்களும் இணைந்த சூழலியல் நடவடிக்கைத் திட்டங்கள் என்பதை அறிமுகப்படுத்த 1932 இல் 22வளர்முக நாடுகள் வளங்களின் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளன. 1989ம் ஆண்டு தொடக்கம் உலகவங்கியின் முதலீட்டு செயற்திட்டங்கள் யாவற்றிலும் வளம் தொடர்பாக ஆராயப்பட வேண்டும் எனக் கூறியுள்ளதுடன் சில வளங்களை மீள் புதுப்பிக்கவும் கூறியுள்ளது. எனவே இன்று சூழல் திட்டமிடல் தொழிநுட்பத்தில் சூழல் மதிப்பீடு Environmental Assessments முக்கியம் பெறுகின்றது.

**சமூகவியல் தொடர்பான அணுகுமுறை நிலைபேண் அபிவிருத்தியில்**

சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் ஒரு சமூகப்பிராணியாக உள்ள ஒரு வர்க்கமாக மனித சமூகம் காணப்படுகின்றது. அதனால் அபிவிருத்தியை தூண்டுவதற்கான கொள்கைகளிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் மக்கள் முதன்மைப்படுத்தல் (putting people first) என்ற அழைப்பு விடப்படுகின்றது. இது மிகவும் அவசியமானது. நிலைபேண் அபிவிருத்தியை அடைய பல சமூகவியல் தேவைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

1) சமூகச் செயற்பாடானது மக்களின் தொடர்பு, சிக்கலான சமூக அமைப்பு நிறுவனமையப்பட்ட ஒழுங்கு முறைகள் பண்பாடு நோக்கங்கள் பெறுமானங்கள் ஆகியவற்றினை பழக்க உதவும் கருத்தியல்களை வழங்குகின்றது.

2) சமூகச்செயற்பாடானது சமூகஒழுக்கம் சமூகமுதலீட்டினை விருத்தி செய்ய உதவுதல்.

உலகவங்கியினால் மேற்கொள்ளப்பட்ட சமூகவேலைத்திட்டங்கள் ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா பகுதிகளில் வெற்றியளிக்காத நிலைமையானது சூழல் பற்றிய விழிப்புணர்வு இப்பிரதான பிரதேசங்களில் குறைவாகவே காணப்படுகின்றது. உலகவங்கியின் ஏற்பாட்டில் சமூகவியலாளர்கள் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். சமூகக்காடாக்கும் (social rorestry) போன்ற செயற்பாடுகள் அவை சில இடங்களில் தோல்வியில் முடிவடைந்துள்ளன. சமூகம் தொடர்பில் சமூக வாதிகளுக்கும் சந்தையை அடிப்படையாகக் கொண்டவர்களுக்கும் இடையே பல்வேறு நாடுகள் சமூக நீதியாக நிலைபேண் அபிவிருத்தியை ஏற்படுத்த முனைகின்ற பொழுதும் சில பொருளாதார முதலீட்டு காரணங்கள் இவற்றில் பாதிப்பை ஏற்படுத்துவதால் சமூகரீதியான கொள்கைகளில் அரசியலை சார்ந்த தலையீடுகளும் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எது எப்படியாயினும் சூழல் என்பது மனிதனுக்கு அத்தியவசியமானது அதைப் பாதுகாக்க வேண்டியது அனைத்து சாராரதும் கடமையாகும்.

நிலையான அபிவிருத்தியின் பொருட்டு பயன்படுத்தப்படும் பிரதான முறைகளாக 3R என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது.

Reduse ⇨ குறைத்தல்

Reuse ⇨ மீள்பயன்படுத்தல்

Recycle ⇨ மீள் சுழற்சிக்கு உட்படுத்தல்

போன்றவற்றுடன் வளங்களை வினைத்திறனுடன் மேம்படுத்துவதற்காக பல்வேறு வழிகளும் கைக்கொள்ளப்படுகின்றன.

5S ⇨ வினைத்திறன் எண்ணக்கரு பயன்பாடு

CP ⇨ தூய்மையான உற்பத்தி (Cleancr Production)

GP ⇨ பசுமையான உற்பத்திகள் (Green Productvity)

TQM ⇨ முழுமைத்தர முகாமைத்துவம் (Total Quality Management)

Pokayoke ⇨ தவறுகளைப் பூச்சியமாக்கல் (mistaken proofing)

PPP ⇨ கழிவகற்றும் பொறுப்பை உற்பத்தியாளர் ஏற்றுக் கொள்ளல் (Producer Paid Principle)

எனவே தொகுத்து நோக்குமிடத்து இன்றைய சூழலில் அருகிவரும் வளங்களை பாதுகாத்து தற்கால சந்ததிக்கு வினைத்திறனுடையதாக பயன்படுத்தி எதிர்கால சந்ததிக்கு கையளிக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனதும் கடமையாகும்.

**திரு.சாம்பசிவம் கௌதமன்**
ஆசிரியர்
சமூக விஞ்ஞானத்துறை

**உசாத்துணை நூல்கள்**

தரம் 12,13 புவியல் ஆசிரியர் வழிகாட்டி 2018
(தேசிய கல்வி நிறுவகம், மகரகம.)
சூழல் புவியியல் ஓர் அறிமுகம் (சூசைப்பிள்ளை அன்ரன் றோபேட், குமரன்புத்தக இல்லம்)
தமிழ் விக்கிப்பிடியா இணையம் (பேண்தகு அபிவிருத்தி கட்டுரை 2018.11.08 பார்த்தது)

# வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் மாணவரின் ஆளுமையை விருத்தி செய்வதில் ஆசிரியரின் பங்களிப்பு

கல்வியானது மனிதவள மேம்பாட்டிற்கும் மனித வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக அமைகின்றது. கல்வியில் ஏற்படும் முன்னேற்றமானது ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு நாட்டின் வளமான எதிர்காலம் அந்நாட்டின் சிறுவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியிலேயே தங்கியுள்ளது. வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைப் பொறுத்த வரையில் பிரதானமான மற்றும் நேரடியான பங்காளிகளாக ஆசிரியரும் மாணவர்களும் காணப்படுகின்றனர். இந்த இரு சாராருக்கும் வெவ்வேறான பொறுப்புக்களும் வகிபங்குகளும் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஒரு வகுப்பறையை வழி நடத்துவதில் அதிகளவான பொறுப்பு ஆசிரியருக்கே இருக்கிறது.

மாணவர்களின் கல்வியில் முக்கிய அங்கம் வகிப்பவர் ஆசிரியர். வகுப்பறைக் கல்வியின் வெற்றி தோல்வி ஆசிரியரைப் பொறுத்தே அமைகின்றது. ஆசிரியர்கள் சிறந்த கல்விப் புலமையாளர்களாகவும், தேர்ந்த பயிற்சிகள் பெற்றவர்களாகவும், உயிரோட்டமான அறிவுடன் தொழிலில் ஆர்வம் மிக்கவர்களாகவும் விளங்கி விருப்புடன் பழகி மாணவர்களிடம் அன்பும் பரிவும் காட்டி கல்வி வெற்றி பெறத் துணை செய்ய வேண்டும். கல்வி முறையின் வலிமை மிக்க சக்தியாக திகழ்பவர் ஆசிரியர். ஆசிரியர் இல்லாத கல்வி, ஆன்மா இல்லாத உயிர், இரத்தமும் சதையும் இல்லாத எலும்புக்கூடு போன்றது. ஆசிரியர் வினைத்திறன், விளைதிறன் கொண்ட கற்றல் சூழலை உருவாக்க வேண்டும். அதே போன்று மாணவர் மனதிலும் ஆசிரியர் தம் மீது அக்கறை கொண்டுள்ளார், தம் எதிர்கால வாழ்க்கையில் விளக்கேற்றி வைப்பார் என்ற நம்பிக்கையும் உணர்வும் காணப்பட வேண்டும். "ஆசிரியர்கள் ஞான விளக்குகளாவார்" என்ற கருத்தினை சோக்ரடீஸ் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். அதாவது ஆசிரியர்களானவர் வெறுமனே போதிப்பவர்களாக அன்றி சகல துறைகளிலும் நின்று கற்றல் கற்பித்தல் நிபுணத்துவத்தை வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது.

தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அதே போல் ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவ சமூகத்தை உருவாக்குபவர்கள் அல்ல மாறாக உயிரூட்டுபவர்கள். சிறந்த ஆசிரியரின் பண்புகள், குணங்களை பார்க்கும் மாணவ, மாணவிகளின் மனதில் அப்படியே பதியும். அதனால் ஆசிரியர்கள் தங்களை மாணவர்களின் காலக்கண்ணாடி என்ற எண்ணத்தில் தான் பணியாற்றி கடினமாக உழைத்து வாழ்வில் ஒளிரும் மாணவ சமூகத்திற்கு ஆசிரியர்கள் உரிமையாளர்களாக மாற வேண்டும்.

மண் கலவையை தேவையான வடிவில் சிலையாக வார்ப்பதில் கை தேர்ந்தவர்கள் ஆசிரியர்கள். குடத்துள் விளக்காய் இருக்கும் மாணவரின் திறமையை வெளிக் கொணர்ந்து "குன்றின் மேலிட்ட விளக்காய் பிரகாசிக்கச் செய்வது" ஆசிரியரின் தனிச்சிறப்பு. அரிஸ்டாட்டில் தம் மாணாக்கர் பலருடன் ஆற்றின் கரைக்கு வந்தார். மாணவர்களிடம் நீங்கள் இங்கேயே நில்லுங்கள். ஆற்றில் சுழல் உள்ளதா என பார்த்து வருகின்றேன் எனக் கூறி ஆயத்தமானார். அதற்குள் ஒரு மாணவன் நீரில் இறங்கி நீந்தி அக்கரைக்குச் சென்றான். குருவே சுழல்கள் இல்லை தைரியமாக ஆற்றைக் கடக்கலாம் வாருங்கள் என்றான். அரிஸ்டாட்டில் உன்னைச் சுழல்கள் இழுத்துச் சென்றால் என்னவாகி இருக்கும் என்றார். அதற்கு அம் மாணவன் ஆயிரம் அரிஸ்டாட்டில்களை உருவாக்கும் வல்லமை பெற்றவர் நீங்கள். அரிதான குருவான உங்களை இழந்தால் நாங்கள் பரிதவித்து போய் விடுவோம் என்றான். அப்படி ஓர் அற்புதமான ஆசிரியர் மாணவர் உறவு அமைவது சமூகத்திற்கு புது சுவாசத்தைக் கொடுக்கும்.

சூழலுக்கு மிகத் தேவையான மனிதராக ஆசிரியர் தன்னை உருமாற்றிக் கொள்வது இங்குதான். தான் ஒரு ஆசிரியன், பெற்றோர், நண்பன், வழிகாட்டி, எனும் வகிபாகங்களை எடுக்க வேண்டிய நிலைக்கும் ஆசிரியர் உள்ளாகின்றார். பசியோடு வரும் பிள்ளையின் களைப்பினைப் போக்கும் போதும், கற்பதற்கு உரிய பொருளாதார வசதிகள் இன்றி துயரப்படும் பிள்ளையின் துயர் களையும் போதும் ஒரு ஆசிரியன் பெற்றோர் ஆகின்றான். கட்டிளமை வயது பருவக்கோளாறுகளினால் பாதை தவறும் ஒரு பிள்ளையை பக்கமிருந்து திருத்தும் போது நல்ல நண்பனாகின்றான். மாணவரின் எதிர்காலம் உணர்ந்து பாதை வகுக்கும் போது நல்ல வழிகாட்டியாகின்றான்.

ஒரு ஆசிரியர் தன் துறை சார்ந்த பாடப்பரப்பில் போதியளவு புலமை, திறமை இருந்தால் மட்டும் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை வினைத்திறனுடையதாக மாற்ற முடியாது. பாடப் புலமைசார் திறனுடன் "பிள்ளையை அறிதல்" என்பது இன்றியமையாதது. பிள்ளையை அறிந்து பிள்ளையின் மனப்பாங்கில் கற்றலில் நாட்டமும் ஆர்வமும் வரச் செய்வதன் மூலம் ஓர் ஆசிரியர் வெற்றியடைகின்றார் என்றால் மிகையல்ல. வகுப்பிலுள்ள வெவ்வேறு பிள்ளையும் தனியாள் வேறுபாடு உடையவர்கள் மட்டுமல்ல அவர்களின் குடும்ப, பொருளாதார, சமய, கல்விப் பின்னணிகளும் வேறு பட்டவையாக இருக்க முடியும். அத்துடன் பிள்ளைகளின் குடும்ப விபரம், பெற்றோரின் தொழில், பொருளாதாரங்கள், உடல் ஆரோக்கியங்கள் போன்ற விபரங்களை ஆசிரியர் அறிந்திருப்பது நல்லதாக அமையும். பிள்ளைகளின் பின்னணிகளை அறிந்த பின்பு அவர்களுக்கு ஏதாவது உதவிகள், ஆறுதல்கள் வழங்கும் சந்தர்ப்பங்களில் சக மாணவர்களுக்கு தெரியா வண்ணம் அந்த உதவிகளை மேற்கொள்வதே சிறந்தது.

ஒரு பிள்ளையிடம் ஒரு திறன் இல்லா விட்டாலும் இன்னொரு திறன் மேலானதாக இருக்க முடியும். தேர்வுகள், போட்டிகள், மதிப்பீடுகளில் பின் தங்கி நிற்கும் மாணவர்களையும் ஆசிரியர்கள் தமது அன்பான பேச்சுக்களினாலும் அரவணைப்பினாலும் முன்னிலைக்கு வரச் செய்ய முடியும். போட்டி ஒன்றில் சற்று பின் தங்கிய பிள்ளையிடம் உன்னால் முடியும். முயற்சி செய்தால் அடுத்த தடவை வெற்றி பெற முடியும் என்றும், பரீட்சையில் குறைந்த புள்ளிகளைப் பெற்ற பிள்ளையிடம் இந்தப் பயிற்சிகளை மீண்டும் மீண்டும் செய்து பயிற்சியடைவதுடன் இன்னும் கவனம் எடுத்தால் அடுத்த பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற முடியும் என்றும், பேச்சுப் போட்டி ஒன்றில் பங்கு பற்றி வெற்றிச் சந்தர்ப்பத்தை இழந்த பிள்ளையிடம் உங்கள் பேச்சு நன்றாக இருந்தது எனினும் சில விடயங்களை எடுத்துக் காட்டி இவற்றில் கூடிய கவனம் எடுத்தால் இனி வரும் போட்டிகளில் இடம் கிடைக்க முடியும் என்ற பல உற்சாகப்படுத்தும் உபாயங்களைக் கூறி மாணவர்களை தட்டிக் கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்துபவர்களாக இருத்தல் வேண்டும். இலை மறை காய்களாக மாணவர்களிடம் மறைந்திருக்கும் உள்ளார்ந்த திறன்களை வளர்த்தெடுத்து அவர்களை வெற்றிப்படிகளின் உச்சத்திற்கு உயர்த்துவதிலும் அறிவில் கரை காண வைப்பதிலும் நல்லாசிரியர் ஏணியாகவும் தொழிற்பட்டார் என்றால் அவருடைய சேவை அதி உன்னத நிலையைப் பெற்றுக் கொள்ளும். ஆசிரியர் என்பவர் தனது சிறப்பான சேவைகளின் மூலம் மாணவர் மனப்பாங்கில் நேரான மாற்றங்களை உண்டு பண்ணி மாணவனை நாளாந்தம் பாடசாலைக்கு வெறுப்பின்றி விருப்புடன் சமுகமளித்து கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் சுமுகமாக ஈடுபட வைத்தார் என்றால் அந்த ஆசிரியர் சேவையில் வெற்றி கண்டவராகவே கருதப்படுவார். மாணவச் செல்வங்களால் இவர்கள் மதிப்புடன் போற்றப்படுவார்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.

**திரு.பா.எட்வேட் சுஜீபன்**
(ஆசிரியர், நாடகமும்அரங்கியலும்)

**உசாத்துணை நூல்கள்**

பா. தனபாலன் (2010), நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள்
தெ. மதுசூதனன் (2014) ஆசிரியம்
தெ. மதுசூதனன் (2011) ஆசிரியம்
www.Vikaspedia.in
www.Thinakaran.lk

# படித்ததில் பிடித்த வாழ்வை பொன்னாக்கும் வைர வரிகள்

ஒரு காரியம் கஸ்டமாக இருப்பதால் நாம் பயப்படுவதில்லை
நாம் பயப்படுவதால் தான் அந்த காரியம் கஸ்டமாக இருக்கிறது.

**- செனகா**

வளமான காலத்தில் நண்பர்கள் நம்மைத் தெரிந்து கொள்கின்றனர்
வறுமைக் காலத்தில் நாம் நண்பர்களைத் தெரிந்து கொள்கிறோம்

**- அட்டன் காலிக்ஸ்**

செயலை விதையுங்கள் பழக்கம் உருவாகும். பழக்கத்தை விதையுங்கள் குணம் உண்டாகும். குணத்தை விதையுங்கள் உங்கள் எதிர்காலம் உண்டாகும்

**- போர்டுரமன்**

முடிந்தால் சமாதானமாக இரு ஆனால் என்ன நேர்ந்தாலும் உண்மை மட்டும் கூறு

**- மார்ட்டின் லூதர் கிங்**

ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லா விட்டால்
அந்த ஆற்றல் மதிப்பற்றதாகி விடும்.

**- நெப்போலியன்**

கால் தடுமாறினால் சமாளித்துக் கொள்ளலாம்
நாக்குத் தவறினால் மீளவே முடியாது

**- பெஞ்சமின் ஃபிராங்களின்**

உனக்காக வாழ்கிறேன் என்று பிறர் சொல்வதை விட
உன்னால் வாழ்கிறேன் என்று ஒருவரைச் சொல்லவை

**- அன்னை தெரசா**

வாழ்வில் வெற்றி கொள்வதற்கு எவன் ஒருவன் தன் சக்தி அனைத்தையும் செலவிடுகிறானோ அவன் தான் உண்மையான மனிதத் தன்மை உடையவனாகின்றான்

**- ஒஷோ**

தர்மத்தாலும் கருணையாலும் பெறப்படும் வெற்றியே நிலை பெற்று நிற்கும்
அதர்மத்தை தர்மத்தாலும், தீமையை நன்மையாலும் தான் வெல்ல முடியும்.

**- பாரதியார்**

சினம் அன்பை அழிக்கும், கர்வம் அடக்கத்தை கெடுக்கும்,
விவேகம் வாழ்வை கொடுக்கும்

**- மகாவீரர்**

வாழ்க்கையில் எப்போதும் சமாதானத்தையும், சகிப்புத்தன்மையையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும்.

**- பாரதியார்**

புத்தகம் மூலமாக நீங்கள் பிறரை அறியலாம், அது போல உங்களை நீங்களே அறியலாம்.

**- எட்வர்டு**

தற்பெருமை எங்கு முடிகிறதோ அங்கு தான்,வாழ்க்கையில் ஆனந்தம் ஆரம்பமாகின்றது.

**- வாக்கார்**

நாணயமான மனிதர்கள் எப்போதும் நியாயமாகவே செயற்படுவார், நியாயமாகவே சிந்திப்பர்,நியாயமாகவே வாழ்வார், நியாய தேவதை அம் மனிதர்களை கைவிட்டதில்லை.

- ரூசோ

காலையில் இரண்டு நிமிடமாவது தியானம் செய்யுங்கள், வேறொரு அற்புத உலகிற்கு தியானம் ஒரு திறவு கோல்.

- காந்தியடிகள்

உள்ளத்தில் ஒழுங்கு முற்றிலும் குறைந்திருந்தால் நாம் புறத்தில் எதையும் நிலைநாட்ட முடியாது.

- சேக்ஸ்பியர்

புலி,சிங்கம் போன்ற கொடிய மிருகங்களைக் கண்டால் பயந்து ஒதுங்குவது போல கெட்ட எண்ணம் படைத்தவர்களிடம் இருந்து விலகியே இருப்பது மனதைப் பாதுகாக்கும்.

- புருஷோத்தமானந்தர்

இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள்,என்னால் இயலாது என்றும் ஒரு நாளும் சொல்லாதீர்கள், ஏனெனில் நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள். உங்களுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும் போது காலமும் இடமும் கூட உங்களுக்கு ஒரு பொருட்டல்ல. நீங்கள் எதையும், எல்லாவற்றையும் சாதிக்க முடியும். சர்வவல்லமை படைத்தவர்கள் நீங்கள்.

- சுவாமி விவேகானந்தர்

நாம் இழப்பதற்கு ஒன்றுமில்லை, ஆனால் ஜெயிப்பதற்கு உலகமே உள்ளது.

- தாமஸ் அல்வா எடிசன்

தன் மனதை சுதந்திரமாக வைத்துக் கொள்ளும் எவனும் அடிமை இல்லை. தன்னம்பிக்கையின் குறைவே அதிருப்தி, அது நெஞ்சுரத்தின் குறைபாடு.

- எமர்சன்

நாளை நான் வாழப்போகிறேன் என்று மூடன் சொல்கிறான், இன்று என்பது கூட காலம் கடந்ததாகும். அறிவாளிகள் நேற்றே வாழத்தொடங்கி விட்டனர்.

- மார்கூஷியல்

நல்லவர்களை தேர்ந்தெடுத்துப் பழகுங்கள். வாழ்வில் முன்னேறுவதற்கு இது தான் சிறந்த வழி.

- வாரியார் சுவாமிகள்

கோபம் என்றும் தீ, தன்னையும், தன்னைச் சேர்ந்தவர்களையும் அழித்துவிடும்.

- திருவள்ளுவர்

மொட்டாக முளைத்தது மலர்ந்தே தீரும், விடாமுயற்சி கொண்டவனுக்கு வெற்றி கிடைத்தே தீரும்.

- சின்மயானந்ததர்

போதுமென்ற மனநிறைவுக்கு நிகரான செல்வம் வேறில்லை. பொறுமைக்குச் சமனான பண்பு வேறில்லை.

- சாரதா தேவியார்

**திருமதி க.பரமேஸ்வரன்**
உடற்கல்வி ஆசிரியர்

# ஆசிரியை மாணவனுக்கு எழுதிய கடிதம்

யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.
2018-11-22

அன்புள்ள மாணவனுக்கு,
நல்வாழ்த்துக்கள்! இங்கு நானும் சக ஆசிரியர்களும் நலமாக உள்ளோம். அங்கு உன்னுடைய நலத்தையும் உன் நண்பர்கள் நலத்தையும் அறிய விழைகின்றேன். அவர்களிடம் நலம் கேட்டதாகக் கூறு.

நான் உன்னைத் தினமும் வகுப்பறையில் சந்திக்கின்றேன். பின்னர் ஏன் மடல் எழுதுகின்றேன் என நீ நினைக்கலாம். நான் வாயால் கூறும் வார்த்தைகளை விட எழுத்தில் வடிக்கும் எண்ணங்களுக்கு அதிகம் மதிப்புக் கொடுத்து வாசிப்பாய் என்ற நம்பிக்கையில் எழுதுகின்றேன்.

தினமும் காலைக்கூட்டத்தில் அதிபர் கூறிய அறிவுரைகளைக் கேட்டு உனது காதுகள் புளித்துப் போயிருக்கும் என நினைக்கின்றேன். இருந்தாலும் எனது மனதில் தோன்றிய சில அறிவுரைகளை உன்னோடு மடலில் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன். இது உனக்கு மட்டுமல்ல உன் நண்பர்களுக்கும் சமர்ப்பணம்.

தம்பி! நீ முதலில் உன்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். மாணவர்கள் என்பது உலகியல் வாழ்க்கையில் ஒரு மகத்தான சொத்துக்கள். மானிட வாழ்க்கையின் மணிமுத்துக்கள். எதிர்காலத்தைக் கட்டி எழுப்பும் கவிக்கும்பல்கள், சுகமான எண்ணங்களை சுவாசிக்கும் சுதந்திரப் பறவைகள், தட்டி விட்டால் தளிர்ந்து விடும் முட்டைக்கருக்கள், உடைக்கவும் கூடாமல், கெடுக்கவும் கூடாமல், விழுத்தவும் கூடாமல் விளிம்பில் இருக்கும் பொதுச் சொத்துக்கள்.

ஆசிரியர் என்பவர் மனிதகுலத்தை மனித குலமாக வாழ வைக்க அதனைப் பண்படுத்திப் பயனுறு நெறிப்படுத்த "விலங்கொடு மக்கள் அனையார் இலங்குநூல் கற்றோரோடேனையவர்" என்ற விதத்தில் மக்களை உருவாக்க மக்கள் நிலையை மாற்றியமைக்க வையத்துள் வாழ்வாங்கு வாழ வைக்கும். வண்மையைப் புரிய அவர்களை தெய்வங்களாகவும் ஆக்க அயராது தினம் தினம் உழைத்து ஓடாகுவோர் என்பதை நீ நன்கு புரிந்து கொள்.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்பது மூதுரை. அறிவுக்கண்ணைத் திறப்பதால், உண்மையை உணர்த்துவதால், ஒப்பற்று நிற்பதால், இயற்கை

அறிவை இணைப்பதால், பிறவி நோயை மாற்ற மருந்து இடுவதால் அவர்கள் இறைவனாகின்றார்கள். கோடான கோடி புண்ணியம் இயற்றும் புண்ணியவான் ஆசான், அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தலை விட, ஆலயம் பதினாயிரம் அமைத்தலை விட, பிற அறங்கள் புரிவதை விட, ஏழை ஒருவனுக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியம் என்று பாரதி ஆசானை உயர்த்தி இருக்கின்றான். "ஆசிரியன் உருவாக்கப்படுவதில்லை அவன் ஆசிரியனாகவே பிறக்கின்றான்" என்றார் ஒரு பேரறிஞர். இதிலிருந்து ஒரு ஆசிரியரின் மகத்துவம் பற்றி விளங்கி இருப்பாய் என நம்புகின்றேன்.

என்னைப் பற்றியும், உன்னைப் பற்றியும் நீ அறிந்து கொண்ட பின் நீ உனது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் பற்றிக் கூறுகின்றேன் கவனமாக கேள். நீ எதிர்காலத்தில் என்னவாக வர வேண்டும் என உனக்கும் உன் பெற்றோருக்கும் கனவுகள் இருப்பது போல உன் ஆசிரியருக்கும் உன்னில் அக்கறை உண்டு. வாழ்க்கை என்பது இலட்சியம் நிறைந்ததாக அமைய வேண்டும். பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று அல்லாது சாதித்துக் காட்ட வேண்டும். "தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்றார் வள்ளுவர். எனவே உனது வாழ்வில் சாதித்துக்காட்டு.

அரசாங்கம் நீ கற்பதற்காக இலவசபாடநூல், இலவசசீருடை, இலவசக்கல்வி, இலவசஉணவு என எவ்வளவோ பணத்தைச் செலவு செய்கின்றது. இதற்கு பிரதியீடாக உனது நாட்டிற்கு நீ என்ன செய்யப் போகின்றாய். எல்லாவற்றையும் இலவசமாகப் பெற்று அனுபவித்து விட்டு வெளிநாட்டிற்கு சேவை செய்ய போகின்றாயா? அல்லது அரசாங்க உத்தியோகத்தில் இருந்து கொண்டு இலஞ்சம் பெறப்போகின்றாயா? அரட்டை அடிக்கப் போகின்றாயா? இதற்கு மாறாக நீ நல்ல ஒரு தேசப்பற்றாளனாக உருவாக வேண்டும் என்பதே என் அவா.

ஒவ்வொருத்தருடைய அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ப தொழில்கள் வேறுபடலாம். "செய்யும் தொழிலே தெய்வம்" என்பார்கள். படிக்கிறவர்கள் எல்லாம் வைத்தியராகவும், பொறியியலாளராகவும், கணக்காளராகவும் வர வேண்டும் என்றால், மனிதர்கள் எப்படி வாழ்வது? நாடு எவ்வாறு முன்னேறுவது? உனக்குப் பொருத்தமான ஒரு தொழிலை தேர்ந்து எடுத்துக்கொள்.

உன்னைப் பொறுத்தவரை கற்பதைத் தவிர வேறு வேலை இல்லை, வகுப்பறையில் "கசடறக் கற்றுக் கொள்" சகநண்பர்களோடு அன்பாகப் பழகிக் கொள். மற்றவர்களின் மனதில் இடம் பிடிக்கப் பழகிக் கொள். ஆசிரியருக்கு உண்மையாக இரு. தினமும் பத்திரிகை செய்திகளை வாசித்து அறிந்து கொள். கற்பதற்கு வறுமை ஒரு தடையாக இருக்கும் எனக் கருதாதே. உலகில் எத்தனையோ

வறுமைப்பட்ட நிலையில் இருந்தவர்கள் தான் சாதித்திருக்கிறார்கள். அப்துல்கலாம் பற்றி கேள்விப்பட்டிருப்பாய் ஆரம்பத்தில் வீடு வீடாக பத்திரிகை போட்டவர் எதிர்காலத்தில் உலகம் போற்றும் விஞ்ஞானியாக வந்ததில்லையா? அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தெரு விளக்கு வெளிச்சத்தில் தான் கற்றவர். ஆனால் உனக்கு அரசு மட்டுமல்ல உனது பாடசாலையும், சமூகமும் எத்தனையோ உதவிகளைச் செய்கின்றது.

இன்றைய உலகில் மனித இனத்தையே ஆட்டிப்படைக்கும் உயிர்க்கொல்லி நோய்கள் உலாவுகின்றன. இவற்றை உன்னிடத்தே அணுக விடாதே. இப்போதிலிருந்தே நஞ்சற்ற மரக்கறிகள், பழங்களை உண்ணப் பழகிக் கொள். கடைகளில் விற்கும் பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட உணவுகளை உண்ணாதே, இனிப்பான உணவு வகைகளை அதிகம் உண்ணாதே. "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்பார்கள். நீ சுகதேகியாக இருந்தால் தான் எதனையும் சாதிக்க முடியும். தினமும் யோகா அல்லது உடற்பயிற்சிகளில் ஈடுபடு.

இறுதியாக மகனே ஒரு சிற்பி எவ்வாறு ஒரு சிற்பத்தை செதுக்குவானோ அதைப் போல் நானும் உன்னைப் புடம் போட்டு செதுக்கியுள்ளேன். நீ ஓட்டுக்குள் உறங்கி ஊரும் நத்தையல்ல சிப்பிக்குள் ஒளிரக்காத்திருக்கும் முத்து என்பதை நினைவில் கொள். ஒரு தீக்குச்சியிலிருந்து ஏராளம் விளக்குகளை ஏற்ற முடியும். அதைப்போல நான் ஏற்றிய விளக்கும் பல நூறு விளக்குகள் ஒளிர வழி வகுக்க வேண்டும் என்பது எனது ஆசை. பார் போற்றும் உத்தமனாய் நீ வாழ, வளர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

என்றும் உன் நினைவில்
**ஆசிரியர் திருமதி க.பத்மராஜா**
யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.

# மன்னர் நெஞ்சில் பாயாதோ

தமிழ் இலக்கிய செல்நெறியில் இரமகாதைக்கு முக்கிய இடமுண்டு. அது உலகத்தின் செந்நெறிக் காவியங்களிற்கு நிகராக வைத்து எண்ணப்படும் தகைமைச்சால் காவியம். கவிச்சுவையும் கற்பனை நயமும் காவியநலன்களும் பொதிந்து கற்குந்தோறும் இன்பம் நல்கும் கலைக்களஞ்சியமாக-தலை சிறந்த காப்பியமாக மதிக்கப்படுகின்றது. கம்பர் தனது உயரிய படைப்பாற்றல் கொண்டு இராமராட்சியம் என்னும் அறநெறி அரசியற் சித்தாந்தத்தை இக்காப்பியத்தினூடாக நிறுவிக்காட்டியுள்ளார். தன்னிகரில்லாத் தலைவனை உயிரெனக் கொண்டு ஒழுகும் குடிகளையும், குடிபுரந்தோம்பும் மன்னனையும் கற்போர் மனங்களில் ஆழ நிறுத்தும் அற்புத படைப்பாக கம்பச்சித்திரம் காணப்படுகின்றது. என்றாலும் வரலாற்றின் அகப்புறச்சான்றுகளின் வழி சிந்திப்போர்க்கு ஓர் உண்மை தெற்றெனத் தெரியும். கம்பன் அரச பரம்பரையிலோ அன்றி அரச ஆதரவு பெற்ற குடும்பத்திலோ பிறந்தானல்லன். அவன் வெண்ணெய் நல்லூர் சடையனின் ஆதரவில் வாழ்ந்தவன். அவனது கவிதாமேதா விலாசத்தால் தான் அரசசபைகள் அவனை அறிந்தன. ஆளும் வர்க்கத்தின் கவனிப்புக்கு உரியவனானான். அவன் எந்நிலையிலும் தனது சுயத்தை மறக்கவில்லை. அதனாற்றான் இராமச்சந்திரச் சக்கரவர்த்தியின் புகழைப்பாடிய போதும் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு ஒரு குடிமகனாக நின்று தனது விமர்சனத்தையும் முன்வைக்கின்றார். இவ்வாறு கம்பர் ஆளும் வர்க்கத்தை நோக்கித் தொடுத்த சில கேள்விகளை இனிக் காணலாம்.

அன்பு என்னும் கருத்தியலுக்கு கம்பன் கொடுத்த உருவமே குகன் என்னும் படைப்பு கண்ணப்பன் ஒப்பதோர் அன்பை குகனிடம் காணலாம். கங்கைப் படலத்திலே குகனது தன்னலமற்ற அன்பைக் காணலாம். ஆனால் குகப்படலத்திலே தான் அதன் முழுமை தெரிகிறது. அங்கே தான் கம்பன் ஒரு வினாவைத் தொடுக்கின்றான்.

**"மன்னர் நெஞ்சினில் வேடர் விடும் சரம் பாயாதோ"** குகன் கல்வியறிவற்றவன். இராமன் மீது கொண்ட பேரன்பினால் அறத்தின் ஆழி போன்ற பரதனின் நிலை அறியாது உரைத்தான் என்று அமைதி கொள்ளலாம். ஆயினும் இது ஒரு சாதாரண வினா அன்று, குகனது அம்பை மட்டும் அது கருதவில்லை. ஏழை சொல் அம்பலம் ஏறாதோ எனும் ஆதங்கத்தின் வெளிப்பாடு ஆளும் வர்க்கத்தின் அதிகார மையங்களை தகர்க்கும் சக்தி சாதாரண குடிமக்களுக்கு இல்லையா? என்ற புரட்சிக்குரலை இங்கு கேட்க முடிகின்றது. கம்பன் இத்துடன் நிற்கவில்லை. அடுத்த பாடலில்,

**"பாவமும் நின்ற பெரும் பழியும் பகை நட்போடும் ஏவமும் என்பவை மண்ணுலகு ஆள்பவர் எண்ணாரோ?"** என்ற கேள்வியை முன்வைக்கின்றான்.

ஊமைக்குத்து என்பது இதுதான். கூட்டத்தோடு கூட்டமாக நின்று ஒரு குத்து. குத்தியவன் யாரென்ற தெரியாது. கூட்ட நெரிசலில் வலியும் தெரியாது. இங்கே ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு, இராமன் மீதான பக்தி காரணமாக தசரதர் குமாரர் ஒரு போதும் தவறிழைக்கவே மாட்டார்கள் என்பதை குகன் எண்ணிப்பார்க்காமல் இப்படிக் கூறி விட்டான். பரதன் இராமனைக் கண்டு நாட்டிற்கு அழைத்துச் சென்று ஆட்சியை மீண்டும் வழங்கவே வந்துள்ளான் என்று அறிந்த பின் " எம் பெருமான் பின் பிறந்தார் இழைப்பாரோ பிழைப்பு? என்று சமாதானம் கொள்கின்றான். அவ்வளவில் அவரது சினமும் வெறுப்பும் மறைந்து விடுகின்றன. அவன் கூறிய வார்த்தைகளும் பொருளற்றதாகி அன்பு மட்டுமே வெளிப்பட்டு தெரிகிறது.

உண்மையில் அவ்வடிகளை அவ்வளவு சாதாரணமாக விட்டு விட முடியாது. மண்ணுலகத்தை ஆளுகின்ற அரசர்கள் தாம் ஒரு செயலை செய்கின்ற போது அதனால் உண்டாகும் விளையும் பாவத்தையும், செயல் முடிந்த பிறகு அதனால் உண்டாகும் பழியையும், பகைவர் யார்? நண்பர் யார்? என்பவற்றையும் இதர குற்றங்களையும் எண்ணிப்பார்க்க மாட்டார்களா? என்றவாறு குகன் கேட்கும் வினாவில் கம்பனது பட்டறிவு வெளிப்படுகின்றது. அரசியலில் சுயலாபத்திற்காக எதையும் செய்வார்கள், பாவமும் பழியும் பாரார், பகை நட்பும் எண்ணார். எவ்வளவு அழகான உண்மை. இன்றைய அரசியலுக்குக் கூட இது பொருந்துகின்றதே. மக்களாட்சி என்னும் ஜனநாயக அரசியலிலேயே இவ்வாறு நடக்கின்றதெனின் மன்னராட்சி எனும் சர்வதிகார அரசியல் நிலவிய அக்கால அரசியலில் எவ்வளவு துரோகங்கள் இடம்பெற்றிருக்கும் என்பது சொல்லாமலேயே விளங்கும்.

கம்பன் வாழ்ந்த காலம் தமிழர் அரசியலின் பொற்காலம். தென்னாசியாவின் பெரும் பகுதிகளில் புலிக்கொடியை பறக்க விட்டு ஆழ்கடலெங்கும் சோழமன்னர் ஆண்டகாலம். அத்தகைய பேரரசுகளின் உருவாக்கத்தில் தர்மங்கள் மீறப்பட்டும் நெறிமுறைகள் சிதைக்கப்பட்டும் போவதைக் கண்டதால் உண்டான ஆதங்கத்தையே கம்பன் குகன் வாயிலாக வெளியிடுகின்றான். தன்னுடைய எதிர்ப்புணர்வும், விமர்சனமும் காவியத்தின் இருப்பையும், வளர்ச்சியையும் பாதிக்காத வண்ணம் வேட்டுவனான குகனின் அறியாமையில் மறைத்து வெளியிட்ட பாங்கை உணர்ந்து கொண்டால் கம்பன் கவிரசம் இன்பம் பயக்கும்.

**திரு.க.சிவராசா** (M.A)
ஆசிரியர்

# ஆரம்பக்கல்வி வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் கணித முன் எண்ணங்களை கையாளுதல்

ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் அதாவது எல்லா முதன்மை நிலைகளிலும் கணிதமுன் எண்ணக்கருக்களை பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்யும் போது உண்மையான பொருட்களையும், செயற்பாடுகளையும் இயன்றவரை முன்வைக்க வேண்டும். நேரடியாகவே விடயங்களைக் கூறுவதோ விளங்கவைப்பதோ மெய்ப்படுவதில்லை. பிள்ளையின் உளவிருத்திக்கு சிற்சிலவற்றை காண்பதற்கும் கையாண்டு பார்ப்பதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும். சிலவற்றைக் கண்டு பிடிக்கும் ஆசை, ஆய்ந்தறியும் ஆர்வம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். இதன் பின்னணியாக சுயகற்றல் பிள்ளைகளிடத்தே ஊக்குவிக்கப்படுகிறது. செயற்பாடுகளினூடாகப் பெறப்படும் அறிவு நிரந்தரமானது.

“கேட்பவை மறந்து விடும், காண்பவை மனதில் இருக்கும் செய்பவை விளங்கும்” எனும் பழமொழி செய்முறைக் கற்பித்தலின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. எனவே வகுப்பறைகளில் செயற்பாடுகளினூடாக கற்பிக்கும் பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரித்து செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். குழுமுறைச் செயற்திறன் கற்றலுக்கு வழி கோலும் முறையாக அமையும்.

குழுக்களாகச் செயற்படும் போது மாணவர்களிடையே சமூகத்திறன்களை வெளிக்கொண்டு வர முடியும். அவர்களின் கூட்டுணர்வு விருத்தியடையும். கூட்டாகப் பங்குபற்றுவதால் பழிவாங்கும் உணர்வு, பொறாமை உணர்வு ஏற்படாது. செயலாற்றலுடன் செயற்பாடுவதினால் பிள்ளையின் உடல் உள விருத்தி மட்டுமல்லாது விவேகமும் இயல்பாகவே ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை.

**திருமதி யூட்சி பீற்றர் ஜஸ்ரின்**
ஆசிரியர்-ஆரம்பக்கல்வி

# மாணாக்கரின் வகைகள்

கல்வி பற்றி பலவகையான நூல்களில் கூறப்படுகின்றது. நாம் ஒரு பிறப்பில் கற்கின்ற கல்வி அது ஏழு பிறப்பிற்கும் சென்றடையும் எனவும் கூறப்படுகின்றது. இக் கல்வியினை நாம் இளமையிலேயே கற்க வேண்டும். இதனால் தான் "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பர். இவ்வாறு கல்வியைப் பெறுகின்ற மாணாக்கரை நன்னூல் மூன்று வகையாக பிரிக்கின்றது.

1.தலை மாணாக்கர்
2.இடை மாணாக்கர்
3.கடை மாணாக்கர்

இதனை "அன்னம் ஆவே மண்ணொடு கிளியே இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி அன்னர் தலை, இடை, கடை மாணாக்கர்" எனக் கூறுகிறது.

தலை மாணாக்கரை அன்னம் பசு போன்றவற்றிற்கும் இடை மாணாக்கரை நிலம் கிளி போன்றவற்றிற்கும் கடை மாணாக்கரை இல்லிக்குடம் ஆடு எருமை போன்றவற்றிற்கும் ஒப்பிடப்படுகின்றது.

முதலாவதாக தலை மாணாக்கரை நோக்கும் போது அன்னமானது பாலையும், நீரையும் கலந்து வைத்தால் அவற்றை வேறுவேறாகப் பிரித்து பாலை மட்டும் உட் கொண்டு நீரை நீக்கி விடும். அது போல தலை மாணாக்கர் ஆசிரியர் உரைக்கும் பாடத்தின் சாரத்தையும் கோதினையும் வேறுவேறாகப் பிரித்து சாரத்தை மட்டும் உட்கொண்டு கோதினை நீக்கி விடுவர். எனவே அன்னம் தலை மாணாக்கருக்கு உவமை ஆகும்.

அடுத்து பசுவினை நோக்கும் போது பசுவானது நிரம்பப் புல் வளர்ந்திருக்கும் இடத்தைக் கண்டால் அப்புல்லை விரைவாக வயிறு நிரம்ப மேய்ந்து பின்பு ஓர் இடத்திலிருந்து சிறிது சிறிதாக அதனை வாயில் வருவித்துக்கொண்டு அசை போடும் அதுபோல தலை மாணாக்கர் ஆசிரியர் தரும் கல்வியை உள்ளம் நிரம்பும் படி விரைவில் கேட்டு உட்கொண்டு பின்பு ஓர் இடத்திலிருந்து அக்கல்வியை சிறிது சிறிதாக நினைவில் கொண்டு சிந்தித்து தெளிவு பெறுவர்.

இடை மாணாக்கர் நிலம், கிளி போன்றவற்றிற்கு உவமையாக கூறப்படுகின்றனர். நிலமானது உழவர்கள் வருந்திப் பயிர்செய்யும் உழைப்பின் அளவுக்கு ஏற்றவாறு பயிர் விளைவினைத் தரும். அதுபோல இம் மாணாக்கரும் ஆசிரியர் கற்பித்த உழைப்பின் அளவுக்கு ஏற்ற கல்வி அறிவையே காட்டுவர்.

கிளியை உதாரணம் காட்டும் போது கிளிப்பிள்ளை சொன்னதைச் சொல்லும் அதாவது தனக்கு கற்பித்த சொற்களைத் தவிர வேறொன்றையும் சொல்லாது அது போல இடைமாணாக்கர் ஆசிரியர் கற்பித்த நூற்பொருட்களைத் தவிர வேறொரு நூற்பொருளையும் கூற மாட்டார்கள்.

அடுத்து கடை மாணாக்கரை நோக்கும் போது இல்லிக்குடத்திற்கு ஒப்பிடப்படுகிறது. ஓட்டை உள்ள குடத்தில் அதற்குள் தண்ணீரை ஊற்ற ஊற்ற அத் தண்ணீர் வெளியில் ஒழுகி விடும். எப்போதும் நிரம்பாது. அது போல ஆசிரியர் நூற்பொருளை கற்பிக்க கற்பிக்க மனதில் கொள்ளாது மறந்து விடுவர். எப்பொழுதும் கல்வி அறிவால் நிரம்ப மாட்டார்கள்.

ஆடு ஒரு செடியில் தனது வயிறு நிரம்புவதற்கு வேண்டிய அளவு புல் நிறைந்திருந்தாலும் அதனை வயிறு நிரம்ப மேயாமல் சிறிது கடித்து விட்டு பல செடிகளில் மேயும். அது போல ஒரு ஆசிரியரிடம் முழுமையாக கற்காமல் பல இடத்தில் போய் சிறிது சிறிதாக கற்றலைக் குறிக்கும்.

எருமை ஒரு நீர்நிலைக்குச் சென்றால் அங்குள்ள தெளிந்த நீரைக் குடிக்காமல் அதனைக் கலக்கி விட்டுக் குடிக்கும். அது போல கடை மாணாக்கரும் ஆசிரியரின் உள்ளத்தை வருந்திக் கலங்கச்செய்து பின்பு பாடத்தைப் படிப்பார்.

நெய்யரியை பார்க்கும் போது நெய்யரி என்னும் பன்னாடையானது நெய் தேன் முதலியவற்றை வடிகட்டுவதற்காகத் தன் மேல் ஊற்றும் போது அவற்றின் சாரத்தை கீழே ஒழுக விட்டு கசடாகிய அழுக்கினைத் தன்னிடம் தங்க வைத்துக் கொள்ளும். அது போல கடை மாணாக்கரும் நல்ல கருத்துக்களை எல்லாம் மறந்து விட்டு மற்றவற்றையே பற்றிக் கொள்வர்.

ஆகவே மாணவர்களாகிய நீங்கள் தலை மாணக்கர் போன்று நல்ல விடயங்கள், நல்ல கருத்துக்கள் போன்றவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் கல்வியில் ஐயம் திரிபடக் கற்பீர்கள். வாழ்க்கையில் முன்னேறுவீர்கள்.

**திருமதி சியாமினி மாசிலாமணி**
ஆரம்பக் கல்வி

# Microwave சமையல்

Microwave சமையல் முறையானது குறுகிய நேரத்தில் உணவுப்பொருளை சமைத்து முடிப்பதற்கு ஏற்ற நவீன சமையல் முறையாகும். இங்கு மின்சக்தியானது நுண்ணிய அதிர்வலைகளாக மாற்றப்பட்டு அதிர்வின் மூலம் உணவு சமைக்கப்படுகிறது. Microwave oven இல் 3 வகை உண்டு.

- Micro wave with cril
- Micro wave
- Konvection with cril

இம் முறையில் உணவுப்பொருட்களின் சத்து பெருமளவு இழக்கப்படுவதில்லை. பாலில் உள்ள லைசோசோம் சிதைவடைகிறது. காய்கறிகளில் பெருமளவு சக்தி இழக்காது பேணப்படும் இறைச்சி மற்றும் மாமிச உணவுகளில் சில கூறுகள் இழக்கப்படுகிறது. Microwave oven இல் முட்டை கோதுடன் வைப்பது மற்றும் நீர் சூடாக்குவது தவிர்க்க வேண்டும். வறுவல் செய்யும் போது உப்பு சேர்ப்பது தவிர்க்க வேண்டும். இதில் பயன்படுத்தும் பாத்திரங்கள் கண்ணாடி மற்றும் மட்பாண்டங்கள், microwave safty plastic போன்ற பாத்திரங்கள் பயன்படுத்தல் சிறந்தது. மெட்டல் மற்றும் அலுமினியத்தால் ஆன பாத்திரங்களை அறவே பயன்படுத்தக் கூடாது. சமைத்து முடிந்தவுடன் oven நின்ற சத்தம் வந்ததும் oven ஐ off செய்து உணவுப் பொருளை வெளியே எடுத்து விட வேண்டும். oven இன் முற்பகுதியில் convection என்னும் பட்டன் அழுத்தி உணவுப்பொருள் வேகுவதற்கு தேவையான வெப்பநிலை அழுத்திக் கொள்ள முடியும். Time என்னும் பகுதியில் 2 நிமிடம் வரையும் 30 செக்கன்களாக கூட்டிக் கொண்டு போகலாம். microwave இல் உணவு சமைக்கும் போது உயரதிர்வு அலைகள் உணவு முழுவதும் சென்று வெப்பத்தை உண்டாக்கும் இதனால் உணவின் வெளிப்பாகம் வேக எடுக்கின்ற நேரத்தில் உணவின் உட்பாகமும் வெந்து விடும். எனவே சில வினாடிகளில் வெப்பத்தினால் சமையலை முடித்துக் கொள்ள இயலும். புகையில்லாத சுத்தமான உணவாக சமைக்க உதவுவதுடன் இவ்வுபகரணம் நீரினால் குளிரேற்றப்படுவதால் உணவு மட்டுமே வெப்பமேற்றப்பட்டதாக இருக்கும்.

இது தற்கால சமையல் முறைகளில் நேரத்தை மீதப்படுத்தக் கூடிய சிறந்த சமையல் முறைகளுள் ஒன்றாக இருக்கின்றது.

**திருமதி ம. அ. தர்சன்**
ஆசிரியர்,
மனைப்பொருளியல்

# மீண்டெழுவோம்

கூடி வாழ்ந்த உறவுக் கூடு
ஆட்டம் காண்கிறது
உலகம் உருக்குலைகிறது - அதற்கு
உலக மயமாக்கலும் உதவுகிறது

பாட்டி பாட்டனுடன்
பேத்தி பேரன் என
ஒன்றுபட்டு உண்ட வாழ்க்கை
மாண்டு போகிறது - குடும்ப
பல்கலைக்கழகத்திற்குள் - கடும்
புல்கலகங்கள் தோன்றுகிறது

முற்றிய முரண்பாட்டு மூட்டைகளைச் சுமந்து
வற்றிய கண்ணீர்த் துளிகளுடன்
ஒன்றை ஒன்று பார்க்காத
ஒன்பது கிரகக் கோலமாய் - எமது
உறவுக் கோலங்கள்

துடிதுடிப்பும் படபடப்பும் - கடும்
முந்திச் செல்லலால் அந்தரிப்பும்
இயந்திர மனிதராய்
இதயம் கனக்க
சிரிப்பதை மறந்து
சினப்பதை ஏற்று
எங்கே செல்கின்றாய்?

தொலைபேசிக்குள் கைவிரல்கள்
தொலைகாட்சிக்குள் கண் வில்லைகள்
முகநூலில் மூழ்கி நிற்பதால் - அகமகிழ்ந்து
அயலவருடன் பேச நேரமில்லை
வங்கிக் கடனில் மாபிள் பதிப்பு
வட்டி வளர ஏங்கித் தவிர்ப்பு
கடன்பட்டார் நெஞ்சம் போல்
தடுமாறித் துடிப்பு

ஆலயங்கள் பெருகுகின்றன
ஆன்மாக்கள் லயப்படவில்லை
கோவிலை அண்டி பியரப் பேணிப் பூக்கள்
கொடுமையிலும் கொடுமையல்லவா?
ஆண்டவனுக்கு தினமும் பூசை நடக்கிறது - ஆனால்
அடியார்கள் வரவு குறைகிறது
பக்தி குறைகிறது - நம் பண்பாடு
பற்றி எரிகிறது

புனலைக் கொண்டு அனலை
அணைக்க வேண்டிய இளைஞர் பலர்
போதையில் பயணிக்கின்றனர்
பாரதி வழியில் நீ
பாய்ந்து எழுந்து
பலமாய் நம்மவரை மாற்றடா!
உரமாய் நீ ஊருக்கு உழைத்தால்
வரமாய் நம் இலங்கை நாடு உயரும்

எங்கும் அமைதிப் பூக்கள் பூக்கும்
ஏங்கும் இதயங்கள் சிலிர்க்கும்
கூத்தும் பரதமும் உன் புகழ்பாடும்
குதித்தோடி வாடா இளைஞனே!

**திரு. இராசதுரை இதயராஸ்**
ஆசிரியர்

**எதை வேண்டுமானாலும் புள்ளி விவரங்களால் அளந்திடமுடியும், உண்மையைத்தவிர.**
**-குஷ்வந்த் சிங்.**

**அதிருப்தி என்பது இயற்கையாகவே நம்மிடம் உள்ள செல்வம். ஆடம்பரம் நாமே தேடிக்கொள்ளும் வறுமை.**
**-சாக்ரடீஸ்.**

**பிறருடைய தவறைக் காண முயற்சிக்காமல், உங்களுடைய தவறை திருத்திக் கொள்ளுங்கள்.**

# டெங்குக் காய்ச்சல்

இலங்கையில் கடந்த பத்து வருடங்களாக டெங்குநோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்த வருடம் (2017) ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. ஆகையால் நாம் நோயின் தன்மை பற்றி அறிந்திருப்பது முக்கியமானதாகும். இது ஈடிஸ் எனும் வகை நுளம்பினால் பரவும் நோயாகும்.

டெங்குக்காய்ச்சல் என சந்தேகிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டியவை

❖டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டிருப்பின் பின்வரும் அறிகுறிகளில் ஏதேனும் இருஅறிகுறிகள் காணப்படுமாயின் நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கும் என சந்தேகிக்கப்பட வேண்டும்.

உயர்காய்ச்சலுடன்

- தலைவலி மற்றும் கண்களுக்கு பின்னால் வலி
- தசை மற்றும் மூட்டு வலி
- குமட்டல் மற்றும் வாந்தி
- தோல் தடித்தல் (சிவப்பு நிறம் மற்றும் இரத்தக்கசிவு)

டெங்குநோய் அதிகம் காணப்படும் பிரதேசத்தில் வசிப்பது சந்தேகத்தை உறுதிப்படுத்தும்.

❖மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகள் அல்லது இருதினங்களுக்கு மேல் காய்ச்சல் இருப்பின் தகுதியான வைத்தியரிடம் ஆலோசனை பெறல்.

❖இரு தினங்களுக்கு மேல் காய்ச்சல் மட்டும் இருப்பின் குருதி எண்ணிக்கை பரிசோதனை (full blood count FBC) செய்தல் வேண்டும்.

❖டெங்கு நோயாளியின் காய்ச்சல் குறைவடைகையில் சிக்கல் நிலைகள் (டெங்கு குருதிப் போக்கு காய்ச்சல் DHF)ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவதானமாக இருத்தல் வேண்டும். டெங்குக்காய்ச்சல் என சந்தேகம் இருப்பின் செய்ய வேண்டியவை.

- கடினமான வேலைகளை செய்வதைத் தவிர்த்து போதுமான அளவு ஓய்வெடுத்தல்.

❖காய்ச்சலைக் கட்டுப்படுத்த

- காய்ச்சல் இருப்பின் சரியான அளவில் ஆறு மணித்தியாலத்திற்கு ஒரு முறை பரசிட்டமோல் மருந்தை உட்கொள்ளல்.
- கடுமையான காய்ச்சல் இருப்பின் துப்பரவான துணியை (பருத்தி) வெந்நீரில் நனைத்து நோயாளியின் உடம்பை ஒத்தடம் செய்யவும்.
- வேறு நோய்களுக்கு தொடர்ச்சியான மருந்துகள் உட்கொள்பவர் எனின் அது தொடர்பாக வைத்தியரிடம் கூறவும்.

  (உ+ம் - நீரிழிவு, குருதி தொடர்பான நோய்கள்)
- கடுமையான காய்ச்சலைக் குறைப்பதற்கு அஸ்பிரின், வலிநிவாரணிகள் டைலோபினக்கமிலம், இபுப்ரோபன்) போன்ற மருந்துகளை தவிர்க்க வேண்டும்.

❖குறிப்பிட்டளவு நீராகாரங்களை உட்கொள்ள வேண்டும்.

வளர்ந்தவர்கள்: ஒரு நாள் 2 - 2.5லீற்றர்

குழந்தைகளுக்கு வைத்தியரின் ஆலோசனைப்படி நீராகாரங்களை வழங்க வேண்டும்.

திரவங்களை அளப்பதற்கு சரியான பாத்திரங்களை பயன்படுத்தவும்.

ஒருநாளைக்கு தேவையான நீராகாரங்கள் குறிப்பிட்ட நேர இடைவெளியில் (நோயாளியின் தேவைக்கேற்ப) வழங்கப்பட வேண்டும்.

❖வெற்று நீரை விட நீராகாரங்கள் உட்கொள்ளல் சிறந்தது.

உ+ம்: புதியபழரசம், கஞ்சி, இளநீர், சூப், பால், ஜீவனி (ORS)

❖மெதுவான உணவுவகைகளை உட்கொள்ளல் சிறந்தது.

- அரை திண்மநிலை மற்றும் மெதுவான உணவு வகைகளை வழங்கவும்.
- சிறிய அளவிலான உணவை பலமுறை வழங்கவும்.
- போசாக்கான இயற்கை உணவுகளை உட்கொள்ளல் சிறந்தது.
- அதிக எண்ணெய் கலந்த உணவு வகைகள் வாந்தி, குமட்டலை ஏற்படுத்தும். எனவே இவற்றை தவிர்க்கவும்.
- சிறுகுழந்தைகளுக்கு குளுக்கோஸ்/ பிரக்டோஸ் போன்ற சீனி வகைகள் கலந்ததிரவஉணவுகளை சிறு இடைவெளிகளில் தொடர்ச்சியாக வழங்கவும்.

❖பழவகைகள் உட்கொள்ளல் சிறந்தது.

❖சிவப்பு நிற மற்றும் கபிலநிற உணவுகள்/ பானங்கள் தவிர்க்கவும். (தேனீர், கோப்பி, நிறகுளிர்பானங்கள், பீட்ரூட் போன்ற உணவுகள், மாமைட், திராட்சை)

டெங்குநுளம்புகள் பகல் வேளைகளில் சுறுசுறுப்பாக இருப்பதால் பகல் நேரங்களில் பாதுகாப்பாக இருக்கவும்.

- கை கால்களை அதிகம் மறைக்கும் விதமான ஆடைகளை அணியவும்.
- பகல் வேளைகளில் ஓய்வெடுப்பதாயின் நுளம்பு வலைகளைப் பாவிக்கவும்.
- நுளம்பு அணுகாமல் இருக்கு நுளம்பு விரட்டி மருந்துகளை பாவிக்கவும். உ+ம்: சிற்றனெல்லா எண்ணெய்
- தொடர்ச்சியாக வீடு மற்றும் சுற்றுப் புறங்களில் நுளம்பு பெருகும் இடங்களை சுத்தப்படுத்தவும்/ அகற்றவும்.

## டெங்கு குருதிப்போக்கு காய்ச்சல் (DHF)

DHF என்பது டெங்குக்காய்ச்சலின் ஆபத்தான கட்டமாகும். DHF இன் போது குருதியின் திரவப் பகுதி (பிளாஸ்மா) குருதிக்குழாயிலிருந்து வெளியேறி உட்குழிகளை அடைவது முக்கிய அம்சமாகும். இது பொதுவாக காய்ச்சல் ஏற்பட்டு மூன்றாவது நாள் அல்லது அதற்கு பின்பு ஏற்படுவதோடு இதை FBC பரிசோதனை மூலம் அறியலாம். இவ் பிளாஸ்மா வெளியேற்றத்தை கண்டறிந்து தகுந்த சிகிச்சை வழங்காவிடின் அதிர்ச்சி நிலை ஏற்படலாம்.

டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்படமுன் பின்வரும் அறிகுறிகள் தோன்றலாம் (காய்ச்சல் ஏற்பட்டு 3-7 நாட்களில்)

- அதிக வயிற்றுவலி
- தொடர் வாந்தி
- குருதிப்போக்கு (முரசிலிருந்து குருதி வெளியேறல், கருமைநிறமலம், குருதி கலந்த வாந்தி, சிறுநீரில் குருதி வெளியேறல்)
- சோர்வு, அதிகதூக்கம், பதட்டம், தலைசுற்றல்
- கை மற்றும் கால் குளிர்தல்
- சிறுநீரின் அளவு குறைதல், ஆறு மணித்தியாலங்களிற்கு மேல் சிறுநீர் வெளியேறாது இருத்தல்.

இவ் அபாய அறிகுறிகள் காணப்படுமிடத்து உடனடியாக மருத்துவ மனைக்கு செல்வதுடன் தகுந்த வைத்தியரிடம் சிகிச்சை பெறவேண்டும்.

டெங்குநோயை நூறு வீதம் குணப்படுத்த முடியும். இதற்கு நோயாளியின் ஒத்துழைப்பு முக்கியமானது. மக்கள் விழிப்புடன் செயற்பட்டு தகுந்த நேரத்தில் வைத்தியரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ளல் நோயாளியின் தாக்கத்தைக் குறைத்து நோயைக் கட்டுப்படுத்த வழிவகுக்கும்.

**த. பேரானந்தராஜா**
(வைத்திய கலாநிதி, பொது வைத்திய நிபுணர்)

**ஒழுக்கம் பிச்சைக்கார உருவில் இருந்தாலும் கௌரவிக்கப்படும்.**
**-யாரோ.**

**மனம் ஒரு நல்ல வேலைக்காரன், ஆனால் மோசமான எஜமான்.**
**-சாக்ரட்டீஸ்.**

**உங்கள் எதிரிகளை கவனியுங்கள், அவர்களே உங்கள் குற்றங்களை முதலில் கண்டுபிடிப்பவர்கள்.**
**-பெனிலின்.**



தேசிய மட்ட சுகவாழ்வுப் பேரவை தேசிய மட்டம்
விருதுபெற்ற மாணவி ச. துளசிகாவுடன் வெற்றியீட்டிய மாணவர்கள்



ஒலிம்பியாட் போட்டி விஞ்ஞானம் - 2017
தேசிய மட்டம் 28ம் நிலை

## NATIONAL CADET CORPS

### ANNUAL ARMY BOYS ASSESSMENT CAMP - 2017 DETAIL XII

### J/ ILAVALAI MEIHANDAN MV - 20th BATALLION



1st Row (Left to Right)
CQ KAMALAVANNAN V. TEACHER GAUTHAM S. LT TK NAWARATHNA. LFT. COL. MENDIS LP COMMANDANT TC RANTEMBE , MAJAR GEN WICKRAMASINGHE AKP UPS DIRECTOR NCC, LT. COL PALITHA ARAWPOLA CO 20TH BATTALION. CDT NSJD SILVA, CDT IRAJ M. CDT THASINTHAN S.

2nd Row (Left to Right)
CDT DILAKSHAN T. CDT KENUJAN M. CDT SUJEERATHAN T. CDT ANOSHAN S. CDT ANUSHAN R. CDT BENUYA R. CDT REJINOL R. CDT THIVAKARAN S. CDT KANEEPAN S. CDT ROSHANTHAN T. CDT RUVINTH T. CDT SUKANTHAN P.

3rd Row (Left to Right)
CDT PUVIKARAN K. CDT SANJEEPAN S. CDT VIMALARAJ S. CDT LAKSHAN S. CDT SANJEEWAN A. CDT VITHUSAN R. CDT THUSHANTHAN Y. CDT JAYANUSHAN J. CDT RAJEEVAN S. CDT MUKUNTHAN M.

## NATIONAL CADET CORPS

### ANNUAL ASSESSMENT CAMP ARMY WING BOY'S - DETAIL - XI - 2018

### J/ ILAVALAI MEIHANDAN MAHA VIDYALAYAM

### 20TH BATTALION



1st Row (Left to Right)
Rq K PARTHEEPAN, S GOWTHAMAN, Adjutant Lt N NARENTHIRA, Deputy Commandant Lt Col RM PREMATHILAKA, Commandant Lt Col LP MENDIS Commandant TC Rantambe, Battalion Co Mq WMBA BANDARA, Training Officer 2/Lt S RAGURAJAM, Psi Instructor Cpo MAPS KUMARA, Sgt S THIVAKARAN

2nd Row (Left to Right)
CDT S KEMILAN, CDT S RANJEEVAN, CDT S SANCHEEPAN, CDT T RUVINTH, LCPL S FLNOSAN, LCPL R ANOOSAN, CDT R MATHANRAJ, CDT S THUVARAKAN, CDT S SUVATHIKAN, CPL S VIMALRAJ, CDT A MATHUJAN, CDT J ANUSTAN

3rd Row (Left to Right)
CDT N ABINOYAN, CDT S LAXSAN, CDT K KAJUPAN, CDT R VITHUSAN, CDT T TETHURSAN, CDT S KANEEPAN, CDT T DILAXSAN, CDT P SUGONTHAN, LCPL J THAYANUSHAN, CDT K PUVIKORAN

# மின்சாரத்தில் சிக்கனம் பேணுவோம்

Electricity is a good servant but bad master. அதாவது மின்சாரத்தை நாம் பயன்படுத்தி வேலை செய்வித்தால் மட்டுமே அது நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் மின்சாரத்தை அதனது போக்கில் விட்டால் மிகவும் ஆபத்தானதும் செலவீனத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விடும்.

மின்சாரத்தை பாவிக்காதோர் இவ் உலகில் மிக அரிது எனலாம். அந்த அளவுக்கு மின்சாரத்தின் பயன்பாடு இன்றியமையாததும் அத்தியவசியமானதும் ஆகும். ஆனால் தகுந்த வகையில் தேவைக்கேற்ப மின்சாரத்தை பயன்படுத்த நாம் பழகிக் கொள்ள வேண்டும். உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு வரையறுக்கப்பட்டது. அத்துடன் மின் உற்பத்திக்கான செலவும் கூடுதலானது.

எனவே மின் விரையமாதலைத் தடுப்பதற்கு நாம் கைக்கொள்ள வேண்டிய அத்தியவசியமான வழிமுறைகளை ஆராய்வோமானால் முதலாவதாக தேவையற்ற மின்குமிழ், மின்விசிறிகளை இயங்க விடாதிருக்க விடுவதுடன் அவற்றை சுத்தமாக வைத்திருப்பதுடன், LED மின்குமிழ்களை பயன்படுத்துவது மிகச்சிறந்தது. இரவு வேளைகளில் திருடர் பயம் காரணமாக எரியவிட வேண்டியிருப்பின் sensor switch பொருத்த வேண்டும். மேலும் hot plate, heater, electric water pump போன்றவற்றின் இணைப்பு வயரின் தூரத்தை முடிந்தளவு குறைப்பதுடன் ஒரே நேரத்தில் அனைத்து மின் உபகரணங்களையும் பயன்படுத்தலை முடிந்தளவு குறைத்தல் சிறந்தது.

மேலும் சில பழைய மின் உபகரணங்கள் கூடியளவு மின் விரயத்தை ஏற்படுத்த கூடியவைகளாதலால் இவைகள் மாற்றப்படுதல் வேண்டும். அத்துடன் சில power pack (phone, battery charger) plug செய்தபடியே பாவிக்கப்படாமல் இருந்தால் மின் விரயத்தை ஏற்படுத்துவதுடன் power pack இன் பாவனை காலத்தையும் குறைக்கும். எனவே பயன்படுத்தியவுடன் unplug செய்வது சிறந்தது. மின் உபகரணம் ஒன்றினை நாம் பயன்படுத்த ஆயத்தமாகிய பின்புதான் switch on பண்ணுவதற்கும் பழகிக் கொள்ள வேண்டியது அத்தியவசியமானது.

மின் அழுத்தியை பயன்படுத்தும்போது தனித்தனியாக வெவ்வேறு தடவைகளில் iron செய்யாது அழுத்த வேண்டிய எல்லா உடுப்புகளையும் ஒரே முறையில் iron பண்ணல் மின் விரயத்தைப் பெருமளவு குறைக்கும். அத்துடன் உரிய வெப்பநிலை அடைந்ததும் தானாகவே செயலிழக்கச் செய்யும் வெப்பக் கட்டுப்பாடு உடைய iron box பாவித்தல் நன்று. அத்துடன் குறைந்த வெப்பம் தேவைப்படும் துணிகளை

முதலிலும் கூடிய வெப்பம் தேவையானவற்றை அடுத்ததாகவும் மின்னழுத்தியை பயன்படுத்தி அழுத்த பழகிக் கொள்ள வேண்டும்.

குளிர்சாதனபெட்டிகளின் பயன்பாட்டை பொறுத்த வரையில் அடிக்கடி திறந்து மூடுதல், சூடான பொருட்கள் மற்றும் தேவையற்ற பொருட்கள் என்பவற்றை குளிர்சாதன பெட்டியினுள் வைத்தல் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும். மின்விசிறிகளை குறைந்தளவு வேகத்தில் சுற்றச் செய்தல் மின்விரயத்தைக் குறைக்கும். அத்துடன் மின்விசிறிகள் தூசிகளற்று இருக்கச் செய்ய வேண்டும். கணிணியின் பயன்பாடு முடிவடைந்ததும் off பண்ணும் போது monitor, speaker என்பவற்றையும் off பண்ண வேண்டியது அவசியமாகும்.

Washing Machine கொள்வனவு செய்யும் போது குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு washing machine இன் கொள்ளளவை தெரிவு செய்தலும் முன்பக்கம் கதவு உள்ள washing machine ஐ தெரிவு செய்தல் சிறந்த தெரிவாகும்.

இடி மின்னல் தாக்கங்கள் ஏற்படுகின்ற போது வீட்டிற்கான மின்இணைப்பை சிறிது நேரம் நிறுத்தி வைப்பதும் தொலைபேசிக்கான cable இணைப்புக்களையும் தொடுகையிலிருந்து நீக்கி விடுவதும் பாதுகாப்பானது.

**சி. குமாரலிங்கம்**
மின் அத்தியட்சகர் (ஒய்வு நிலை)
உப தலைவர், பழைய மாணவர்சங்கம்

**வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ்விப்பதில்தான் உள்ளது.**
**-மெஹர்பாபா.**

**ஒரு மனிதனின் தலைசிறந்த நண்பர்கள் அவனது பத்து விரல்கள்.**
**-ராபர்ட் கோலியர்.**

**நமக்கு தெரிந்தது எது? தெரியாதது எது? -என்பதை**
**அறிந்துகொள்வதே உண்மையான அறிவு.**
**-கன்பூசியஸ்**

**படிப்பில் பிரியமில்லா அரசனாக இருப்பதைவிட ஏராள நூல்களைக் கற்ற ஏழையாக இருப்பது நல்லது.**
**-மெக்காலே.**

# ஓ அன்பான மாணவர்களே! பெற்றோர்களே!! உங்களோடு ஒரு நிமிடம்

ஓ அன்பான மாணவர்களே!

இருபத்தோராம் நூற்றாண்டில் பிறந்த பிள்ளைகளுக்கு எனது அனுபவத்தைத் தெரிவிக்கின்றேன்.

எங்களை சின்னாபின்னமாக்கியிருக்கும் எலிசபெத் மகாராணியிடம் சேர் பட்டம் பெற்றவர்கள் என்றும், மகாராணி எங்களின் கல்வியை மதித்து கையுறை கழற்றி கைலாகு கொடுத்தார் என்றும் இலங்கைத்தீவில் மிகவும் படித்தவர்கள் தமிழர்கள் என்றும் பழம்பெருமை பேசும் நாங்கள் இன்று கல்வியில் ஒன்பதாவது மாகாணமாக இருக்கிறோம் என்பது இன்றுள்ள சமூகத்துக்கு பெருமையோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் அது சிறுமை மிகச்சிறுமை என்பதனை ஏன் எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை அல்லது புரிந்து கொள்ள மறுக்கிறார்கள் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.

நான்கு வயதிலேயே உங்கள்மீது உங்கள் மூளைத்திறனைவிட அதிகமான பழுக்களை புதியகல்வி என்ற பெயரினாலே திணிப்பதிலிருந்து உங்கள் மீதான அழுத்தங்கள் ஆரம்பமாகிவிடுகிறது. நான்கு வயதிலேயே உங்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் ஆரம்பமாகிவிடுகின்றன. புரியாத வயதில் தெரியாத விடையங்கள் உங்கள் மீது ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

உங்கள் கல்வி மீதான பார்வை எங்கள் சமூகத்தில் எங்காவது எப்போதாவது இருந்திருக்கிறதா? என்ற கேள்வியைக் கேட்டால் இல்லை என்ற பதில் இலகுவாகக் கிடைத்து விடுகின்றது. கல்வியமைச்சிலும் சரி, திணைக்களங்களிலும் சரி கல்வியை சர்வதேசத் தரத்துக்கு அல்லது அதற்கும் மேலாக கொண்டு செல்ல வேண்டும் என்ற சிந்தனை எப்போதுமே வந்ததில்லை. அது பற்றி எங்கேயும் விவாதிக்கப்பட்டிருக்கிறதா அல்லது சுயவிமர்சனமாவது செய்திருக்கிறோமா என்றால் மிகக் குறைவான பதில்களே எமக்கு கிடைக்கின்றன. வெறுமனே காகிதத்தில் எழுதிவைத்து விட்டால் போதும் என்ற போக்கே பெரும்பான்மையாக காணப்படுகிறது. அரசியல் வாதிகள் வெறும் கட்டிடங்களைக் கட்டித் தந்துவிட்டு கல்வியை உயர்த்துகிறோம் என்கிறார்கள். எங்கள் கல்வி சர்வதேசத்தரத்தில் உள்ளதா? என்ற கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை. உங்களின் மனஉணர்வுகள் பற்றிச் சிந்தித்து அவற்றுக்கு மதிப்பளிக்க யாருமில்லை.

சம்பளத்துக்கு வேலை செய்யும் போக்கு அதிகமாகவும், தியாக உணர்வுடனான அர்ப்பணிப்பு என்பது குறைவாகவும் காணப்படுகின்ற போக்கு நம்மை எங்கேயோ முற்றுப்புள்ளி இட்டு நிறுத்தி வைத்திருக்கிறது. அதையும் மீறி எடுக்கப்படும்

நடவடிக்கைகள் அரசியல் தலையீடுகளால் மாற்றியமைக்கப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலையில் எங்கள் சமூகம் இருக்கிறது என்பதனை முதலில் நீங்கள் புரிந்து கெள்ள வேண்டும்.

நான்கு வயதில் தொடங்கும் பிரத்தியேக வகுப்பு என்னும் ராட்ஷசசுமை பாடசாலையிலிருந்து வெளியேறும்வரை தொடர்கிறது. இது உங்களுக்கு சுகமான சுமை என்று பல பெற்றோர் நினைப்பதுண்டு. அது உங்களுக்கு மனஉளைச்சலை ஏற்படுத்துகிறது. உங்கள் மனசின் எங்கோ ஒரு மூலையில் அது கவலையாக வடுவாக ஆழப்பதிந்து பின்நாட்களில் பெரும் பாதிப்பை உண்டாக்குகிறது ஏன் உங்கள் வாழ்கையையே அழித்து விடுகின்றது என்பதனை எந்தப் பெற்றோரும் யோசித்துப் பார்ப்பதில்லை. ஏன் என்றால் போட்டிக்கு விடப்படும் மிருகங்களைப்போலத்தான் அவர்கள் உங்களைப் பார்க்கின்றார்கள். ஓடுகின்ற குதிரைகளில் முதலாவது குதிரையாக தனது பிள்ளை வரவேண்டும் என்ற போட்டியும் பொறாமையுமான தீயை உங்களைச் சுற்றி பரவ விட்டிருக்கின்றார்கள். அதில் நீங்கள் வெந்துவிடாமல் வெளியே வந்து வெற்றிவாகை சூடவேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றார்கள்.

இவர்களின் இந்தப் பந்தயப் போட்டியில் வெல்லமுடியாத நீங்கள் எத்தனைபேர் தற்கொலைவரை போகிறீர்கள் என்பதுபற்றி அவர்கள் எள்ளவும் சிந்திப்பதில்லை. உங்களை பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடன், தங்கள் உறவினர்களின் பிள்ளைகளுடன் ஒப்பீடு செய்து அவர்களை சுட்டிக்காட்டி உங்களை சித்திரவதை செய்து போட்டிக்கு துரத்துகின்றார்கள். வாழ்க்கையை தொடங்கும் இடத்திலேயே உங்கள் வாழ்க்கை கருகி முடிந்துவிடுகின்றது என்பது தொடர்பாக அவர்களுக்கு கிஞ்சித்தும் கவலை இல்லை. அக்கறை இல்லை.

சில பாடசாலைகளில் பணம் மட்டுமே குறிக்கோளாக இயங்கும் சில ஆசிரியர்கள் பாடசாலை நேரம் முடிய பிரத்தியே வகுப்புகளை நடாத்தும் கல்விநிலையங்களில் கற்பிக்கின்றார்கள். இது அதிகமான நகரப் பாடசாலைகளில் நடைபெறுகின்ற சாதாரண நிகழ்வு. இந்தத் தொற்றுநோய் இன்று கிராமத்துப் பாடசாலைகளிலும் தொற்றத் தொடங்கியிருக்கிறது. அந்த ஆசிரியர்கள் வகுப்பில் அரைவாசியை படிப்பித்து விட்டு மிகுதியை மாலையில் பிரத்தியேக வகுப்புக்கு வாருங்கள் அங்கு சொல்லித் தருகின்றேன் என்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் ஒரு தனியார் கல்விநிலையத்தில் விஞ்ஞானமும், கணிதமும் கற்பிக்கப்படும் வகுப்புகளில் ஒரே நேரத்தில் 900 மாணவர்கள்வரை படிக்கிறார்கள். இதில் மாணவர்கள் எதனைக் கற்றுக் கொள்கிறார்கள், எப்படிக் கற்றுக் கொள்ள முடியும் என்ற சிந்தனையே பெற்றோருக்கு இல்லை. செம்மறி ஆடுகள் போல ஒருவர் போகிறார் நானும் போகிறேன் என்ற மனநிலையில் செயற்படுகிறார்கள்.

செல்வந்த குடும்பப் பிள்ளைகளின் பெற்றோர் அதற்கு தயாராக இருக்கின்றார்கள். நடுத்தர வகுப்பினர் வங்கிகளில் கடனைப் பெறாறவது தமது பிள்ளைகள் நல்ல நிலைக்கு வரவேண்டும் அல்லது செல்வந்தப் பிள்ளைகள் போல்

வரவேண்டும் என்று கனவு கண்டு பிரத்தியே வகுப்புகளுக்கு அனுப்புகிறார்கள். பிள்ளைக்காக கல்விக்கு கடன்பட்டு, கல்யாண செலவுக்கு கடன்பட்டு, சீதனத்துக்கு கடன்பட்டு என்று வாழ்க்கையில் கடன்பட்டு கஷ்டப்பட்டே அவர்களின் வாழ்வு முடிந்து போகின்றது.

ஆனால் இதில் மிகவும் பாதிப்புக்குள்ளாபவர்கள் வறுமைக்கோட்டுக்கு கீழுள்ளவர்களே. தங்களது நாளாந்த வருமானங்களால் ஒரு நாள் வாழ்க்கை பொருளாதாரத்தையே ஈடுசெய்ய முடியாதவர்களுக்கு பிரத்தியேக வகுப்பு என்பது வெறும் பகற்கனவுதான். இதில் அதிகமான மாணவர்கள் அடிபட்டுப் போகிறார்கள். அவர்களது கற்கும் திறன் வலுக்கட்டாயமாக இழுத்து மூடப்படுகின்றது. இதில் சில பெற்றோர் நுண்கடன் திட்டங்களில் கடன்பட்டு மற்றைய மாணவர்களைப் போல தங்கள் பிள்ளையும் படிக்க வேண்டும் என்று முனைகிறார்கள். ஆனால் நுண்கடன் பிசாசில் மாட்டுப்பட்டு தற்கொலைவரை போய்விடுகின்றார்கள். இதுபற்றி யாரும் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. இதனால் தியாகமும் அர்பணிப்பும் உள்ள ஆசிரியர்கள் கேலிக்குரியவர்களாக ஆக்கப்படுகிறார்கள்.

அதிகமான பிள்ளைகளின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளை வைத்தியராக வரவேண்டும், பொறியியலாளராக வரவேண்டும். கொழும்பில் போய் வேலைசெய்ய வேண்டும். அப்படியே வெளிநாடுகளுக்கு பறந்து போய் டொலரில், யூரோவில், பவுண்ட்சில் உழைக்க வேண்டும் என்ற கனவிலேயே மிதக்கிறார்கள். இது உலகமயமாக்கல் காட்டி விட்டிருக்கும் புதைகுழிப் பாதை. இதனால் கணிதமும், விஞ்ஞானமும், ஆங்கிலமும் கற்றால் மட்டும் போதுமானது என்று நினைக்கிறார்கள். இவற்றை மட்டும் படிக்கும் மாணவர்கள் தமிழ்மொழி, இலக்கியம், சமயம் படிப்பது தரக்குறைவென நினைக்கிறார்கள். இவர்களுக்கு மொழிப்பற்று, கலாசாரம், பண்பாடு பற்றி எதுவுமே தெரியாமல் போய்விடுகின்றது. பொது அறிவு என்பது சுட்டுப் போட்டாலும் வருவதில்லை என்ற பரிதாபத்துக்கு உரியவர்களாக நீங்கள் உள்ளீர்கள்.

இன்றைய கணனி உலகம் தொலைக்காட்சி, இணையத் தளங்கள், முகநூல்கள் என விரிந்து கிடக்கிறது. இவற்றை நல்லவற்றுக்கும் பாவிக்க முடியும். தீயவற்றுக்கும் பாவிக்க முடியும். ஆனால் அதிகமானவர்கள் தீயவற்றுக்கே பாவிக்கின்றார்கள். சினிமா இன்னோரு புறமாக உங்களைச் சீரழிக்கின்றது. இவற்றில் வரும் தீயசெயல்களும், ஆபாசக் காட்சிகளும் சமூகத்தை அழிவின் வேறொரு பரிமாணத்துக்கு கொண்டு செல்கின்றன.

இதனால் உங்களுக்கு முன்னால் உள்ள மிகப்பெரிய சவாலே வன்புணர்வில் இருந்து நீங்கள் எப்படித் தப்புவது என்பதுதான். குறிப்பாக பெண் பிள்ளைகளே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றீர்கள். நெருங்கிய உறவுடனே சில சமயங்களில் அருவருப்பான நிலை உருவாகியிருக்கிறது. இங்கெல்லாம் உங்கள் அம்மாக்கள் கோழிகள் குஞ்சுகளைக் காப்பது போல் பொத்திப பொத்தி பாதுகாத்தாலும் இன்றைய

சூழ்நிலையில் உங்களை பாடசாலைக்கு விடுவதற்கு கூட உங்கள் பெற்றோர்கள் பயந்து நடுங்கும் நிலை உருவாகியிருக்கிறது என்பதுதான் வேதனைக்குரிய விடையமாக இருக்கிறது. இது வித்தியா முதல் ஹரிஷ்ணவிவரை தொடர்கிறது.

2009இல் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் ஒரு மௌனயுத்தம் மாணவர்களாகிய உங்களை அழிக்கத் தொடங்கியிருக்கிறது. அதுதான் போதைப்பொருள் என்னும் அரக்கன். மாபா முதல், போதை மாத்திரைகள், கொக்கயின், ஹெரோயின், கஞ்சா என இதன் பெயர்ப்பட்டியல் மிகநீளம். அதுவும் கேரளக்கஞ்சா பெட்டிக் கடைகளிலேயே கிடைக்கின்ற அவல நிலை. ஆயிரம் கிலோ கடத்தப்படும்போது 2கிலோ பிடிபடுவதுதான் விந்தையிலும் விந்தை. மிகுதியான 998 கிலோவும் உங்களை நோக்கித்தான் நகர்த்தப்படுகின்றது. அதுவும் ஆண் மாணவர்களே அகப்படுகின்றார்கள். இதில் அகப்படும் உங்களால் உங்கள் பெற்றோரின் கல்விக் கனவுகளை நிறைவேற்ற முடியவில்லை. இதுமட்டுமல்லாமல் மதுபானமும், சிகரட்டும்கூட பக்கத்தில் வந்து உங்களை சுண்டி இழுக்கின்றன.

நீ திறமைச் சித்தி பெற்றால் உந்துருளி(மோட்டார் சயிக்கிள்) வாங்கித் தருகிறேன் என உங்களது பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் வெளிநாடுகளிலிருந்து அனுப்பும் பணத்தில் நீங்கள் ஒருசிலர் உந்துருளியை வாங்கிவிடுகிறீர்கள். பின்பு பெற்றோலுக்கு பணமின்றி வீட்டிலும், தெருவிலும், வெளியிலுமாக திருடர்களாக மாறும் கீழ்நிலைக்கு தள்ளப்படுகின்றீர்கள் என்பதனை உங்களுக்கு உந்துருளியை வாங்கித் தந்தவர்கள் உணருவதில்லை.

இது ஒருபுறமிருக்க உந்துருளியில் வலம் வருபவர்களைப் பார்த்து எனக்கும் அது வேண்டும் வாங்கித் தாருங்கள் அல்லது நான் படிக்கப் போகமாட்டேன் என்று பல மாணவர்கள் அடம்பிடிக்கின்றார்கள். அதனால் கடன்பட்டு கலங்கும் பெற்றோர்களை நீங்கள் அறிவீர்களா? இவற்றிலிருந்தெல்லாம் நீங்கள் விடுபட்டு படித்து உங்கள் வாழ்க்கையை வளமாக்குவது என்பது வெறும் பகற்கனவுதான். சவால் நிறைந்த உங்கள் உலகில் உங்கள் வகிபாகம் என்ன என்பதை நீங்கள் உணர்ந்து எதிர்நீச்சல் அடித்து முன்னேற வேண்டும். இல்லையேல் நீங்களும் உங்கள் வாழ்க்கையும் மூழ்கிப்போகும். ஆகவே மாணவர்களே உங்கள் நிலை அறிந்து செயற்படுங்கள். வாழ்க்கை வசப்படும்.

**உங்களுக்காக சில தகவல்கள்**

உலகில் தலைசிறந்த கல்வியில் பின்லாந்து நாடு முதல் இடத்தில் உள்ளது.அப்படி என்னதான் இருக்கிறது பின்லாந்து கல்வி முறையில் ?

- ☐ பின்லாந்தில் ஏழு வயதில்தான் ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்லத் தொடங்குகிறது. ஒன்றரை வயதில் விளையாட்டுப் படிப்பு.., இரண்டரை வயதில் நுழைவுக் கல்வி.., மூன்று வயதில் முன்பள்ளி., நான்கு வயதில் முதலாம் வகுப்பு என்ற சித்திரவதை அங்கே இல்லை...
- ☐ கருவறையில் இருந்து வெளியில் வந்ததுமே குடுகுடுவென ஓடிச்சென்று

பள்ளியில் உட்கார்ந்து கொள்ளும் எந்த அவசரமும் அவர்களுக்கு இல்லை... எல்லா நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தனது சுற்றத்தின் ஒவ்வோர் அசைவில் இருந்தும் ஒவ்வோர் ஒலியில் இருந்தும் கற்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப்பதும், இசை ஒலிப்பதும், பறவை பறப்பதும் குழந்தைக்குக் கல்விதான்...

- ☐ இவற்றில் இருந்து வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதால், அறிவு அதிவேக வளர்ச்சி அடையும் என எண்ணுவது மூடநம்பிக்கை...ஏழு வயதில் பள்ளிக்குச் செல்லும் பின்லாந்து குழந்தை, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட ஆண்டின் பாதி நாட்கள்தான் பள்ளிக்கூடம் செல்கிறது. மீதி நாட்கள் விடுமுறை...
- ☐ ஒவ்வொரு நாளும் பள்ளி இயங்கும் நேரமும் குறைவு தான். அந்த நேரத்திலும்கூட, படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் இசை, ஓவியம், விளையாட்டு, மற்றும் பிற கலைகளுக்கும் முக்கியத்துவம் உண்டு...முக்கியமாக, 13 வயது வரை தரம் பிரிக்கும் கலாசாரம் கிடையாது.. றிப்போர்ட்டைக் கொடுத்து பெற்றோரிடம் கையெழுத்து வாங்கிவரச் சொல்லும் வன்முறை கிடையாது...
- ☐ தங்கள் பிள்ளையின் கற்றல் திறன் குறித்து தெரிந்துகொள்ள வேண்டும் என பெற்றோர்கள் விரும்பினால், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்...கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் மன உளைச்சல்கள் மாணவர்களுக்கு இல்லை...
- ☐ சக மாணவர்களைப் போட்டியாளர்களாகக் கருதும் மனப்பாங்கும் இல்லை...இவர்களுக்கு வீட்டுப்பாடம் தரப்படுவது இல்லை...

ஆகவே கல்வியில் பின்லாந்து நாடு முதல் இடத்தில் உள்ளது.

**ஓ அன்பான பெற்றோர்களே! குழந்தைகள் வளர்ப்பில் நாம் கற்றுக் கொள்ளவேண்டியது அதிகம் இருக்கிறது...**

- ☐ முதலில், பிள்ளைகளுக்கு நல்ல சிந்தனைகளை ஏற்படுத்துங்கள்!...ஒரு குழந்தையைவிட நாம் உயர்ந்தவர் என்று நினைக்காதீர்கள்.
- ☐ பிள்ளைகள் எதாவது செய்தால் எப்போதும் குறை கூறுதல், அவர்கள் பாராட்டும்படி செய்தாலும் கண்டு கொள்ளாதிருத்தல் போன்ற செயல்களை பலர் செய்கிறார்கள் இதனால் பிள்ளைகளின் மன வளர்ச்சி குன்றும்.
- ☐ எந்தக் குழந்தையும் பின்னால் எப்படி ஆகுமென எவருமே கூற முடியாது. மூடன், அறிவாளியாகலாம்... பைத்தியம், தெளிந்த சித்தமுடையவனாகலாம்... ஆகவே பிள்ளைகளை ஒருகாலமும் தப்பாக மட்டுக்கட்டி அலட்சியம் செய்யக் கூடாது.
- ☐ குழந்தைகளுடன் ஒரு நாளில் சிறிது நேரமாவது பேசுங்கள், நல்லதைப் பேசுங்கள் கனிவுடன் பேசுங்கள். அவர்கள் குறைகளைப் பற்றி அதிக நேரம் பேசாதீர்கள், நிறைகளை பற்றிப் பேசுங்கள்.
- ☐ பிள்ளைகளுடன் யாரையும் ஒப்பிட்டு பேசாதீர்கள்,அவன் அவனே.. நீங்கள் நீங்களே.. நீங்களே முன்னுதாரணமாக இருங்கள்.
- ☐ பெண் குழந்தைகளுக்குநல்லதொடுகை, தீயதொடுகை "Good touch", "bad touch" எது என்பதை பெற்றோர்கள் சொல்லிக் கொடுங்கள்.
- ☐ மேலாடையின்றியோ,ஆடையே இன்றியோ குழந்தைகள் உங்களுக்கு குழந்தையாய்

தெரியலாம், எல்லோருக்கும் அப்படியே தெரியும் என்று எண்ணிவிடாதீர்கள்.

- ☐ குழந்தைகளை தனியே கடைக்கு அனுப்பும் போது கவனம் தேவை, நெடு நேரம் குழந்தை நிற்க வைக்கப்பட்டாலோ, பொருட்கள் மிகுதியாகவோ, இலவசமாகவோ வழங்கப்பட்டாலோ கவனம் தேவை.
- ☐ பள்ளிக்கு ஏதோ ஒரு வாகனத்தில் தனியாகவோ, பிற குழந்தைகளுடனோ அனுப்பினால், அந்த வாகன ஓட்டுனரின் முழு விவரமும் தெரிந்து கொள்ளுங்கள், அவர் வீட்டு முகவரி உட்பட.
- ☐ வாகன ஓட்டுனரின் நடத்தையிலும், பழக்க வழக்கத்திலும் ஐயமின்றி தெளிவுறுங்கள்!
- ☐ பெரும்பாலான வாகன ஓட்டுனர்கள், மூட்டைகளை போல் குழந்தைகளை அடைத்து, மரியாதையின்றி பேசுவதும், தொடக் கூடாத இடங்களை தொடுவதும், சில இடங்களில் நடக்கிறது.
- ☐ யார் அழைத்தால் போக வேண்டும், யார் கொடுத்தால் வாங்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு தெளிவுப்படுத்துங்கள்
- ☐ குழந்தைகள், வீட்டின் முகவரி, பெற்றோரின் தொலைப்பேசி எண்கள் அறிந்திருத்தல் நலம்.
- ☐ ஒரு கட்டத்திற்கு மேல், உங்கள் விருப்பங்களை குழந்தையின் மேல் திணிக்காதீர்கள்.
- ☐ வீட்டில் குழந்தைகள் இருக்கும் போது, வன்முறை, காதல், கொலை, களவுப் போன்றவை நிறைந்த திரைக்காட்சிக்களையோ, நிகழ்ச்சிகளையோ பார்க்காதீர்கள்!
- ☐ பெரியவர்கள், பெண்கள் எப்போதும் சீரியல்களில் மூழ்கி இருக்காமல், குழந்தைகளுக்கு பிடித்தாற்போலோ, அல்லது அவர்களுக்கு பொதுஅறிவு பெருகும் வகையிலான நிகழ்ச்சிகளை பார்ப்பது நலம்.
- ☐ குழந்தைகளிடம் தினம் நேரம் செலவிடுங்கள், ஒரு தோழமையுடன் அவர்கள் சொல்வதை காது கொடுத்து கேளுங்கள்.
- ☐ தவறுகளை தன்மையுடன் திருத்துங்கள், தண்டிக்க நினைக்காதீர்கள்!
- ☐ ஒருமுறை நீர் ஊற்றியவுடன், விதை மரமாகிவிடாது, நீங்கள் ஒருமுறை சொன்னவுடன் குழந்தைகள் உங்கள் விருப்பபடி மாறிவிட மாட்டார்கள். உங்களுக்கு பொறுமை அவசியம்.
- ☐ பள்ளி விட்டு வரும் குழந்தைகளை அன்புடன் அரவணைத்து, வேண்டியது செய்ய அம்மாவோ, பெரியவர்களோ வீட்டில் இருத்தல் வேண்டும்!
- ☐ குழந்தைகளின் எதிரில் புறம் பேசாதீர்கள். பின்னாளில் அவர்கள் உங்களை பற்றி பேசலாம்.
- ☐ உங்கள் பெற்றோரை நடத்தும் விதம், உங்கள் பிள்ளைகளால் கவனிக்க படுகிறது. நாளை உங்களுக்கும் அதுவே நடக்கலாம்!
- ☐ படிப்பு என்பது அடிப்படை, அதையும் தாண்டி குழந்தைகளுக்கு உள்ள மற்ற ஆர்வத்தையும் ஊக்குவியுங்கள்.
- ☐ ஓடி ஆடி விளையாடுவது குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு அவசியம். விளையாட்டிற்கு தடை போடாதீர்கள்.
- ☐ குழந்தைகள் கேள்வி கேட்கட்டும், அவர்களின் வயதுக்கேற்ப புரியும்படி பதில்

சொல்லுங்கள்! பொது அறிவு கேள்விகள் கேட்கப்படும் போது தெரிந்தால் சொல்லுங்கள், தெரியாவிட்டால் பிறகு சொல்லுகிறேன் என்று சொல்லுங்கள். சொன்னபடி கேள்விக்கான பதிலை அறிந்து கொண்டு, மறக்காமல் அவர்களிடம் சொல்வது அவசியம்.

- ☐ ஒருபோதும் "ச்சீ வாயை மூடு" "தொணதொண என்று கேள்வி கேட்காதே" என்று அவர்களிடம் எரிச்சல் காட்டி, அவர்களின் ஆர்வத்தை குழி தோண்டி புதைத்து விடாதீர்கள்!
- ☐ பசி என்று குழந்தை சொன்னால், உடனே உணவு கொடுங்கள், அரட்டையிலோ, சோம்பலிலோ, வேறு வேலையிலோ குழந்தையின் குரலை அலட்சியப்படுத்தாதீர்கள்!
- ☐ ஒரு போதும், உங்கள் குழந்தைகளின் எதிரே சண்டை இடாதீர்கள்!
- ☐ ஒவ்வொரு குழந்தையும் ஒரு வரம், அவர்கள், ஒருபோதும் உங்கள் கோபதாபங்களின் வடிகால்கள் அல்ல!
- ☐ ஆபாச உடைகளை வாங்கிக் கொடுக்காதீர்கள். சிலவகை ஆடைகள் சிலருக்கு பொருந்துவது இல்லை. அதுவே ஆபாசமாகக் காட்சியளிக்கின்று.

இவற்றை ஒரு பெற்றோராவது உள்வாங்கிக் கொண்டு தங்கள் பிள்ளைகளை வளர்த்தால் அது எமது சமூகத்திற்கு வெற்றிதான்.

**கலாபூசணம் மேழிக்குமரன்**

**பொறாமை, ஆணவம் ஆகியவற்றைத் தூக்கி எறிந்து விட்டு, உன் முழுவலிமையுடனும், அளவற்ற ஆர்வத்துடனும், தொழிற்களத்தில் இறங்கினால் இறைவன் நல்வழி காட்டுவான்.**

**தெளிந்த உண்மையும், கருத்துத் தூய்மையும் மனிதனுக்கு உறுதியான வெற்றியைத் தரும்.**

**ஒவ்வொரு உயிரிலும் தெய்வத்தன்மை இருக்கிறது, உள்ளேயும், வெளியேயும் இருக்கும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, உள்ளத்தில் குடி கொண்டுள்ள தெய்வத்தன்மையை மலரச் செய்வது தான் ஒருவருக்கு லட்சியமாக இருக்கவேண்டும்.**

**அனைத்தையும் பொறுப்பவளாக இருக்கும் பூமிதேவியைப் போன்று, நீங்களும் பொறுமையுடன் இருந்தால் உலகமே உங்கள் காலடியில் அமரும்.**

**நம்பிக்கை.. உன்னிடம் நம்பிக்கை கடவுளிடத்தில் நம்பிக்கை... இதுவே வெற்றி பெறுவதின் ரகசியம்.**

**துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் தெய்வீக இயல்பு நம்மிடம் வெளிப்படும்**

# இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலத்தின் கல்விப்பணியில் நல்லாசிரியர்கள்

| முழுப்பெயர் | தகைமை | பதவி | விலாசம் | எம்மோடு இணைவு |
|---|---|---|---|---|
| திரு.இ.கணேசானந்தன் | SLPS-2 | அதிபர் | பன்னாலை | 2017 |
| திரு.செ.அகிலன் | B.A | பிரதிஅதிபர் | அளவெட்டி | 2014 |
| திருமதி.க.பத்மராஜா | Ta.Tr | ஆசிரியர் | இளவாலை | 2009 |
| திருமதி.யோ.ஸ்ராலின் | B.F.A. | ஆசிரியர் | இளவாலை | 2009 |
| திருமதி.க.பரமேஸ்வரன் | Phy.Ed.Tr | ஆசிரியர் | சித்திரமேழி | 2009 |
| திருமதி.ம.சற்குணராசா | B.F.A.-Tr | ஆசிரியர் | இளவாலை | 2011 |
| திரு. ம.சிவமோகன் | B.Ed. | ஆசிரியர் | அளவெட்டி | 2012 |
| திரு. வி.நற்குணசிங்கம் | PGDE | ஆசிரியர் | தெல்லிப்பளை | 2012 |
| திருமதி.இ.சுபாஸ்கரன் | Pri-Tr | ஆசிரியர் | வசந்தபுரம் | 2013 |
| திரு.இ.இதயராஸ் | M.A | ஆசிரியர் | சாந்தை | 2013 |
| செல்வி.கௌ.சிவகுரு | Ta-Tr | ஆசிரியர் | மாரீசன்கூடல் | 2014 |
| திருமதி.அ.மணிசேகரன் | P.G.D.E | ஆசிரியர் | அளவெட்டி | 2014 |
| திருமதி.அ.ஸ்ரீ.ஹரிகரன் | Chri-Tr | ஆசிரியர் | பெரியவிளான் | 2014 |
| திருமதி.க.கிஷோன் | Sc.Tr | ஆசிரியர் | சித்திரமேழி | 2014 |
| திருமதி.யூ.பீற்றர் ஜஸ்ரின் | Pri.Tr | ஆசிரியர் | இளவாலை | 2015 |
| திரு.சி.வரதராஜா | Co.Tr | ஆசிரியர் | அளவெட்டி | 2016 |
| திரு.க.சிவராசா | M.A | ஆசிரியர் | குப்பிளான் | 2016 |
| திரு.சா.கௌதமன் | So.Tr | ஆசிரியர் | மல்லாகம் | 2016 |
| திரு.பா.எட்வேட் சுஜீபன் | Dra-Dip.in teach | ஆசிரியர் | பண்டத்தரிப்பு | 2017 |
| திரு. சு.ஜஜீவான் | Sc.Dip.in teach | ஆசிரியர் | மாவிட்டபுரம் | 2017 |
| செல்வி.ந.யாழினி | B.A | ஆசிரியர் | உரும்பிராய் | 2017 |
| திரு.ஜே.எல்.மரியதாஸ் | Ma.Tr | ஆசிரியர் | சுன்னாகம் | 2017 |
| திருமதி.ஜ.ஜெயபாலன் | Pri.Tr | ஆசிரியர் | இளவாலை | 2018 |
| திருமதி.ம.அ.தர்சன் | B.F.A. | ஆசிரியர் | மாதகல் | 2018 |
| திருமதி.சி.மாசில்லாமணி | B.A | ஆசிரியர் | கருகம்பனை | 2018 |
| திரு.இ.ரவீஸ்வரன் | M.A | ஆசிரியர் | அளவெட்டி | 2018 |
| திருமதி.சி.கஜேந்திரன் | B.F.A. | ஆசிரியர் | பன்னாலை | 2018 |

# யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
## பரிசுப்பட்டியல் - 2018

**ஒன்றிணைந்த பாடங்களுக்கான பரிசுகள்**

**தரம் 1**

| | | |
|---|---|---|
| 01 | ச.சுகர்ணன் | 1ம் இடம் |
| 02 | அ.ஸதுர்சன் | 2ம் இடம் |
| 03 | சி.ரஷ்மிகா | 3ம் இடம் |

**தரம் 2**

| | | |
|---|---|---|
| 04 | சி.அபிஷன் | 1ம் இடம் |
| 05 | த.தருஞ்சன் | 2ம் இடம் |
| 06 | அ.ஜெறோம் | 3ம் இடம் |

**தரம் 3**

| | | |
|---|---|---|
| 07 | ச.திலோயி | 1ம் இடம் |
| 08 | தி.யனிஸ்ரன் | 2ம் இடம் |
| 09 | தே.கிந்துஷா | 3ம் இடம் |

**தரம் 4**

| | | |
|---|---|---|
| 10 | செ.கீர்த்திகா | 1ம் இடம் |
| 11 | ம.மதுசன் | 2ம் இடம் |
| 12 | சி.நிவேதன் | 3ம் இடம் |

**தரம் 5**

| | | |
|---|---|---|
| 13 | சு.லதுஜா | 1ம் இடம் |
| 14 | த.நிதுர்சி | 2ம் இடம் |
| 15 | ச.கேசியா | 3ம் இடம் |

**பாடங்களுக்கான பரிசில்கள்**

**தரம் 6**

| | | |
|---|---|---|
| 16 | ச.சங்கவி | தமிழ், ஆங்கிலம், வரலாறு, நடனம், செயல்முறை தொழில்நுட்பம் |
| 17 | ச.ராஜினி | சைவசமயம், புவியியல், குடியுரிமை, சுகாதாரமும்உடற்கல்வியும், நாடகமும் அரங்கியலும் |
| 18 | சு.சுஜிந் | விஞ்ஞானம் |
| 19 | இ.விமோகஷன் | கணிதம், சித்திரம் |
| 20 | அ.தமிழ்ச்செல்வி | கத்தோலிக்கதிருமறை |

**தரம் 7**

| | | |
|---|---|---|
| 21 | இ.தனுஜா | தமிழ்,கணிதம், ஆங்கிலம், வரலாறு, விஞ்ஞானம், சைவசமயம்,குடியுரிமை,செயல்முறை தொழில்நுட்பம், நடனம்,புவியியல், சுகாதாரமும்உடற்கல்வியும், சிங்களம் |
| 22 | பா.ஜதுசன் | நாடகமும் அரங்கியலும் |
| 23 | சு.கிருத்திகா | சங்கீதம் |
| 24 | சி.சுவிசேந் | சித்திரம் |
| 25 | ப.ஜஸ்மினா | கத்தோலிக்கதிருமறை |

**தரம் 8**

| | | |
|---|---|---|
| 26 | இ.நிஜாந் | சைவசமயம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், புவியியல், சுகாதாரம், தமிழ், வரலாறு, செயல்முறைதொழில்நுட்பம், நாடகமும்அரங்கியலும், சுகாதாரமும்உடற்கல்வியும் |
| 27 | அ.வானுப்பிரியா | கத்தோலிக்கதிருமறை, நடனம் |
| 28 | சு.குகாஜினி | குடியுரிமை |
| 29 | தே.மதியழகன் | சித்திரம் |

**தரம் 9**

| | | |
|---|---|---|
| 30 | ஜெ.கயானுசன் | சைவசமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, புவியியல், செயல்முறைதொழில்நுட்பம், சுகாதாரமும்உடற்கல்வியும் |
| 31 | அ.டிலோஜனா | கத்தோலிக்கதிருமறை, சங்கீதம் |
| 32 | ச.றக்ஷனா | விஞ்ஞானம், நாடகமும்அரங்கியலும், குடியுரிமை |
| 33 | செ.ரிலெக்சனா | நடனம் |
| 34 | ப.நிதுசன் | சித்திரம் |

**தரம் 10**

| | | |
|---|---|---|
| 35 | ரா.நிஷாந்தினி | தமிழ், விஞ்ஞானம், வரலாறு, நாடகமும் அரங்கியலும், புவியியல்,சைவசமயம் |
| 36 | ச.தமிழினி | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| 37 | கு.டிலக்சிகா | சைவசமயம், சுகாதாரமும்உடற்கல்வியும் |
| 38 | ம.சிலெக்சன் | கணிதம், கத்தோலிக்கதிருமறை, |
| 39 | ச.பவதாரணி | ஆங்கிலம், வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும் |
| 40 | தே.தர்சினி | சங்கீதம், மனைப்பொருளியல் |
| 41 | அ.டயானி | நடனம் |
| 42 | ச.துளசிகா | குடியுரிமை, |
| 43 | ச.கேமிலன் | நாடகமும்அரங்கியலும் |
| 44 | சி.நிதர்சன் | சித்திரம் |

**தரம் 11**

| | | |
|---|---|---|
| 45 | அ.வேணுசா | தமிழ், விஞ்ஞானம், வரலாறு, சைவநெறி, குடியுரிமை |
| 46 | ம.சிலெக்சனா | கத்தோலிக்கதிருமறை, வணிகக்கல்வி, சுகாதாரமும் உடற்கல்வியும், |
| 47 | ஜெ.தயானுசன் | கணிதம், ஆங்கிலம் , தகவல்தொடர்பாடல்தொழில்நுட்பம் |
| 48 | த.டிலெக்ஷன் | சித்திரம், மனைப்பொருளியல் |
| 49 | ந.ருபிதா | சங்கீதம் |
| 50 | ர.சரணியா | நடனம் |
| 51 | மோ.கீர்த்தனா | நாடகமும்அரங்கியலும் |

**தரம் 12**

| | | |
|---|---|---|
| 52 | ஜெ.அபினா | தமிழ், வரலாறு, நடனம் |
| 53 | ச.சஞ்சிதா | இந்துநாகரிகம், பொருளியல் |
| 54 | கு.வேணுகா | அரசியல், நாடகமும்அரங்கியலும் |
| 55 | ச.சுகந்தன் | மனைப்பொருளியல் |
| 56 | உ.கோகுலன் | சித்திரம், புவியியல் |
| 57 | க.ரஜனிகா | சங்கீதம் |

**தரம் 13**

| | | |
|---|---|---|
| 58 | அ.சஞ்சீபன் | தமிழ், நாடகமும்அரங்கியலும், வரலாறு |
| 59 | ம.கேனுஜா | இந்துநாகரீகம் |
| 60 | ப.நெகோமி | கிறிஸ்தவநாகரீகம் |
| 61 | யோ.உசாந்தினி | மனைப்பொருளியல் |
| 62 | சி.பவதர்ஜினி | நடனம் |

**சிறப்பு பரிசல்கள்**

| | | |
|---|---|---|
| 63 | சிறந்த சைவசமயி | ஜெ.கயானுஷன் |
| 64 | சிறந்த கிறிஸ்தவசமயி | ம.சிலெக்சனா |
| 58 | சிறந்த ஓவியர் | உ.கோகுலன் |
| 59 | சிறந்த பாடகர் | தே.தர்சிகா |
| 60 | சிறந்த நர்த்தகி | இ.தஸ்மி |
| 61 | சிறந்த நடிகர் | மோ.கீர்த்தனா |
| 62 | சிறந்த பேச்சாளர் | ஜெ.அபினா |
| 63 | சிறந்த சிறுகதை எழுத்தாளர் | ச.வேணுகா |
| 64 | சிறந்த கட்டுரையாளர் | இ.பெனாயா |
| 65 | சிறந்த கவிஞர் | ச.சஞ்சிதா |
| 66 | சிறந்த ஒத்துழைப்பாளர் | சி.சுமணன் |
| 67 | சிறந்த ஒத்துழைப்பாளர் | ம.ஜராஜ் |
| 68 | சிறந்த ஒத்துழைப்பாளர் | சி.திவாகரன் |

**மெய்வல்லுநர் வீரர்கள்**

| | | |
|---|---|---|
| 69 | 20 வயதின்கீழ் ஆண் | சு.தசிந்தன் |
| 70 | 18 வயதின்கீழ் பெண் | வ.கஜன்சிகா |

**கரப்பந்தாட்ட வீரர்கள்**

| | | |
|---|---|---|
| 71 | 18 வயதின்கீழ் ஆண் | ச.அனோசன் |

**கரப்பந்தாட்ட வீராங்கனைகள்**

| | | |
|---|---|---|
| 72 | 16 வயதின்கீழ் பெண் | தே.தர்சினி |
| 73 | 18 வயதின்கீழ் பெண் | சி.வின்சிகா |
| 74 | 19 வயதின்கீழ் பெண் | சி.பவதாரணி |

**அங்கர் நிறுவனத்தால் வடமாகாண ரீதியாக நடாத்தப்பட்ட** "Anchor Students with tallent" **போட்டியில் வெற்றி பெற்றவர்**

| | | |
|---|---|---|
| 75 | இ.தஸ்மி | 3ம் இடம் |

**ஒத்துழைப்பு வழங்கியவர்கள்**

76 ம.கேனுயன்
77 இ.பெனாயா
78 தே.ரோஷாந்தன்
79 சு.சுவேதிகன்
80 உ.பிரியங்கா
81 சி.பவதாரணி
82 இ.ஜெனுசா

**தேசியமட்டம் சென்ற கரப்பந்தாட்ட அணி - 16 வயதின் கீழ் பெண்**
(மாகாணமட்டம் 2ம் இடம்) (DSI சுற்றுப்போட்டி மாவட்டம் முதலாமிடம்)

83 தே.தர்சினி
84 ச.பவதாரணி
85 கு.டிலக்சிகா
86 சு.தர்சிகா
87 ச.துளசிகா
88 ரா.நிஷாந்தினி
89 சிறீ.அபிராமி
90 சி.விதூசனா

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2018 சித்தி**

| | | |
|---|---|---|
| 91 | சு.லதுஜா | 184 புள்ளிகள் |

**தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| 92 | ச.கேசியா | 158 |
| 93 | த.நிதுர்சி | 144 |
| 94 | ச.துவிக்சன் | 135 |
| 95 | அ.சிபோறா | 102 |

**தரம் 9 மாகாண மட்ட பரீட்சை 2017 இல் சிறப்புப் பெறுபேறு**

| | | |
|---|---|---|
| 96 | சி.வானுப்பரியா | 4A, 4B, C,S |

**க.பொ.த.(சாதாரணம்) 2017 பரீட்சையில் விசேட சித்தி**

| | | |
|---|---|---|
| 97 | சி.வின்சிகா | 5A, B, 3C |

**க.பொ.த.(சாதாரணம்) 2017 பரீட்சையில் சித்தி பெற்றோர்**

98 ச.சஞ்சீபன்
99 ச.அ்னோசன்
100 க.புவிகரன்
101 சு.சுவேதிகன்
102 றெ.றெஜினோல்ட்
103 அ.மதுசன்
104 ச.திவ்யா
105 சி.பவதாரணி
106 வ.கஜன்சிகா
107 பா.நிரஞ்சனா
108 உ.பிரியங்கா
109 இ.ஜெனுசா

**க.பொ.த.(உ/த) 2017 பரீட்சையில் சிறந்த பெறுபேறு**

| | | |
|---|---|---|
| 110 | தே.கபில்ஜா | B, C, S |

**தேசிய மட்ட சுகவாழ்க்கைப் பேரவையின் கட்டுரைப்போட்டி**

**மத்திய பிரிவு**

| | | |
|---|---|---|
| 111 | ச.துளசிகா | விருது |
| 112 | ச.டிலக்சிகா | சிறப்பு |
| 113 | வ.ரம்மியா | சிறப்பு |
| 114 | சு.தர்சிகா | சிறப்பு |
| 115 | மோ.கீர்த்தனா | சாதாரணம் |

**கீழ்ப்பிரிவு**

| | | |
|---|---|---|
| 116 | சு.சுஜிந் | சாதாரணம் |
| 117 | இ.தனுஜா | சாதாரணம் |

**மேற்பிரிவு**

118 உ.பிரியங்கா அதிவிசேட சான்றிதழ்

119 பா.நிரஞ்சனா சிறப்பு

**தேசிய ரீதியில் நடைபெற்ற கட்டுரைப்போட்டி சுகாதார விருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் நடைபெற்ற (தொற்றாத நோய்கள் தொடர்பானது)**

**இடைநிலைப்பிரிவு**

120 சி.வானுப்பரியா 12ம் இடம்

**சிரேஷ்ட பிரிவு**

121 சி.வின்சிகா 4ம் இடம்

**சிறந்த சேவையாளர்**

122 ச.சகிலா

123 இ.பர்ணபா

**மெய்யவன் விருது**

124 தே.ரோஷாந்தன்

**மெய்யவள் விருது**

125 சி.பவதர்ஜினி

**கரப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளர்**

126 பொ.பிரக்ஷன் (Srilanka University Sport Award)

## ஆசிரியர் கௌரவிப்பு

127 திரு.பா.சுஜீபன் (மாகாணமட்ட "Anchor Students with tallent" தொழில்நுட்ப போட்டியில் மூன்றாமிடம் கிடைக்கச் செய்தமை)

128 திருமதி.க.பரமேஸ்வரன் 16 வயதின்கீழ் பெண் 2ம் இடம் (தேசிய ரீதியில் நடைபெற்ற சுகாதாரம் தொடர்பான கட்டுரைப் போட்டியில் 4, 12ம் இடம், தேசிய ரீதியில் சுகவாழ்வுப் பேரவை கட்டுரைப்போட்டி விருது, சான்றிதழ்கள் கிடைக்கச் செய்தமை)

129 திரு.சா.கௌதமன் (தேசியமட்டம் மாணவர் படையணி 10ம் இடம்)

# ஞாபகார்த்தப் பரிசில்கள் - 2018

| இல வழங்குபவர் | நினைவுக்குரியவர் | துறை |
|---|---|---|
| 01. தர்மசக்தி நிதியம் | ஏழூர் இராசரத்தினம் | தமிழ்மொழி |
| 02. தர்மசக்தி நிதியம் | திருமதி சின்னப்பிள்ளை ஏழூர்இராசரத்தினம் | சமயம் |
| 03. தர்மசக்திநிதியம் | திரு சண்முகம் தர்மதாசன் | ஆங்கிலம் |
| 04. சேதுப்பிள்ளைகுடும்பம் | திருமதி. க. சேதுப்பிள்ளை | கபொ.த(உ..த) சிறந்தபெறுபேறு |
| 05. Prof க.பாலசுப்பிரமணியம் | திரு.திருமதி கந்தையா | கணிதம் |
| 06. Dr. த. பேரானந்தராஜா | திரு.அ.தம்பிப்பிள்ளை | விளையாட்டு |
| 07. கலாபூசணம் சைவப்புலவர் க.செல்லத்துரை | திருமதி.செ.சிவகாமசுந்தரி | மெய்யவன், மெய்யவள் |
| 08. திருமதி.யூட்டொலிஹெக்டர் | திருமதி சு.கு இராஜநாயகம் | ஆங்கிலம் |
| 09. திருமதி சி தர்மபாலா | திரு.திருமதி.திருச்செல்வம் புவனேஸ்வரி | ஆங்கிலம் |
| 10. திரு ச சிவானந்தராசா | திரு.க.சங்கரப்பிள்ளை | சிறந்தசேவையாளர் விருது |
| 11. திருமதி செல்லம்மா உலகநாதன்குடும்பம் | திரு.திருமதி.செ.உலகநாதன் | க.பொ.த(சா.த) சித்தி |
| 12. DR. சி மோகன் | திரு மு சிவராசரத்தினம் | புலமைப்பரிசில் |
| 13. திரு.ச. சங்கரப்பிள்ளை | திரு திருமதி சங்கரப்பிள்ளை | ஆங்கிலம் |
| 14. திரு.பா தர்மபாலா | திரு செ பாலசுப்பிரமணியம் | சிறந்த மாணவன் |
| | திருமதி.பா.கமலாம்பிகை | சிறந்த மாணவன் |
| 15. திருமதி சி பிரசன்ஜா | திரு த கோபிநாத் | ஆங்கிலம் |
| 16. திரு நா அனந்தன் | திருமதி சி தங்கமுத்து | சிறந்த மாணவன் |
| 17. திரு.வ.க.துரைராஜா | திரு.வ. கந்தையா | க.பொ.த(சா/த) |
| | திருமதி க.சீனிப்பிள்ளை | க.பொ.த(சா/த) |
| 18. திரு அ பேரம்பலம் | திரு.திருமதி.அருணாசலம் சின்னாச்சி | விஞ்ஞானம் |
| 19. Eng.மு.துரைசிங்கம் | திரு.பூ.முத்துக்குமாரு | |
| | திருமதி.மு.பொன்னம்மா | சிறந்தபயிற்றுனர் |
| 20. Dr.சிவஞானவேல் சாரதாதேவி | திரு.க.சிவராஜா | சிறந்த மாணவன் |

# பரிசளிப்பு விழா
## நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 01. தர்மசக்திநிதியம் | 40000 | |
| 02. திரு.சி.கௌரிபாலன் | 30000 | (புத்தக வெளியீடு) |
| 03 திரு.உ.சந்திரகுமார் | 10000 | |
| 04. திரு.க.சுதாகரன் | 5000 | |
| 05. திருமதி.சி.பிரசன்யா | 5000 | |
| 06. திரு.ந.அனந்தன் | 3000 | |
| 07. எந்திரி மு.துரைசிங்கம் | 3000 | |
| 08. Prof க.பாலசுப்பிரமணியம் | 2500 | |
| 09. சைவப்புலவர் சு.செல்லத்துரை | 2000 | |
| 10. திரு.வ.க.துரைராஜா | 2000 | |
| 11. திரு.பா.தர்மபாலா | 2000 | |
| 12. Dr.சி.மோகன் | 1000 | |
| 13. திரு.க.தர்மராஜா | 1000 | |
| 14. திருமதி.ச.திருச்செல்வி | 1000 | |
| 15. திருமதி.ச.நகநந்தினி | 1000 | |
| 16. திரு.ச.சிவானந்தராஜா | 1000 | |
| 17. பிரம்மஸ்ரீ பாலச்சந்திரக்குருக்கள் | 1000 | |
| 18. திரு.த.நாகநாதன் | 1000 | |
| 19. திரு.பொ.சிவகுருநாதன் | 1000 | |
| 20. திரு.ச.பிரபாகரன் | 500 | |
| 21. திரு.ப.தம்பிரத்தினம் | 500 | |
| 22. திருமதி தி..ஆன்சோபியா | 500 | |
| 23. திரு.இ.நாகலிங்கம் | 200 | |

## நன்றி









